
தர்மசக்கரம்

















ருத்ரோத்காரி ௵ பங்குனி ௴ சக்கரம் 33 ஆரம் 3

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை-639 115 திருச்சி ஜில்லா

ஆண்டு சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

தர்ம சக்கரம் சந்தா யாருக்கு எந்த மாதத்தோடு முடிகிறதோ அந்த மாதம் அந்தந்த சந்தாதாரர்களுக்குச் சந்தாவைப் புதுப்பிக்கும்படி வேண்டுகோள் ஒன்று ஒட்டி அனுப்பப்படுகிறது. சந்தாதாரர்கள் உடனுக்குடன் புதுப்பித்தால்தான் அவர்களுக்கு இதழ்கள் தொடர்ச்சி விடாமல் அனுப்ப முடியும். காலதாமதம் ஆகிற அளவு இடையில் இரண்டொரு இதழ்கள் இல்லாது போகக்கூடும். இதழ்கள் அந்தந்த மாதத்தோடு தீர்ந்துபோகிற மாதிரிதான் கணக்கிட்டு அச்சாக்கப்படுகின்றன. ஆகவே சந்தாதாரர்கள் உடனுக்குடன் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம். புதிய சந்தாதாரர்களையும் அறிமுகம் பண்ணி அவர்களையும் ஆத்மீக வாழ்க்கையில் ஈடுபடச் செய்யக் கோருகிறோம்.

DHARMA CHAKRAM

Statement about ownership and other particulars about Newspaper 'Dharma Chakram' to be published in the first issue every year after the last day of February.

FROM IV

(See Rule 8)

1. Place of Fublication	Tirupparaitturai
2. Periodicity of the Publication:	Monthly
3. Printer's name:	Swami Sankarananda
Nationality:	Indian
Address:	Tapovanam Printing School, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
4. Publisher's name:	Swami Sankarananda
Nationality:	Indian
Address:	Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
5. Editor's name:	Swami Nithyananda
Nationality:	Indian
Address:	Sri Ramakrishna Tapovanam, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital:	Sri Ramakriihna Tapovanam, Tirupparaitturai-639 115, Tiruchi Dt.

I, Sankarananda, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Sankarananda

Date 11—3—84. Signature of the publisher.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 33	ருத்ரோத்காரி ஹூ பங்குனி மீ	ஆரம் 3

பொருளடக்கம்

வருட சந்தா:	உள்நாடு ரூ.	15-00	வெளிநாடு ரூ.	45-00
தனி இதழ்	,, ரூ.	1-50	,, ரூ.	4-00

அந்தர்யோக விவரங்கள்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 18—3—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம்
நேரம்: காலே 10-00 மணிமுதல் மாலே 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்
உணவுவசதி: பகல் உணவுக்கு ரூ. 2-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—தூத்துக்குடியில் 18—3—84 ஞாயிறு

இடம்: சச்சிதானந்தசபை
நேரம்: காலே 10-00 மணிமுதல் 12-30 மணிவரை
மாலே 5-00 மணிமுதல் ஆண்டுவிழா
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

திருச்சி ஜில்லா—கரூரில் 25—3—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பசுபதிபாளேயம் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம்
நேரம்: காலே 10-00 மணி முதல் மாலே 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவுக்கு ரூ. 2-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

[தொடர்ச்சி பின்பக்கம் பார்க்க]

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

மதுரை ஜில்லா—கம்பத்தில் 25—3—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ முக்தி விநாயகர் பள்ளி ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி போதானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஸ்ரீ வைகுண்டத்தில் 25—3—84 ஞாயிறு

இடம்: வடக்கு மாடவீதி விஸ்வஹிந்து பரிஷத்தின் ஹிந்து வித்யாலயம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-50 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

வடஆற்காடு ஜில்லா—வேலூரில் 1—4—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்ரமம் பாலாற்றங்கரை (பழைய பாலம் அருகில்)
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 6-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஸ்பிக்நகரில் (தூத்துக்குடி) 1—4—84 ஞாயிறு

இடம்: ஸ்பிக்நகரிலுள்ள சித்தி விநாயகர் ஆலயம்
நேரம்: காலை 10-00மணிமுதல் மாலை 4-00 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்

மதுரை ஜில்லா—காமயகவுண்டன்பட்டியில் 6—4—84 வெள்ளி

இடம்: கஸ்தூரிபாய் நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

கோவை ஜில்லா—பொள்ளாச்சியில் 13—4—84 வெள்ளிக்கிழமை

இடம்: மகாத்மா காந்தி மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி துருவானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 15—4—84 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: பகல் உணவுக்கு ரூ. 2-00ம், மாலைச் சிற்றுண்டிக்கு 1-50ம் நேரில் செலுத்தலாம்.

அந்தர்யோக நடைமுறையில் நாமஜபம், தியானம், உபந்யாசம், மௌனம், ஸத்ஸம்பாஷணை முதலியவை அடங்கும். உபந்யாசங்கள் யோகம், பக்தி, ஞானம் முதலியவைகளைப்பற்றி நடைபெறும். ஸத்ஸம்பாஷணையில் அன்பர்கள் தங்கள் சந்தேகங்களை நீக்கிக்கொள்ளலாம். விருப்பமுள்ள அன்பர்களும், தாய்மார்களும் அந்தர்யோகங்களில் கலந்துகொள்ளலாம். ஆனால் கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், பன்னிரண்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 33	ருத்ரோத்காரி ௵ பங்குனி ௴	ஆரம் 3

பிரார்த்தனை

क्व विक्षेपः क्व चैकाग्र्यं क्व निर्बोधः क्व मूढता ।
क्व हर्षः क्व विषादो वा सर्वदा निष्क्रियस्य मे ॥

— अष्टावक्रसंहिता

க்வ விக்ஷேப: க்வ சைகாக்ரயம் க்வ நிர்போத: க்வ மூடதா ।
க்வ ஹர்ஷ: க்வ விஷாதோ வா ஸர்வதா நிஷ்க்ரியஸ்ய மே ॥

— *அஷ்டாவக்ரஸம்ஹிதா*

மாறுது சொருபத்தில் இருக்கும் எனக்கு மனத்தடுமாற்றம் எங்கே? மன ஒடுக்கம் எங்கே? சோம்பல் எங்கே? மயக்கம் எங்கே? இன்பம் எங்கே? துன்பம் எங்கே?

இன்(று) எனக்(கு) அருளி இருள்கடிந்(து) உள்ளத்(து)
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீஅலால் பிறிதுமற்(று) இன்மை
சென்றுசென்(று) அணுவாய்த் தேய்ந்துதேய்ந்(து) ஒன்றும்
திருப்பெருந் துறைஉறை சிவனே
ஒன்று(ம்) நீஅல்லை அன்றிஒன்(று) இல்லை
யார்உன்னை அறியகிற் பாரே.

— *திருவாசகம்*

அருள் விருந்து

பேச்சிலும் மிக்கது செயல்.

நல்வாழ்வை வழங்குதற்கு நிகரான கொடை இல்லை.

அழகின் மிக்கது அமைதி. வலிவின் மிக்கது பொறை.

உண்மைக்கு ஒவ்வாதது ஒருபொழுதும் தலையெடுக்காது.

மக்களுக்கிடையில் ஒற்றுமையை வளர்ப்பது பிரார்த்தனை.

கலையில் பண்பாடடைவது நல்லொழுக்கத்தின் விளைவாம்.

ஒழுக்கத்துக்கு நிகரான பாதுகாப்பு எவ்வுலகிலும் இல்லை.

பகுத்தறிவுக் கொவ்வாத ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளலாகாது.

துன்பத்தைப்பற்றி எண்ணுவதன் வாயிலாக அது அதிகரிக்கிறது.

துன்புறுவார் துயரத்தைத் துடைப்பது கடவுள் வழிபாட்டுக்கு நிகர்.

ஆசையே பல வடிவெடுத்து மனிதனைப் பந்தத்துக்கு ஆளாக்குகிறது.

பிரதிபலனை எதிர்பாராது பிறருக்குச் செய்யும் சேவை யக்ஞம் ஆகிறது.

வெட்டவெளியில் மனதைச் செலுத்துவது பரம்பொருள் வணக்கத்துக்கு நிகர்.

அடக்கத்தில் ஊறியிருப்பவன் ஆத்ம ஞானத்துக்குத் தகுதி உடையவனாகிறான்.

வினையின் விளைவைச் சரியாக எண்ணிப் பார்ப்பவனுக்கு வாழ்வில் தோல்வி இல்லை.

இன்பத்தை நாடுவது எளிது. ஆனால் ஆத்ம பரிபாகத்தின் பொருட்டு அடக்கம் பழகுதல் அரிது.

மனிதன் படும் துயரங்கள் அனைத்துக்கும் அவன் படைத்துள்ள அஞ்ஞானமே காரணமாகிறது.

பெரியோரைப் போற்றுவதன் விளைவாகப் பெருவாழ்வு, ஆதிக்கம் முதலியன அதிகரிக்கின்றன.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

1885ஆம் வருஷம் மே மாதம் ஒன்பதாம் தேதி சனிக்கிழமை. அன்று பிற்பகல் சுமார் மூன்று மணி. பலராமினுடைய மாளிகையின் வரவேற்பு மண்டபத்தில் பரமஹம்சதேவர் இன்புற்று வீற்றிருந்தார். பக்தர்கள் பலர் ஆங்குக் குழுமியிருந்தனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் நரேந்திரன், மகேந்திரர், பவநாத், பூரணன், பால்ட்டு, இளைய நரேந்திரன், கிரீஷ் சந்திரகோஷ், ராம், விநோதன், துவிஜர் ஆகியவர்களாம். இவர்கள் அனைவரும் பரமஹம்சரைப் புடைசூழ்ந்து அமர்ந்திருந்தனர்.

வீட்டுக்குச் சொந்தக்காரராகிய பலராம் அப்பொழுது ஆங்கு இல்லை. ஓய்வின் பொருட்டு அவர் முல்கேர் என்னும் ஊருக்குச் சென்றிருந்தார். அவருடைய மூத்தமகள் பரமஹம்சரையும் பக்தர்களையும் அப்பொழுது ஆங்கு அழைத்திருந்தாள். அவர்கள் எல்லாருக்கும் நல்விருந்து ஒன்று ஓம்புவது அவளுடைய நோக்கமாயிற்று. நண்பகல் உணவுக்குப் பிறகு பரமஹசம்தேவர் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்.

''நான் தாராளமான மனப்பான்மை படைத்தவனா? அதைப்பற்றி உனக்கு என்னதோன்றுகிறது?'' என்று திரும்பத் திரும்ப அவர் மகேந்திரரை வினவினர்.

பவநாத்: ''தேவரீர், இக்கேள்வியை அவரிடம் கேட்கவேண்டாம். அவர் வெறுமனே வாய்பொத்தியிருக்கிறார். கேள்விக்கு விடை தருவது அவருக்குச் சாத்தியப்படாது.''

யாசகன் ஒருவன் அம்மண்டபத்தினுள் வந்தான். அப்படி வந்தவன் பாடல் ஒன்று பாடினன். கேட்பதற்கு அது மிக இனியதாயிருந்தது. அன்பர்களும் அப்பாடலுக்கு மகிழ்வுடன் செவிசாய்த்துக்கொண்டிருந்தனர். சிறப்பாக நரேந்திரனுக்கு அவனுடைய பாடல் திருப்தி கரமாயிருந்தது. மீண்டும் பாடும்படி நரேந்திரன் அவனை வேண்டினன்.

பரமஹம்சதேவர்: ''நிறுத்து, நிறுத்து. அவன் பாடுவது உங்களுக்கு மகிழ்வூட்டுவதன் பொருட்டன்று. அவன் நாடுவது காசு. ஆதலால் அவன் பாடியது போதும்.''

ஒரு பக்தர்: ''ஐயனே, தாங்கள் அமர்ந்திருக்கும் தோரணையைப் பார்த்தால் தாங்கள் ஒரு மிராசுதார் என்று அந்த யாசகன் யூகிப்பதற்கு இடம் தருகிறது."

இதைக் கேட்டு எல்லாரும் நகைக்கின்றனர்.

பரமஹம்சதேவர்: ''அதே வேளையில் நான் நோய்வாய்ப்பட்டிருக்கிறேன் என்று அவன் யூகிப்பதற்கும் இடம் உண்டு."

இப்பொழுது சம்பாஷணை ஹஸ்ராவைக் குறித்ததாக வடிவெடுத்தது. இரண்டொரு காரணங்களை முன்னிட்டு அவர் தட்சிணேசுவரத்தினின்று வெளியேற வேண்டி வந்தது.

''அவர் தற்பெருமை படைத்தவர் என்று இப்பொழுது ஒத்துக்கொள்கிறார்'' என்று நரேந்திரன் நவின்றான்.

பரமஹம்சதேவர்: ''அவனை நம்பவேண்டாம். மீண்டும் அவன் தட்சிணேசுவரத்துக்குத் திரும்பி வருவது அவனுடைய நோக்கமாகும். ஆதலால்தான் குற்றத்தை ஒருவாறு அப்பெயர்வழி ஏற்றுக்கொள்கிறான். அவன் மிக நல்லவன் என்று நரேந்திரன் அவனிடம் பூரண நம்பிக்கை வைத்திருக்கிறான்.''

நரேந்திரன்: ''அவரிடம் சிறப்புகள் சில இருக்கின்றன என்பதை நான் இப்பொழுதும் வற்புறுத்துகிறேன்."

பரமஹம்சதேவர்: ''அவனைப்பற்றிய வதந்திகள் வேண்டியவாறு வந்து குவிகின்றன. அதற்கிடையிலும் அவன் நல்லவன் என்கின்ற நம்பிக்கை உன் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்திருக்கிறதா?''

நரேந்திரன்: ''குறைகள் சில அவரிடத்து உள என்பது உண்மையே. ஆயினும் சிறப்புகள் பல அவரிடத்துப் புதைந்திருப்பதை நாம் புறக்கணிக்கலாகாது."

பரமஹம்சதேவர்: ''வாழ்க்கையில் தான் கொண்டுள்ள லட்சியத்தை அன்னவன் உறுதியாகக் கடைப்பிடிக்கிறான் என்று நான் ஒத்துக்கொள்கிறேன். அவன் என்னிடம், 'நீங்கள் இப்பொழுது என்னைப் புறக்கணிக்கின்

றீர்கள். ஆயினும் நீங்கள் என்னை நாடிவரும் காலம் ஒன்று வந்து அமையும்' என்று இயம் பினன். ஸ்ரீராம்பூரிலிருந்து கோஸ்வாமி என் னும் பட்டம் படைத்துள்ள வைஷ்ணவப் பெரி யார் ஒருவர் வந்து சேர்ந்தார். அவர் அத் வைத கோஸ்வாமியின் சந்ததியைச் சேர்ந்தவ ராவார். தட்சிணேசுவர ஆலயத்தில் இரண் டொரு நாள் தங்கியிருக்க அவர் விரும்பினர். மகிழ்வுடன் நான் அவரை வரவேற்றேன். ஹஸ்ரா அவரைக் குறித்து என்ன பகர்ந்தான் என்பது உனக்குத் தெரியுமா? 'அவனை ஆலய உத்தியோகஸ்தரிடம் அனுப்பி வையுங்கள்' என்பது ஹஸ்ராவின் கூற்று ஆகும். ஏன் அவன் அப்படிக் கருதினன் என்பது உனக் குத் தெரியுமா? ஆலய உத்தியோகஸ்தரிடம் அவர் அனுப்பப்படுவாராகில் அவருக்குவேண் டிய உணவைக் கொடுத்து உபசரிப்பது உத்தி யோகஸ்தர் கடமையாகும். அப்படி அல்லா விடில் அவருக்கு உபசாரம் பண்ணுகிற முறை யில் ஹஸ்ரா தனக்கென்று வைத்திருந்த பாலில் ஒரு பகுதியைப் பங்கிட்டுத்தரவேண்டி நேரிடும் என்பது அவன் கருத்து. அவனை நோக்கி நான் கூறினேன்: "அடே அல்பா! அவர் கோஸ்வாமியாயிருப்பதால் இப்பொழுது நான் அவர் முன்னிலையில் வீழ்ந்து வணங்கு கிறேன். நீயோ நெடுநாள் உலக வாழ்வில் உழன்றவன்; சிற்றின்பத்தில் மூழ்கியவன். இப் பொழுது ஒரு துறவிபோன்று நீ நடந்து கொண்டு ஏதோ ஜபம் செய்கின்ருய். அதை முன்னிட்டு உனக்கு இவ்வளவு கர்வமா? இப் படி நடந்துகொள்வதைக் குறித்து உனக்கு வெட்கமாக இல்லையா?

"சத்துவகுணம் ஓங்குமிடத்தே ஒருவன் ஈசுவரானுபூதிக்குத் தகுதியுடையவனகிருன். இதற்கு நேர்மாருக ரஜோகுணமும் தமோ குணமும் ஒருவனை ஈசுவர சன்னிதானத்தி னின்று அப்புறப்படுத்துகின்றன. இந்த மூன்று குணங்களுக்கும் ஏற்ற நிறங்கள் இருக் கின்றன. சத்துவ குணத்தின் நிறம் வெண்மை; ரஜோகுணத்தின் நிறம் சிவப்பு; தமோகுணத் தின் நிறம் கருமை. ஹஸ்ராவிடம் நான் ஒரு தடவை கேள்வி ஒன்று கேட்டேன். தட்சிணே சுவரத்தில் என்னைப் பார்க்கப் பக்தர்கள் பலர் வந்துகொண்டிருக்கின்றனர். அவர்களைப்பற்றி ஹஸ்ராவின் கருத்து யாதோ? என்பது நான் கேட்ட கேள்வியாகும். ஒவ்வொருவரிடத்தும் சத்துவகுணம் எத்தனை வீதாச்சாரத்திலிருக் கிறது என்று கேட்டதற்கு விடையாக ஹஸ்ரா, நரேந்திரனிடம் நூற்றுக்கு நூறு பங்கு சத்துவகுணம் இருந்ததாகவும் அதற்கு மேல் தன்னிடத்தோ நூற்றுக்கு நூற்றுப் பத்து வீதம் சத்துவகுணம் இருந்ததாகவும் தெரிவித்தான். என்னிடம் எத்தனை வீதாச் சாரம் சத்துவகுணம் இருக்கிறது என்று கேட்டேன். என்னிடம் இன்னும் சிறிது தமோ குணம் இருந்ததாகவும் நூற்றுக்கு எழுபத் தைந்து பங்குதான் சத்துவகுணம் இருந்ததாக வும் ஹஸ்ரா தெரிவித்தான்." இதைக் கேட்டு எல்லாரும் நகைத்தார்கள்.

"ஹஸ்ரா தட்சிணேசுவர ஆலயத்தில் சிறிது ஆத்ம சாதனம் பயின்று வந்தான். அதற்கிடையில் உலக வியவகாரங்கள் சில வற்றிலும் அவன் ஈடுபட்டு வந்தான். அவன் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தபொழுது சில ஆயிரம் ரூபாய்கள் கடன்பட்டிருந்தான். அந்தக் கடனைத் தீர்க்க அவன் கடமைப்பட் டும் இருந்தான். தட்சிணேசுவர ஆலயத்தில் வேலை புரிந்து வந்த சமையல்காரர்களைக் குறித்து, தான் அவ்வாறு உலக வியவகாரங் களில் ஈடுபட்டிருப்பவர்களுடன் பழகி வருவ தாகத் தென்பட்டானு என்ற கேள்வியைக் கேட்டான்.

"ஆத்ம சாதனத்தைப்பற்றிய உண்மை இதுவாம். சாதகன் உள்ளத்தில் சிறிதளவா வது உலக ஆசை இருக்குமாகில் அவன் அனு பூதி அடையமாட்டான். தர்மத்தின் பாங்கு அலாதியானது. நூலின் ஓர் இழை வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் வரையில் ஊசியின் காதில் அந்த நூலைச் செலுத்துவது சாத் தியப்படாது. அதே விதத்தில் சாதகன் ஒரு வன் உள்ளத்தில் உலகப்பற்று சிறிதளவா வது இருக்குமாகில் சாதனத்தில் அவன் முன்னேறமாட்டான்.

"தொடர்ந்து முப்பது வருஷங்களாக ஆத்ம சாதனங்கள் புரிபவர்கள் இருக்கிருர்கள். அவ் வளவு காலம் எடுத்துக்கொண்டும் சாதனத் தில் அன்னவர்கள் சிறிதளவாவது முன்னேற் றம் அடைவதில்லை. அதற்கேற்ற காரணமும்

இருக்கிறது. சரீரத்தில் ஏதேனும் ஒரு பகுதி வாடிவதங்கிச் செயலற்றுப் போகுமிடத்து அதற்கேற்ற சிகிச்சை முறையைக் கையாள வேண்டும். சாதாரண சிகிச்சை முறை அத்தகைய கொடிய நோயைக் கண்டிக்கமாட்டாது.

"சாதகன் ஒருவன் தொடர்ந்து எத்தனை வருஷங்களானாலும் சாதனங்கள் புரிந்து கொண்டு வரலாம். அவனுடைய உள்ளத்தில் சிறிதளவாவது உலக ஆசை இருக்குமாகில் சாதனத்தில் சிறிதளவுகூட அவன் முன்னேற்றம் அடையமாட்டான். அனுபூதியைப்பற்றிய மற்றும் ஓர் உண்மை உளது. சாதகன் ஒருவனுக்கு ஈசுவரகிருபை வாய்க்குமிடத்துக் கணப்பொழுதில் அவன் அனுபூதி அடையக்கூடும். சான்று ஒன்றின் மூலம் இதை விளக்கலாம். அறை ஒன்று ஆயிரம் வருஷங்களாக மூடப்பட்டுக் காரிருள் சூழ்ந்திருக்கிறது. ஆயினும் அதனுள் தீபம் ஒன்றைக் கொண்டுவந்தால் அக்கணத்திலேயே அவ்வளவுகாலம் ஆங்கிருந்த இருள் உடனுக்குடனே மறைந்துபட்டுப்போகிறது. அதேவிதத்தில் ஈசுவரானுக்ரகம் வாய்க்கப்பெற்றவனுக்கு நொடிப்பொழுதில் அனுபூதி வாய்ப்பது சாத்தியம்.

"ஏழை ஒருவனுடைய மைந்தனுக்குப் பணக்காரன் ஒருவன் தன்செல்வியை மணந்து கொடுப்பதாகத் தீர்மானிக்கின்றான். அக்கணத்திலேயே அந்த ஏழைக்குத் தேவையாயிருக்கின்ற நல்ல உடை, வீடு, தட்டுமுட்டுச் சாமான்கள் இவை யாவும் வந்து வாய்க்கின்றன. ஈசுவர அனுக்ரகம் அதற்கு நிகரானது."

ஒரு பக்தர்: "ஐயனே, சாதகன் ஒருவனுக்கு எவ்விதத்தில் ஈசுவர அனுக்ரகம் வந்து வாய்க்கிறதோ?"

பரமஹம்ச தேவர்: "ஈசுவரனுடைய பாங்கை அறிந்துகொள்ள யாருக்குமே இயலாது. கள்ளங்கபடமற்ற குழந்தை ஒன்றின் பாங்குக்கும் ஈசுவரானுக்ரகத்துக்கும் இடையில் ஒற்றுமைகள் பல உள. குழந்தை ஒன்று தன் கையில் விலை உயர்ந்த ரத்தினம் ஒன்றை வைத்துக்கொண்டு திண்ணையில் அமர்ந்திருக்கிறது. வழியில் போகிறவர்கள் அந்த ரத்தினத்தைத் தரும்படி அந்தக் குழந்தையைக் கேட்கிறார்கள். ஆனால் அது அவர்களின் வேண்டுதலுக்கு இணங்க அறவே மறுக்கிறது. பிறகு வேறு ஒருவனிடம் அக்குழந்தைக்கு விருப்பம் உண்டாகிறது. ஓடிச்சென்று தன் கையில் உள்ள ரத்தினத்தை அவனுக்குக் கொடுக்கிறது. அதற்கேற்ற காரணத்தை நாம் கூற இயலாது. ஈசுவரானுக்ரகமும் இது போன்றதேயாம்.

"உலகப்பற்றை ஒழித்துத் தள்ளினாலொழிய சாதகன் ஒருவன் ஈசுவர அனுபூதியைப் பெற முடியாது. இதுவே ஆத்ம சாதனம் சம்பந்தமான அடிப்படையான உண்மையாகும். ஆனால் எல்லாரும் இக்கோட்பாட்டுக்குச் செவி சாய்ப்பதில்லை. ஆத்ம சாதனத்தில் ஈடுபடுகிற ஒருவனுக்கு நல்லாரிணக்கம் முற்றிலும் இன்றியமையாதது. பரஸ்பரம் முன்னேற்றத்துக்கு அந்த இணக்கம் முற்றிலும் துணைபுரிகிறது. பக்தன் ஒருவன் தீவிரமான சாதனத்தில் ஈடுபடுபவனாகத் தென்படுகிறான். ஆனால் நாளடைவில் அவனுடைய மனப்பான்மை முற்றிலும் அலாதியான போக்குடையதாகத் தென்படுகிறது.

"நல்லாரிணக்கம் கொள்பவரைப் பற்றிய கொள்கை ஒன்று சமுதாயத்தில் வழக்கத்தில் இருந்து வருகிறது. அதாவது பிசாசு ஒன்று தனக்கேற்ற ஸத்சங்கம் வேண்டுமென்று தேடித்திரிந்தது. வழக்கத்தில் இருந்து வருகிற நம்பிக்கை ஒன்றின்படி மானுடன் ஒருவன் சனி அல்லது செவ்வாய்க்கிழமையன்று ஏதேனும் ஒரு விபத்துக்குட்பட்டு மரணம் அடைவானாகில் அவன் பிசாசாக மாறுகிறான். ஆதலால் இந்த இரு நாட்களில் ஏதேனும் ஒரு தினத்தன்று மானுடன் ஒருவன் ஆபத்துக்காளாகிச் சாகப்போகும்பொழுது அவனுடைய உறவை நாடிப் பிசாசு ஆங்கு ஓடிற்று. தனக்கேற்ற நல்லாரிணக்கம் ஒன்று அகப்பட்டு விட்டது என்று அந்தப் பிசாசு எண்ணியது. ஆனால் அந்த மனிதனோ மயக்கம் தெளிந்து எழுந்து போனான்; அவன் சாகவில்லை. அதைக்குறித்துப் பிசாசு ஏமாற்றமடைந்தது. நல்லவர்களுக்கும் நல்லவர்களாகத் தென்படுபவர்களுக்கும் ஏற்ற இணக்கம் அமைவது அரிதிலும் அரிதாம். ஒரு போக்கில் இணங்கி வாழ்பவர் போன்று துவக்கத்தில் தென்படுபவர் நெருங்கிப் பழகப்பழக வேற்றூராக மாறி விடுகிறார். இதுவே உலகின் போக்காம்."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

11-1 தக்கரவி கண்ட சரோருகம்போல் என்இதயம்
மிக்கஅருள் கண்டு விகசிப்பது எந்நாளோ.

இயற்கையில் நிகழ்கின்ற சில நிகழ்ச்சிகள் அற்புதமானவைகள். அழுதுகொண்டிருக்கின்ற குழந்தைக்குத் தன் தாயைப் பார்க்கின்ற பொழுது அகமகிழ்வு தானாக உண்டாகிறது. காந்தத்துக்குப் பக்கத்தில் கொண்டுவரப்படுகிற இரும்புத்தூள் தானாகக் காந்தத்தின் பாங்கை ஏற்றுக்கொள்கிறது. சூரியோதயத்தில் தூங்கிக்கொண்டிருப்பது போன்று தென்படுகின்ற தாமரைமொட்டு சூரிய வெளிச்சம் பட்டவுடன் விகசிப்புடன் விரிந்துகொள்கிறது. இறுதியாக இயம்பப்படுகின்ற இந்த நிகழ்ச்சியைச் சான்றாக எடுத்துக்கொள்கின்றார் அண்ணல் தாயுமானவர்.

ஆத்மசாதகன் ஒருவனுக்கு அருள்தாகம் வந்து வாய்ப்பது அரிதிலும் அரிதாம். அதைக் குறித்து இராமகிருஷ்ண பரமஹம்சதேவர் இயம்புவதாவது: "அதிகாலையில் பிரம்ம முகூர்த்தத்தில் எங்கும் ஒரே காரிருள். பிறகு கீழ்த்திசையிலுள்ள வானம் சிறிது வெளுத்து வருகிறது. அதைத் தொடர்ந்து செவ்வானம் வருகிறது. இனி அதிவிரைவில் சூரியோதயம் வரப்போகிறது என்பதற்கு இது உறுதியான முன் அறிகுறியாகிறது. அதே விதத்தில் ஆத்மசாதகன் ஒருவனுக்கு உள்ளத்தில் அருள் நாட்டம் உண்டாகுமாகில் அவன் அதிவிரைவில் அப்பேற்றினை அடையப் பெறுகிறான்." 'Ask and it shall be given' என்பது ஆன்றோர் ஒருவர் பகர்ந்துள்ள அருள்மொழியாகும். இறைவனிடம் நீ உள்ளன்போடு கேட்பாயாகில் நீ கேட்கும் அருளமுது தானாக வந்தமைகிறது. அதே விதத்தில் பரிந்து பகவானிடம் அவனுடைய அருள் வேண்டுமென்று ஆத்மசாதகன் விண்ணப்பிப்பானாகில் அதை அவன் பெறுகிறான். பெற்றதற்கு அறிகுறியாக அருள் தாகம் நீங்கி அருள் மயமாக அவன் இலங்குகின்றான். மனிதன் பெறுகிற பேறுகளுள் இது ஒப்புயர்வற்றது. ஏனென்றால் பிறவிப் பெருங்கடலில் உழன்றுகொண்டிருக்கிற ஜீவாத்மன் அக்கணமே அதைத் தாண்டியவனாகின்றான். சூரியனுடைய சந்நிதியில் மொட்டாக இருந்த தாமரை விரிந்து விகசிப்பு அடைகிறது. ஆத்மசாதகன் கண்ணீரையும் கம்பலையையும் ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரமானந்தம் என்னும் பாரமார்த்திகப் பெருநிலையை அடையப் பெறுகிறான். அவன் முகத்தில் திகழும் அகமகிழ்வு அதற்குச் சான்றாகிறது. இத்தகைய பெருநிலையைத் தாம் அடையப்பெறும் காலம் எந்நாளோ என்று தாயுமானவர் ஏக்கமுற்றிருக்கிறார். ஆத்மசாதகன் பெறவேண்டிய மனநிலைக்கு இது நல்லதொரு சான்றாகும்.

11-2 வானமுகில் கண்ட மயூரபக்ஷி போல ஐயன்
ஞானநடம் கண்டு நடிக்குநாள் எந்நாளோ.

இறைவன் வேறு இயற்கை வேறு அன்று. இறைவனே இயற்கையாக யாண்டும் இலங்கிக் கொண்டிருக்கின்றார். ஐம்பொறிகள் வாயிலாக மனதைக்கொண்டு பார்க்குமிடத்து அச்செயல் இயற்கையாக மிளிர்கிறது. அதே செயலைத் தூய மனதுடன் பார்க்குமிடத்து அது இறைவனுடைய ஆனந்தத் தாண்டவமாக மிளிர்கிறது. அப்படிப் பண்பட்டுள்ள மனது ஒடுங்குமிடத்து அது சிதம்பர ரகசியமாக முடிவுறுகிறது. ஏனென்றால் காண்போனிடத்துக் காணப்படுபொருள் லயமாகிறது. காண்போன் அந்நிலையில் தன்மயமாகத் திகழ்கின்றான். ஆங்கு அந்நிலையை விளக்க மனதுடன்கூடிய ஜீவவியக்திக்கு இடம் இல்லை. அந்நிலையை எட்டும் முன்பு ஆத்மசாதகன் அடைகின்ற பேரானந்தம் பகரவொண்ணாததாம்.

ஆகவே, மனதுடன் கூடி வாழ்ந்திருக்கும் மனிதன் உலகில் காண்கின்ற காட்சி அவனுடைய மனதின் பரிபாகத்துக்கு ஒத்ததாகிறது. பண்படாத மனது உலகை நலம், கேடு உடையதாகக் காண்கிறது. பண்பட்டுக் கொண்டு வரவர, கேடுகள் குறையவும் நலன்கள் அதிகரிக்கவும் செய்கின்றன. மயில் ஒன்று வானத்தில் சஞ்சரிக்கும் கார்மேகத்தைக் காணுமிடத்து அது பெருமகிழ்வுறுகிறது, ஆனந்தத்துடன் ஆடுகிறது. அக்காட்சியானது

மனம் தூயதாக்கப்பெற்றுப் பக்தியில் ஊறி யிருக்கும் சாதகன் ஒருவனுக்குச் சிவத் தாண் டவமாகக் காட்சி தருகிறது. இவ்வுலகக் காட்சியே நடராஜ தாண்டவமாக யாண்டும் இலங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, சிவத் தாண்டவத்தைப் பொருள்படுத்தும் பாங்கு அவனுடைய மனபரிபாகத்தை விளக்குகிறது. மனபரிபாகம் அடைந்து வர வர மனிதன் பரம னைப் பற்றிய உண்மையை உள்ளபடி அறிய வருகிறான். இயற்கையின் கண்ணுள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் உண்மையில் சிவனா ருடைய ஆனந்தத் தாண்டவமாம். அங்ஙனம் மெய்க்காட்சி காண்போரே மேலோர் ஆகின் றனர். நிகழ்ச்சிகள் அனைத்தையும் சிவத் தாண்டவமாகக் காண்பவர் சிவ சாயுஜ்ஜியம் அடைவதற்குத் தகுதியுடையவர் ஆகின்றார் என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள அடிப் படைக் கருத்தாம்.

11-3 சந்திரனை நாடும் சகோரபக்ஷிபோல் அறிவில் வந்தபரஞ் ஜோதியையான் வாஞ்சிப்பது [எந்நாளோ.

சகோரபக்ஷியின் பாங்கு அலாதியானது. அது வானத்திலேயே வசித்திருக்கிறது என் பது ஐதிகம். நிலவுலகுக்கு அது ஒருநாளும் கீழே இறங்கி வருவதில்லை. அதற்குத் தாகம் வந்து வாய்த்தகாலை வானினின்று மழைத் தாரையாகக் கீழே வரும் ஜலத்தைத்தான் அருந்துகிறது. பூமியில் படியும் ஜலத்தை அது தொடாது. இக்கோட்பாடு உருவகமாக ஆத்மசாதகனைக் குறித்து இயம்பப்பட்டுள் ளது. தலைத்தரமான ஆத்மசாதகன் பிரபஞ் சத்தில் வாழ்ந்திருக்கின்றான். ஆனால் பிர பஞ்ச சம்பந்தமான இன்பம் எதையும் அவன் நாடுவதில்லை. பரமனிடத்திருந்து வருகின்ற பேரானந்தத்தையே அவன் யாண்டும் நாடு கிறான். சந்திரனைப் பார்க்குமிடத்து அவனுக் குச் சிவனார் ஜடாபாரத்தில் அதை அணிந்திருக் கும் திருக்காட்சி ஞாபகத்துக்கு வருகிறது. அந்த எண்ணம் அவனைப் பரமானந்தத்தில் திளைத்திருக்கச் செய்கிறது. இங்ஙனம் தலை சிறந்த ஆத்மசாதகன் ஒருவனைச் சகோரபக்ஷி யோடு ஒப்பிடுவது முற்றிலும் பொருத்த மானதே.

அப்பக்ஷியின் நோக்கம் முழுதும் மேல் நிலை யைப் பற்றியதேயாம். இவ்வுலக சம்பந்த மான அல்ப சுகம் எதையும் அது நாடுவதில்லை. அத்தகைய மனநிலை தலை சிறந்த ஆத்ம சாதக னுக்கே சொந்தமாகிறது. இவ்வுலக சம்பந்த மான நிகழ்ச்சிகள் அனைத்தும் அன்னவனுக் குப் பரமாத்மாவின் திருவிளையாடல்களாகவே காட்சி தருகின்றன. மற்று உலகத்தவர்கள் காண்கின்ற கேடு நிறைந்த காட்சிகள் அனைத் தையும் அவன் பரம்பொருளின் திருவிளை யாடல் மயமாகவே பொருள்படுத்துகிறான். பரம்பொருளோ நன்றுடையான் தீதிலானாகி றான். அவனை நாடிச் செல்கின்ற ஆத்ம சாத கனும் இவ்வுலக சம்பந்தமான துன்பங்கள் அனைத்தையும் அறவே மறந்து விடுகின்றான். அதற்கு நல்லதொரு சான்று எடுத்துக்கொள் வது முறை. இவ்வையக வாழ்வில் வனவாசம் புரிந்து வந்த தர்மராஜனாகிய யுதிஷ்டிரனிடம் திரௌபதி கேள்வி ஒன்றைக் கிளப்பினாள்: "பிரபோ! தர்மம் பிறழாத தமக்கு இத்தரணி யின்கண் துயரத்துக்கு ஏதுவான செயல்களே திரும்பத் திரும்ப நிகழ்வானேன்?" அதற்கு யுதிஷ்டிரன் கொடுத்த விடையாவது: "தேவீ! கண்ணெதிரே தென்படுகின்ற ஹிமாசலத் தைப் பார். அது வானளாவிக் கொண்டிருக் கிறது. அத்தகைய பெரிய பர்வதம் பரமன் மயமாகக் காட்சி தருகின்றது. அதைப் பார்த்து நான் பரமானந்தத்தில் திளைத்திருக்கின்றேன். இத்தகைய இயற்கையழகைக்கண்டு ஆனந்த மடைய நாம் முற்பிறப்பில் தவம் செய்திருக்க வேண்டும். தவத்தின் பயனை நாம் இப்பொழுது அனுபவித்து வருகின்றோம். இவ்வுலக சம் பந்தமான இன்னல்களுக்கும் இறையின்பத்தில் திளைத்திருக்கும் எனக்கும் வெகுதூரம்."

சந்திரனை நாடும் சகோரபக்ஷி மேலும் மேலும் உயர்நிலையையே நாடிப் போய்க் கொண்டிருக்கிறது. அதே விதத்தில் கடவுள் நாட்டம் கொண்டுள்ள ஆத்ம சாதகன் தன் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி உயர்த்திக் கொண்டே போகிறான். அவன் தான் காண் கின்ற காட்சி அனைத்தையும் கடவுள் மயமாகக் காண்கின்றான். கடவுள் காட்சி காணும் ஒருவ னுக்குஇன்பம் ஓங்குகிறது; துன்பம் தானாகக் குறைந்துபட்டுப் போகிறது என்பது இக் ணியின் கோட்பாடு.

நூறு இளைஞர்கள் தேவை

(சுவாமி விவேகானந்தர்)

நிலையான அன்பும், இளகிய நெஞ்சுமுடைய நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இன்று தேவைப்படுகிறார்கள். இன்றைக்கு நமக்குத் தியாகிகள்தாம் வேண்டும். மற்றவை அனைத்தும் தானாக வந்து அமையும். உறுதியும், சுறுசுறுப்பும், விசுவாசமும், நாட்டின் லக்ஷியத்தில் நேர்மையான பிடிப்பும் உடைய இளைஞர்கள் தேவைப்படுகின்றார்கள். அப்பேர்ப்பட்ட நூறு இளைஞர்களால் இவ்வுலகமே புரட்சிகரமான நல்ல மாறுதலைப் பெற்றுவிடும். அவர்களுக்கு முதலில் நல்வாழ்வை நாம் தரவேண்டும். அதன்பிறகு முன்னேற்றச் செயல்களை அவர்களிடமிருந்து நாம் எதிர்பார்க்க முடியும்.

இந்தியாவிலுள்ள பொதுமக்களை உயர்த்துகின்ற பணியில் முழுமனதோடு தங்களை ஒப்படைக்கின்ற மக்களுக்கிடையில் வேலை செய்யுங்கள். அவர்களை எல்லாரையும் தட்டி எழுப்புங்கள். அவர்கள் ஐக்கியப்படுத்துங்கள். தியாக உணர்வில் அவர்களைத் திளைக்கச் செய்யுங்கள். அத்தகைய இளைஞர்களைக்கொண்டுதான் இந்தியப் பணி நடந்தாக வேண்டும்.

இத்தகைய இளைஞர்களை ஒன்று திரட்டுவதற்கே நான் பிறந்திருக்கின்றேன். ஒவ்வொரு நகரத்திலும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் என்னுடன் சேர்ந்துகொள்ள ஆயத்தமாக இருக்கிறார்கள். தடுத்து நிறுத்தமுடியாது உருண்டோடும் அலைகளைப்போல அவர்களை நாடெங்கும் அனுப்ப விரும்புகின்றேன். ஒழுக்கத்தையும், கல்வியையும், சமயத்தையும் அவர்களைக்கொண்டு பாமர மக்களுக்குப் புகட்டுவேன்.

பெரியோர்களே ! எழுந்திருங்கள். உலகம் முழுவதும் துயரத்தில் வெந்துகொண்டிருக்கிறது. இந்நிலையில் நீங்கள் உறங்கிக் கொண்டிருக்கலாமா? நம்முள் உறங்கிக்கொண்டிருக்கும் தெய்வம் விழித்தெழும் வரையில் கூவி அழைத்துக்கொண்டே இருப்போம். நம் பிரார்த்தனைக்குத் தெய்வம் செவி சாய்க்கும் வரையில் அவரைக் கூவி அழைத்துக்கொண்டிருப்போம். மோஹமாகிய முதலையின் வாயில் மக்கள் அகப்பட்டுக் கொண்டிருக்கின்ற பரிதாபத்தைப் பாருங்கள். இருதயத்தைப் பிளக்கக்கூடிய அவர்களுடைய சோகக் குரலைக் கேளுங்கள். முன்னேறிச் செல்லுங்கள். ஓ ! வீரர்களே ! பந்தத்தில் அகப்பட்டுக்கொண்டிருப்பவர்களை விடுவியுங்கள். துன்பத்தில் மூழ்கிக்கொண்டிருப்பவர்களின் துன்பச் சுமையைக் குறையுங்கள். அறியாமையில் மூழ்கிக் கிடப்பவர்களுடைய உள்ளத்தை ஒளிபெறச் செய்யுங்கள். அன்பு என்பது இல்லாது வெறும் அறிவைக்கொண்டு எழுதும் எழுத்தாளர்களைப்பற்றியும், அவர்களுடைய பத்திரிகைகளிலுள்ள விஷயங்களைப் பற்றியும் நீங்கள் கவலைப்படாதீர்கள். சகோதரர்களே! பரமாத்மாவின் கருவிகளாக இருந்த மஹான்கள் ஏழைகளாகத்தான் இருந்தார்கள். இவ்வுலகில் மகத்தான காரியங்களை அவர்கள் செய்திருக்கிறார்கள். பெயரளவுக்குப் பணம் படைத்திருக்கிறவர்களை நம்பிப் பயனில்லை. பணிவும், எளிமையும், நம்பிக்கையும் உடைய உங்களைத்தான் நான் நம்பி இருக்கின்றேன்.

முன்னேறிக் கொண்டே இருங்கள். பின் தங்கியுள்ள மக்களிடமும், ஏழைகளிடமும் இரக்கம்கொள்ளுங்கள். அவர்களுக்குப் பணிவிடை செய்வதில் உயிரையும் கொடுக்க ஆயத்தமாய் இருங்கள். அவர்களுக்குப் பணிவிடை செய்வதே உங்கள் குறிக்கோளாகட்டும். வீரம் வாய்ந்த இளைஞர்களே! தெய்வத்திடம் நம்பிக்கை வையுங்கள். துன்பப்படுபவர்களிடம் இரக்கம் கொள்ளுங்கள். கடவுளிடம் உதவியை நாடுங்கள். உங்களுக்குத் தேவையான உதவி வந்துகொண்டே இருக்கும். ஏழைகளுக்காகப் பாடுபடவும், அறியாமையைப் போக்கவும், நசுக்குண்டு கிடக்கின்ற மக்களைக் காக்கவும் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உண்மையிலேயே என்னுடைய குழந்தைகளானால் எதற்கும் அஞ்சமாட்டீர்கள்; எதுவும் உங்களைத் தடைப்படுத்த முடியாது. சிங்கம் போன்றவர்களாக நீங்கள் இருப்பீர்கள். உலகம் முழுவதையும் நாம் தட்டி எழுப்பியாக வேண்டும்.

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

30. निधये अव्ययः நிதயே அவ்யயா:-அசைந்து கொண்டிருக்கும் பிரபஞ்சம் அனைத்துக்கும் அசையாதிருக்கின்ற மூலப் பொருள்.

31. सम्भवः ஸம்பவ: — வடிவெடுப்பவன்.

உலகில் கேடுகள் நிறைந்திருக்கின்ற பொழுது உலகைத் திருத்தி அமைப்பதற்குப் பரவஸ்துவானவர் தாமே குறைவிலா நிறை நிலையில் தோற்றத்துக்கு வருகின்றார். வந்த பிறகு உலகை முறையான பாங்கில் திருத்தி யமைக்கும் செயலைச் செய்து முடிக்கின்றார்.

32. भावनः பாவன: — ஜீவர்கள் புரிகின்ற கர்மத்துக்கு ஏற்ற கர்மபலனை முறையாக வழங்குபவர்.

ஆதலால் எந்த மனிதனும் தான் செய்த வினையினின்று தன்னை விடுவித்துக்கொள்ள முடியாது. வினைப்பயனைத் தவிர்ப்பது ஜீவாத்ம னுக்குச் சாத்தியமன்று.

33. भर्ता பர்த்தா—இயற்கைக்கு ஆதாரமா யிருந்து அதைத் தாங்கி வருகின்றவர்.

34. प्रभवः ப்ரபவ: — ஐம்பூதங்களுக்குப் பிறப்பிடமாய் இருப்பவர்.

அவர் தாமே தோற்றத்துக்கு வருகின்ற பொழுது அச்செயலின் வாயிலாக அவருடைய மகிமை குறைந்து போவதில்லை. தோன்றிய நிலை, தோன்றாநிலை ஆகிய இரண்டு நிலைகளி லும் பரிபூரணத்திலேயே நிலைத்திருப்பவர் என்பதாம்.

35. प्रभुः ப்ரபு: — வல்லமை மிக வாய்க்கப் பெற்றவர்.

பிரபஞ்சத்தில் நிகழ்கின்ற அனைத்துக்கும் அவரே ஆதி கர்த்தாவாக இலங்குகின்றார்.

36. ईश्वरः ஈச்வர: — அனைத்துக்கும் தலை வராக இருந்து பிரபஞ்சம் முழுவதையும் ஆண்டுவருபவர்.

37. स्वयम्भुः ஸ்வயம்பூ: — தான் தோன்றி.

உலகில் உள்ள உயிர்வகைகளை அம்மையப் பன் மூலகாரணமாக இருந்து தோற்றுவிக்கின் றார். பரம்பொருளோ தன் தோற்றத்துக்குத் தானே காரணமாயிருக்கின்றார். அது அவரு டைய வல்லமைக்கு எடுத்துக் காட்டாகிறது.

38. शम्भुः சம்பு:—பக்தர்களிடத்து நலனை யும் சுகத்தையும் நல்குபவன்.

39. आदित्यः ஆதித்ய: — பொன்மயமாகத் திகழும் சூரியமண்டலத்தில் வீற்றிருப்பவர்.

சூரியனுக்குப் பன்னிரண்டு மாதங்களில் பன்னிரண்டு நாமங்கள் வந்தமைகின்றன. அவைகளுள் ஆதித்தியன் என்பது ஒன்று. தியானத்துக்குரிய மூர்த்தியாக இவர் இலங்கு கின்றார்.

40. पुष्कराक्षः புஷ்கராக்ஷ: — தாமரைக் கண்ணன்.

41. महास्वनः மஹாஸ்வன: — பெருங்குரல் அல்லது போற்றுதற்குரிய ஓசையை உடைய வன்.

வேதங்களாக வந்துள்ள யாவும் இறைவனால் திருவாய் மலர்ந்தருளப்பட்டவை என்பது கோட்பாடு.

42. अनादिनिधनः அனாதிநிதன:-தோற்றமும் ஒடுக்கமும் இல்லாதவர்.

யாண்டும் இருந்தபடி இருப்பவர்.

43. धाता தாதா — பிரபஞ்சம் முழுதையும் தாங்கி இருப்பவர்.

புராண வரலாற்றுப் பிரகாரம் ஆதிசேஷன் என்னும் சர்ப்பம் உலகைத் தாங்கியிருக்கிறது. தத்துவபூர்வமாக ஆராயுமிடத்து நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் பரவஸ்து தானே அனைத்தையும் தன்னகத்துத் தாங்கி வைத்தி ருக்கும் பாங்குடையதாக இருக்கிறது.

44. विधाता விதாதா-வினைக்கேற்ற வினைப் பயனை உண்டுபண்ண வல்லவராய் இருப்பவர்.

ஜீவர்கள் எல்லாரும் அவரவர் முயற்சிக் கேற்றவாறு வினைப்பயனைப் பெற்று அனுப வித்து வருகின்றார்கள். அச்செயல்கள் அனைத் துக்கும் மூலகாரணமாயிருப்பவர் விதாதா.

45. धातुरुत्तमः தாதுருத்தம: — சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவனுக்கும் மூலகாரண மாயிருப்பவர்.

புராண ஐதிகப்படி நான்முகக் கடவுளாகிய பிரம்மதேவன் மஹாவிஷ்ணுவின் உந்திக் கம லத்தில் தோன்றியவர். பிரபஞ்சத்தில் நிகழ் கிற அனைத்தும் பரவஸ்துவின் ஆதரவைக் கொண்டு நிகழ்ந்து வருகின்றன.

46. अप्रमेयः அப்ரமேய: — பிரமாணங் களுக்கு எட்டாதவர்; ஒப்புயர்வற்றவர்.

பிரகிருதியிலிருக்கும் யாவும் பஞ்சேந்திரியங்கள் மூலமாக நுகரப்படுகின்றன. பரமனே இந்திரியங்களுக்கெட்டாதவர். ஆகையினல் அவரை ஒப்பிட்டு இயம்புதற்கு ஏதும் இல்லை. யுக்தியைக்கொண்டு பரம்பொருள் அறியப்படுபவராக மாட்டார். யுக்தியைக் கையாளுதற்கு இயற்கையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் முகாமையாகின்றன. ஆனல் பரமனிடத்தோ பிரபஞ்ச சம்பந்தமான நிகழ்ச்சிகள் ஏதும் இல்லை. ஆதலால் இத்தகைய பாங்குடையவர் அவர் என்று யூகிப்பதற்கு இடமில்லை. அவர் இருப்பது யூகத்துக்கு அப்பாற்பட்ட நிலை. உபமானத்தின் மூலமாகப் பரமன் அறியப்படமாட்டார். விலங்கை மனிதனேடு சீர்தூக்குகின்ற இடத்து, அமைப்பு ஒற்றுமை போன்ற அறிகுறிகள் இருக்கின்றன. மற்று, பரமனிடத்தோ அத்தகைய அறிகுறி ஏதுமில்லை. ஆதலால் அவர் இத்தகைய பாங்குடையவர் என்று முடிவுகட்ட முடியாது. பரமன் இத்தகைய பாங்குடையவர்; இதற்கு நேர்மாறுன பாங்கு ஏதும் அவரிடத்து இல்லை என்று இயம்பி அவருடைய சான்னித்தியத்தை நிலைநாட்ட நமக்கு இயலாது. ஏனென்ருல் அவயவங்களும் கலைகளும் அவரிடத்து இல்லை. சாஸ்திரப் பிரமாணத்தைக்கொண்டும் அவரை அறிந்துகொள்ள முடியாது. ஏனென்ருல் சாஸ்திரங்கள் இயம்புவன அனைத்தும் முக்குண மயமாய் உள்ள பிரபஞ்சத்தைப் பற்றியவைகளாம். ஆகையினல் முக்குணங்களுக்கு அப்பாற்பட்டுள்ளவரை இத்தகைய பாங்குடையவர்என்று இயம்ப சாஸ்திரங்கள் உதவமாட்டா. ஆயினும் சாஸ்திரங்களால் ஒரு பிரயோஜனம் உண்டு. சூரியனை நம் காட்சியினின்று மறைத்துக்கொண்டிருக்கும் மேகங்களை விரட்டி ஓட்டுதற்கு வாயு உதவுகிறது. அதே விதத்தில் சாஸ்திரங்களை முறையாக ஆராய்ந்து அனுஷ்டிக்கிறவர்களுக்கு அந்தக்கரண சுத்தி வந்தமைகிறது. மறைத்திருக்கும் மேகங்கள் விலகிய பிறகு சூரியன் தன்னைத் தானே விளக்குகிறது. அதே விதத்தில் அந்தக்கரண சுத்தி அடைந்த ஜீவாத்மன் பரமனை உள்ளபடி தரிசிக்க வல்லவனுகிருன்.

47. हृषीकेशः ஹ்ருஷீகேச: — இந்திரியங்களுக்கு இறைவன்.

கிருஷ்ண பரமாத்மாவுக்கு அமைந்துள்ள நாமங்களில் இது ஒன்ருகும். வீடு ஒன்றில் குடியிருக்கின்றவன் இது என்னுடைய வீடு என்று தான் குடியிருக்கும் வீட்டையும் குடியிருக்கிற தன்னையும் அறிந்துகொள்கிருன். அதே விதத்தில் கிருஷிக ஈசன், இந்திரியங்களுக்கு அதிபதியாயிருக்கிற பரமன், இந்திரியங்களுக்கு மூலப்பொருளாகிய பிரகிருதியையும் தன்னையும் உள்ளபடி அறிகிருன். அது மட்டுமன்றி ஐந்து இந்திரியங்களுக்கும் அதிபதியாயிருந்து அவைகளை அவன் ஆண்டு வருகிருன். மேலும் சூரியனுகவும் சந்திரனுகவும் இருந்துகொண்டு உலகுக்கு இன்பமூட்டுகிறவன் எனவும் இந்த நாமம் பொருள்படுகிறது.

48. पद्मनाभः பத்மநாப: — அண்டங்கள் அனைத்துக்கும் ஆதிகாரணமாய் இருக்கும் பத்மம் அல்லது தாமரைபோன்ற கொப்பூழை உடையவன்.

அளவையில் அடங்காததாகக் காலம் இருக்கிறது. அந்தக் காலத்துக்கும் அடையாளமாகப் பத்மம் அமைந்திருக்கிறது. அகண்டாகாரத்தில் விரிந்து ஓடுகிற காலம் இறைவனுடைய ஒரு சிறு கூருக அமைந்திருக்கிறது. இந்தப் பத்மத்தினின்றே காலக்கிரமத்தில் சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன் ஓங்கவும் ஒடுங்கவும் செய்கிருன். காலத்துக்குப் புஷ்கரம், புண்டரிகம், பத்மம், சக்கரம் என்பன வெவ்வேறு நாமங்களாக அமைந்திருக்கின்றன.

49. अमरप्रभुः அமரப்ரபு: — விண்ணவர்கோன் அல்லது வானத்தவர்களுக்கு வேந்தன்.

விண்ணவர்கள் அல்லது தேவர்கள் பரிணுமத்தில் மக்களுக்கு மிக்காராகின்றனர். அவர்கள் செய்துள்ள நல்வினைப் பயன்களின் விளைவாக அவர்கள் நீடுழி வாழ்ந்திருக்கின்றனர். ஆயினும் அன்னவர்கள் சுக ஜீவனத்துக்கு மட்டும் தகுதி உடையவர்களாகின்றனர். பரஞானத்தை அடைய விரும்புகின்ற தேவர்கள் மீண்டும் இம்மண்ணுலகில் வந்து மக்களாகப் பிறக்க வேண்டும் என்பது ஐதிகம். மஹாவிஷ்ணு மக்களுக்கு மட்டுமன்றித் தேவர்களுக்கும் இறைவனுக இலங்குகின்ருன். ஆதலால் உடல் தாங்கியுள்ள உயிர்களனைத்தும் அவரை வழுத்தக் கடமைப்பட்டிருக்கின்றன.

ஞான வெட்டியான்-3

இடும்பைக்கு இடம் தராதே

விவேகானந்த சுவாமிகளின் ஜீவிதம் தொடக்கம் முதல் இறுதிவரை அற்புதமான தாகவே இருந்தது. தம்முடைய தெய்வத் திருப்பணியைத் தொடங்குவதற்கு முன்னால் அவர் தம்மைத் தாமே மூன்று படித்தரங்களில் தயார்ப்படுத்திக் கொண்டார். முதலாவதாக அவர் காலத்தில் சமுதாயம் பெற முடிந்த முழுமையான கல்வியைத் தாமும் பெற்றார். அடுத்தபடியாக இறைவன் இருக்கின்றாரா என்பதைப் பற்றிய குழப்பநிலை நீங்கித் தம் முடைய குருநாதராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரின் கருணையினால் பரிபூரண ஞானி என்ற தெளிவும் அவருக்கு வந்தமைந்தது. மூன்றாவதாக, விவேகானந்த சுவாமிகள் ஒரு பரிவிராஜகராக நாடெங்கும் சென்று மக் களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டார். அந்தச் சமயத்தில் அவர் இந்தியக் கலாசாரத் தின் உச்சநிலையை எட்டியிருந்த காசிமாநக ருக்கு வந்து சேர்ந்தார். கையில் தண்டம் ஒன்றை ஏந்தியவராகத் தம்மைத் தொடர்ந்து வந்த குரங்குக் கூட்டம் ஒன்றிடமிருந்து விலகிச் செல்வதற்காக அவர் விரை வாக நடக்கத் தொடங்கினார். குரங்குகளோ பெருவாரியான எண்ணிக்கையில் அவரைப் பின் தொடர்ந்தன. அத்தருணத்தில் எதிர்த் திசையிலிருந்து வந்து கொண்டிருந்த சாது ஒருவர் சுவாமிகளுக்கு ஏற்பட்டிருந்த இக்கட் டான சூழ்நிலையைப் பார்த்தவுடன், 'விலங்கு களை எதிர்த்து நில்' என்று கூறிவிட்டுத் தம் வழியே போய் விட்டார். அச்செய்தியானது விவேகானந்த சுவாமிகளிடம் கிளப்பிய ஆண்மை செறிந்த பேருணர்ச்சி அவருடைய ஜீவிதம் முழுவதும் நீடித்திருந்தது. அவ் வானரங்களை அவர் கம்பீரமாக எதிர்த்து நின்றவுடன் அவைகள் நாலாதிசைகளிலும் சிதறி ஓடி விட்டன.

அறியாமை, மூடநம்பிக்கைகள், பலவீனம், குறுகிய மதவெறி ஆகிய விலங்குப் பண்பு களைக் களைவதற்காகவென்றே விவேகானந்த சுவாமிகள் இவ்வுலகின்கண் தோன்றினார். 'என் வாழ்வில் குறிப்பிடத்தக்க சாதனை ஒன்றையாவது வெற்றிகரமாக நிறைவேற்றிய பிறகுதான் இந்நகருக்குள் மறுபடியும் நுழை வேன்' என்ற அசைக்க முடியாத தீர்மானத் துடன் சுவாமிகள் மிகப் புனிதம் வாய்ந்த காசி மாநகரில் தம் ஆன்மீகப் பணியைத் தொடங்கி னார். இதற்கு முன்பும் கூட, ஆச்சரியப்படத் தக்க வகையில், மதாசாரியர்கள் பலர் இந் நகரிலிருந்துதான் தம் தெய்வீகக் கடமைகளைத் தொடங்கியிருந்தார்கள்.

ஒருமுறை இங்கிலாந்தில் சமயப் பணி புரிந்து வந்த விவேகானந்த சுவாமிகளை ஆங் கிலத் தம்பதிகள் இருவர் தம் பண்ணைக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். சுவாமிகளும் அவர்கள் அழைப்பை மனமுவந்து ஏற்றுக்கொண்டார். அவர்கள் மூவரும் அப்பண்ணையிலிருந்த மாட் டுத் தொழுவத்தை நோக்கிச் சென்றுகொண் டிருந்தபொழுது முரட்டுக்காளை ஒன்று தளையை அறுத்துக்கொண்டு அவர்களை நோக்கி வேக மாக ஓடிவந்தது. எதிர்பாராத இந்த அபா யத்தைக் கண்டு மருண்டுபோன அந்த ஆங்கி லக் கனவான் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். தனியே விடப்பட்ட அந்தமாது மயங்கிக் கீழே விழுந்து மூர்ச்சையானாள். வந்திருந்த விருந் தாளிமட்டும் எதையும் லக்ஷியம் பண்ணாதவ ராக நின்றுகொண்டிருந்தார். கோபாவேசத் துடன் தம்மை நோக்கி அந்தக்காளை வந்து கொண்டிருந்த சமயத்திலும் சுவாமிகள் தியா னத்தில் இருப்பது போன்று அமைதியுற்றவ ராகக் காணப்பட்டார். தம்மைச் சுற்றி என்ன நடந்துகொண்டிருந்தது என்று அறிவதற்குப் பேரார்வம் கொண்ட அவர், 'இந்தக் காளை என்னை முட்டித் தள்ளினால் நான் எவ்வளவு தூரம் மேல்நோக்கி வீசி எறியப்படுவேன்' என்று கணிப்பதில் ஈடுபட்டிருந்தார்.

விவேகானந்த சுவாமிகள் நின்றிருந்த இடத் துக்கு மிக அருகில் வந்து சேர்ந்த மூர்க்கத் தனம் மிகுந்த அந்தக் காளையோ அப்படியே திகைத்து நின்று அவரை உற்றுப்பார்த்தது. பிறகு, அது வந்த வேகத்துடன் திரும்பி ஓடியது. அந்தச் சந்தர்ப்பத்தில் சுவாமிகள் இடும்பைகளை எதிர்த்துப் போராடுவதுதான்

தம் ஆண்மைக்கு இயல்பாகும் என்பதுபோல் உறுதி மிக்கவராக நடந்துகொண்டார்.

'தீமையை எதிர்க்காதே' என்பது சம்பிர தாய சாதுக்களுக்குரிய கோட்பாடாக இருந்து வருகிறது. அத்தகைய சாதுக்களின் லக்ஷியமோ தம் ஜீவவியக்தியைத் துடைத்துத் தள்ளுதலாகும். ஆனல் தீமையை எதிர்த்தல் என்பது அவர்களிடமுள்ள குறைநிலையை விளக்கிக்காட்டுகிறது. விவேகானந்த சுவாமிகளோ நிறைவே வடிவெடுத்தவராக இலங்கினர். பூரண நிலையை எட்டியவனுடைய முன்னிலையில் மூர்க்கத்தனமெல்லாம் சாந்திசொரூபமாகி விடுகின்றது; அல்லது மறைந்து பட்டுப் போகின்றது. சுவாமிகளின் முன்னிலையிலும் இதுதான் நடந்தது.

மனோதத்துவப் பிரகாரம் மனிதன் ஒருவனைத் திடீரென்று ஓர் அதிர்ச்சிக்கு ஆளாக்கினல் அவனுடைய உண்மையான சொரூபம் வெளிப்படுகிறது. இந்த உண்மை பண்ணைக்கு விஜயம் செய்த அந்த மூவர் விஷயத்திலும் பிரத்தியட்சமாக நிரூபிக்கப்பட்டது. யோக சாதனம் பயின்ற ஒருவன் அதே சூழ்நிலையில் இருந்திருப்பானகில் அவன் அந்தக்காளையைத் தன் மனோ சக்தியால் வசப்படுத்த முயன்றிருப்பான். அதுவும்கூட தீமையை எதிர்ப்பதேயாம். அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு தீவிரமான பக்தனே தன்னைக்காப்பாற்றவேண்டும் என்று இறைவனிடம் பிரார்த்தித்திருப்பான். ஆனல் பரிபூரண நிலையிலே உறுதிபெற்ற ஞானியாக விளங்கிய விவேகானந்த சுவாமிகளுக்குக் காளையொன்றினல் தாக்கப்படுவதாகிய தீமையானது தானகவே நீங்கிவிட்டது.

விவேகானந்தர் கடிதத்தில் கூறியருளிய கருத்து-3

விவேகானந்த சுவாமிகள் 1889ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஏழாம் தேதி எழுதிய ஒரு கடிதத்தில் யுக்திக்குப் பொருத்தமான சில கருத்துக்களை வெளியிடுகிருர். மனிதனகப் பிறந்துள்ள எல்லாருக்கும் வாழ்க்கை முறையிலும் அறிவிலும் முன்னேற்றம் அடைவதற்கு உரிமை உண்டு. சமுதாயத்தில் பின்னணியிலிருப்பவர்களுக்குத்தான் வசதிகள் அதிகம் செய்து தரவேண்டும். ஆஸ்பத்திரிகள் நோயாளிகளுக்காக அமைக்கப்பட்டுள்ளன. ஆரோக்கியமாக இருப்பவர்கள் ஆஸ்பத்திரிகளைத் தங்கள் சொந்த நலனுக்காகப் பயன்படுத்தலாகாது. அதே விதத்தில் சமுதாயத்தில் பொருளாதாரத்துறையிலும் அறிவுத்துறையிலும் பின்னணியிலிருப்பவர்களுக்குச் சான்ருேர்கள்எல்லாவசதிகளையும் செய்துதரவேண்டும்.

பக்தியும் ஞானமும் அலாதியாக ஒரு நாட்டிற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஒரு சமூகத்திற்கோ உரியனவாகமாட்டா. பக்தியும் ஞானமும் ஈசனிடத்திருந்தே வந்துள்ள தெய்விக சம்பத்துக்களாம். அவைகளைப் பொதுவுடைமை ஆக்குமளவு மனிதன் மேலோனகிருன். கிறிஸ்துவ மத்தைக்கொண்டு வந்துள்ள பாதிரிமார்கள் இந்தியாவுக்கு அது பெரிய நலன் செய்யும் என்னும் கருத்துடையவர்களாக இருக்கிருர்கள். அந்தக்கருத்துப் பாராட்டத்தக்கது. ஆனல் அம்மதத்திலுள்ள கருத்துக்களைவிட மேலான கருத்துக்கள் பல இந்து மதத்தில் இருக்கின்றன. மதப் பெரியவர்கள் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் ஏற்றுக்கொள்ளாதவர்கள் நரகத்தில் இடர்ப்படுவார்கள் என்று கூறுவது மதவெறியாகும்.

அதே கிறிஸ்துவ மதத்துக்குரிய புஸ்தகம் ஒன்றிருக்கிறது. அதன் பெயர் 'Imitation of Christ'. அதை இயற்றியவர் தாமஸ் A. கெம்பிஸ் என்பவர். அதில் அடங்கியிருக்கும் கருத்துக்கள் அனைத்தும் வேதாந்தக் கோட்பாடுகளுக்குச் சம்மதமானவைகள். அவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரும் திறமை அலாதியாக இந்திய மக்களுக்குத்தான் உரியது. அப்படியிருந்தும் உண்மையை அறிந்துகொள்ளும் வல்லமை வேதாந்திகளாகிய இந்தியர்களுக்குத்தான் சாத்தியம் என்னும் மதவெறி நம்மைப் பிடிக்கலாகாது.

வடமொழியும் தென்மொழியும்

(C. R. சகுந்தலா—முதல்வர், சாரதா மகளிர் கல்லூரி, சேலம்)

ஒருவர் தமது கருத்தைப் பிறர்க்கு இடர்ப் படாது அறிவிக்க மொழி கருவியாக அமைந் துள்ளது. இந்தியாவின் தென் பகுதியில் வழங்கப்படும் தமிழ் 'தென்மொழி' எனவும், வட நாட்டில் ஒரு காலத்தில் சிறப்புற்றிருந்த ஸம்ஸ்க்ருதம் 'வடமொழி' எனவும் வழங்கப் படுகின்றன. ஹிந்தியை வடமொழி என்று குறிப்பிடும் வழக்கு இக்காலத்தில் காணப்படு கின்றது. ஆயினும் இங்கு வடமொழி என்பது சமஸ்க்ருதத்தையே குறிப்பதாகும். தென் னாட்டிலுள்ள திராவிட மொழிகளுக்கெல்லாம் அடிப்படையாய் இருப்பதால் தமிழ், தென் மொழி எனவும், வட நாட்டிலிருக்கும் மொழி களுக்கெல்லாம் அடிப்படையாய் இருப்பது சமஸ்கிருதமாதலால் அது வடமொழி எனவும் வழங்கப்படுவதாயிற்று. ஸம்ஸ்க்ருதம் என்பது தெளிவுறத் திருத்தி அமைக்கப்பட்டது என்று பொருள்படுகின்றது. செம்மையாக அமைந் துள்ள தமிழ் செந்தமிழ் எனப்படுகின்றது. ஆதியில் பிராகிருதமாயிருந்து பின்னர் ஸம்ஸ் கிருதமாயிற்று. இன்று மொழி வல்லுநர் மொழி யின் பிறப்பைப் பற்றிப் பல கருத்துக்களைக் கூறினாலும் பண்டையோர் சிவபெருமானால், வடமொழி பாணினிக்கும் தென்மொழி அகத்தி யர்க்கும் வழங்கப்பட்டவை என்று கூறி வந்தனர்.

"வட மொழியைப் பாணினிக்கு வகுத்தருளி,
அதற்கிணையாத் தொடர்புடைய தென்மொழியை
உலகமெலாந் தொழுதேத்தும் குடமுனிக்கு
வலியுறுத்தார் கொல்லேற்றுப்பாகர்"

என்று சிவஞான முனிவர் தமது காஞ்சிப் புராணத்தில் கூறுகின்றார். இக்கூற்று இவ் விருமொழிகளின் தெய்வத்தன்மையை அடிப் படையாகக் கொண்டெழுந்ததெனலாம். இரு மொழிகளிலும் சமயச் சார்புடைய நூல்கள் மிகுதியாக உள்ளன. இம்மொழிகளிலுள்ள தோத்திரப் பாடல்களும், சாத்திர நூல்களும், பக்தியையும் மெய் ஞானத்தையும் வளர்க்கும் கருவிகளாகின்றன. சமயக் கருத்துக்கள் மிகுந் துள்ள காரணத்தால் இறைவனே இம்மொழி களை அருளிச் செய்தான் என்று கூறும் மரபு தோன்றியுள்ளது. மேலும் இவ்விரு மொழி களும் ஒருங்கிணைந்த பெருமைக்குரிய பழம் பெரும் மொழிகள் என்பதனையும் இம்மொழி களுக்கிடையே ஏற்றத்தாழ்வோ, அதை முன் னிட்டு வரும் பூசல்களோ இருக்கலாகாதென்ற கருத்தையும் வெளிப்படுத்துகின்றது.

இந்தியாவின் முதுமொழியாகிய சமஸ் கிருதம் பல்லாயிரம் ஆண்டுகளாக நாட்டின் பொது மொழியாக இருந்து வந்தது. இலக்கிய வளர்ச்சி, பண்பாட்டு மலர்ச்சி ஆகிய இரண் டினையும் பெற்றுள்ள அந்நிய மொழிகளுக்குள் பெரும்பாலான மொழிகள் ஸம்ஸ்கிருதத்தி லிருந்து பிறந்து வளர்ந்தனவாகும். இந்திய மக்களுள் பெரும்பகுதியினர் ஸம்ஸ்கிருத மர பைச் சார்ந்த மொழிகளைப் பேசுபவராகவே இருக்கின்றனர். எனவே இலக்கிய வளம் இல்லாத ஹிந்தி மொழியைக் காட்டிலும் இலக் கிய வளம் மிகுந்த இம்மொழி இன்றும் பொது மொழியாக அமையும் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்னாட்டிலுள்ள திரா விட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழி களைத் தவிர மற்ற வளர்ச்சிபெற்ற வட இந்திய மொழிகளெல்லாம், சமஸ்கிருதத்திலிருந்து வந் தனவே. இந்தியாவில் பேச்சிலிருக்கின்ற எல்லா மொழிகளிலும் சமஸ்கிருதம் வேண்டிய வாறு பரவியிருக்கின்றது. மேலும் வெளி நாடுகளிலுள்ள சிங்களம், மலாய், பர்மியம் ஆகிய மொழிகளிலும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மொழி இந்துமதம், பண்பாடு ஆகிய இரண்டிற்கும் அடிப்படை யான மொழியாகும். வேதங்கள், உபநிடதங் கள், ஆகமங்கள், இதிகாசபுராணங்கள் ஆகிய அனைத்தும் வடமொழியாலாக்கப்பட்டவை. ஆறு சமயங்களுக்கும் உரிய சாத்திரங்கள் அதில் அமைக்கப்பெற்றிருக்கின்றன. இன்று மக்களிடையே பேச்சு வழக்கில் இல்லாமற் போனாலும், இம்மொழியிலுள்ள நூல்களைப் படித்து, ஆராய்ந்து வரும் புலவர் கூட்டங் களில் பேசப்பட்டு வருகின்றது. இன்றும் கர்நாடகத்தில் சில கிராமப் பகுதிகளில் இம் மொழிபேசப்பட்டு வருகின்றதென அறிகின்

ளேம்.

தமிழ் மொழியின் பழமையான இலக்கண நூலாகிய தொல்காப்பியம், சொற்களின் வகைகளைப் பற்றிக் கூறும்போது,

"இயற்சொல், திரிசொல், திசைச்சொல்
வடசொல்லென்று
அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே"

என்று கூறுகின்றது.

செய்யுள் செய்யப்படுவதற்குரிய சொற்களில் வடசொல்லையும் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அக்காலத்திலிருந்தே தமிழ் மொழியில் வடசொற்கள் இடம் பெற்றிருந்தன என்பதனை அறிகின்றோம். ஆயினும் மிகக் குறைந்த அளவு வடமொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ள திராவிட மொழி தமிழேயாகும். அச்சொற்களை எப்படி எடுத்தாள்வது என்பது பற்றியும் அவரே கூறியுள்ளமை குறிப்பிடத்தகும்.

"வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தொடுபுணர்ந்த சொல்லாகுமே" என்றார்.

வடமொழிக்கே உரியதான சிறப்பெழுத்துக்களைக்கொள்ளாது, இருமொழிகளுக்கும் பொதுவாக அமைந்துள்ள எழுத்துக்களால் அமைத்தல்வேண்டும் என்று கூறியவர், அடுத்து வடமொழிக்கே உரிய சிறப்பெழுத்துக்களை மேற்கொள்ள வேண்டியவிடத்து, அவற்றைப் பயன்படுத்துவதும் பொருத்தமானதே என்றார். இக்கூற்று வடமொழிச் சொற்கள் மிக மிக அருகியே தமிழ் இலக்கியங்களில் இடம்பெற்ற சங்க காலத்திற்கும் முற்பட்ட தொல்காப்பியர் கால நிலையைக் காட்டுகின்றது. வடசொல்லாட்சி பெருகிவந்த காலத்தில் வாழ்ந்த நன்னூல் இலக்கண ஆசிரியர் பவணந்தி முனிவர் இருமொழிகளிலுமுள்ள பொது எழுத்துக்களாலும் சிறப்பெழுத்துக்களாலும், இரண்டும் இணைந்தும் அமையலாம் என்றார். இவை யாவும் வடமொழிச் சொற்களைத் தமிழ் மொழியில் வேண்டிய இடத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதனைத் தமிழ் இலக்கண நூலாசிரியர்களே எடுத்துரைத்துள்ளனர் என்பதனைத் தெளிவாக்குகின்றன.

சிவபெருமான் வடமொழியாகவும் தென்மொழியாகவும் விளங்குகிறான் என்று இம்மொழிகளின் பெருமைக்கு ஏற்றம் சேர்த்தார் சமயக் குரவர்களுள் ஒருவரான திருநாவுக்கரசு சுவாமிகள். திருச்சிவபுரத்தில் எழுந்தருளியுள்ள சிவனாரைப் பாடுமிடத்து,

"வானவன் காண் வானவர்க்கு மேலோன்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண்" என்றார்.

தேவர்களுக்கெல்லாம் மேலோனாகத் திகழும் சிவபெருமான், வடமொழியும் தென்தமிழும் மறை நான்குமாயினான் என்ற கூற்று, அம்மொழிகளின் தெய்வீகச் சிறப்பியல்புகளைக் கூட்டுவதோடு இரண்டு மொழிகளும் ஒருசேர வைத்து எண்ணத் தகுந்தவை என்பதனையும் வெளிப்படுத்துகின்றது.

திருவீழிமிழலையுள் நான்கு வேதங்களையும் கற்ற அந்தணர்கள் வாழ்ந்திருந்தனர். வேத ஒலி கோவில்களில் ஒலித்துக்கொண்டிருந்தது. இங்கிலையில் தமிழோடிசை கேட்கவும் விருப்பம் கொண்டான் இறைவன் என்று பாடுகின்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். உள்ளத்தை உருக்கும் திருவாசகத்தைப் பாடிய மாணிக்கவாசகர் 'இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்' என்று திருப்பள்ளியெழுச்சிப் பாடலொன்றில் கூறுகின்றார். வடமொழியோடு தென்மொழியையும் ஒருசேர இணைத்துக்காணும் நோக்கு நாட்டில் சிறப்பிடம் பெற்றிருந்தது என்பதனை அறிகின்றோம். இம்மொழிகளின் ஒருங்கிணைந்த பெருமையையும், சிறப்பினையும் சமயச் சான்றோர் பல்வேறு வகைகளில் எடுத்துரைத்துள்ளனர்.

வடமொழியாய் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் எடுத்துரைத்து, ஆன்மாவுக்கு அறிவையும் செயலையும் கொடுப்பன, வேதாகமங்கள் என்றார் சிவஞான சித்தியாரின் ஆசிரியர் அருள் நந்தி சிவாசாரியார். எனவே சைவ சித்தாந்த சாத்திர நூலோரும் வடமொழியின் ஏற்றத்தை உணர்ந்திருந்தனர். தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு நல்லுணவாகச் சம்ஸ்கிருதம் இருந்து வந்துள்ளதைத் தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம்.

இறைவன் ஒருவனே பல்வேறு சமயங்களில் பல்வேறு பெயர்களைக்கொண்டு விளங்குகின்றான். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஆயிரம் திருநாமங்கள் அமைந்துள்ளன. 'சிவ ஸஹஸ்ர

நாமம்', 'லலிதா ஸஹஸ்ரநாமம்,' 'விஷ்ணு ஸஹஸ்ரநாமம்' என வழிபடு தெய்வங்களுக்கெல்லாம், ஆயிரக்கணக்கில் பெயர்கள் வடமொழியில் பொருள்பட அமைந்துள்ளன. ''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இலார்க்கு ஆயிரம் திருநாமம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ'' எனவும், ''பேர் ஆயிரம் உடைப் பெம்மான் போற்றி'' எனவும் வடமொழியிலுள்ள ஆயிரம் திருநாமங்களையே மாணிக்கவாசகரும் குறிப்பிடுகின்றார். தத்துவங்களே இறைவன் பெயர்களாக வடிவெடுத்துள்ளனவாதலால் அவைகளை ஆராய்ந்து அறியுமளவு பக்தியும், பரஞானமும் நம் உள்ளத்தில் உருவெடுக்கின்றன.

இடைக்காலத்தில் தென்மொழிச் சொற்களும், வடமொழிச் சொற்களும் கலந்துவரும் நடை அழகுடையதெனவும், மணிப்பிரவாள நடையெனவும் போற்றப்பட்டது. சென்ற நூற்றாண்டுவரை வேறுபாடின்றி வடசொற்கள் தமிழ் நூல்களில் இடம் பெற்று வந்தன. சமயச் சார்புடைய கலைச் சொற்கள் வடமொழியில் மிகுதியாக இருப்பதால் சிறப்பாகத் தோத்திரப் பாடல்களிலும் சாத்திர நூல்களிலும் இடம் பெற்றன. சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க அடிகளின் திருவருட்பாவரை இந்நிலையைத் தெளிவாகக் காணலாம். இருப்பினும் இம்மொழிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகளைக் கற்பித்து, அதன் காரணமாக எழுந்த மொழிப்பூசல்களும் அவ்வப்போது இடம் பெற்று வந்துள்ளன.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த தாயுமானவர் வடமொழி, தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த பயிற்சி பெற்றவர். இவர் பாடல்களில் மிகுதியான வடமொழிச் சொற்கள் காணப்படினும் தமிழின் இனிமை குறையாதவாறு அமைந்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும். மேலும் அவர் இவ்விரு மொழிகளைப் பற்றிய தர்க்க வாதங்களையும், மொழிப்பூசல்களையும் கண்டு மனம் நொந்து ''கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்'' என்றார். மொழிப் பயிற்சியும், பாண்டித்தியமும், பூசல்களும் முக்திக்கு உதவுமா என்று அழகுறக் கூறியுள்ளமை சிறந்த பாடம் புகட்டும் முறையில் அமைந்துள்ளது.

''வடமொழியிலே வல்லானொருத்தன்
வரவுந்திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரின் அங்ஙனே வடமொழியில்
வசனங்கள் சிறிது புகல்வேன்
வெல்லாமல் எவரையும் மருட்டிவிடவகை
வந்த வித்தையென் முக்திதருமோ'' என்றார்.

தத்துவப் பூசல்களை வெறுத்து, வேதாந்த சித்தாந்த சமரசம் கண்டறிந்த தாயுமானவர் மொழிப் பூசல்களையும் தவிர்க்க வேண்டுமென்ற கருத்தைத் தெளிவாகக் கூறியுள்ளார். வடமொழியின் சிறப்பைக் கூறி வருபவரிடம் தென்மொழியின் பெருமை பேசுவேன், தென்மொழியின் பெருமை பேசுவோரிடம் வடமொழியின் சிறப்புக் கூறுவேன் எனவரும் கூற்றுக்கள் அக்காலத்திலிருந்த மொழிப்பூசல்கள் பொருளற்றவை என்ற தாயுமானவர் கருத்தையும் வெளிப்படுத்துகின்றன. இவ்விரு மொழிகளும் தமக்கேயுரிய சிறப்பும் பெருமையும் உடையன என்பதும் தெளிவாகின்றது.

சமஸ்கிருத மொழியிலுள்ள சிறந்த கலை ஞானங்களைப் பயன்படுத்தவும், ஆராய்ச்சி செய்யவும் ஐரோப்பிய, அமெரிக்கநாடுகளிலுள்ள பல்கலைக் கழகங்களில் இம்மொழி இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த மாக்ஸ்முல்லர் (Max Mullar) என்ற ஜெர்மானியர் வடமொழி நூல்களில் சிறந்த பயிற்சி பெற்றவர். ரிக் வேதம் முதலாகப் பல வடமொழி நூல்களைத் தம் மொழியில் பெயர்த்ததுடன், சமஸ்கிருத இலக்கிய வரலாற்றையும் எழுதியுள்ளார். இம்மொழியின் பெருமையை மற்றவர்கள் உணர்ந்து பயன்பெறும் இக்காலத்தில், நம் முன்னோர் நமக்கு விட்டுச் சென்றுள்ள ஒரு பெரும் கருவூலத்தை, அதன் தன்மையும், சிறப்புமறியாது நாம் புறக்கணிப்பது முறையன்று. பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் தோன்றியுள்ள பெருமக்கள் அனைவரும் தங்களுடைய அரிய பெரிய கருத்துக்களையெல்லாம் வடமொழியிலேயே அமைத்து வைத்துள்ளனர். அப்பெருமக்களுடன் தொடர்பு கொள்வதற்கும், அக்கருத்துக்களை அறிந்து பயன்பெறவும் இம்மொழியைக் கற்பது இன்றியமையாததாகின்றது. சிறப்பாக இந்தியா

முழுவதையும் ஒரு ஞானபூமியாகக் கருதுதற்கு இம்மொழி உறுதுணையாகின்றது.

நம் நாட்டில் தாய்மொழிக் கல்வியுடன் இரண்டாவது மொழியாகக் கற்கும் தகுதி பெற்ற மொழி சமஸ்கிருதமேயாகும். இம் மொழி இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளோடும், எல்லாக் கலை வல்லுநரோடும் தொடர்பு கொள்ளுதற்குச் சிறந்த கருவியாக அமைந்துள்ளது. உயர் நிலைப் பள்ளிகளில் வடமொழி கட்டாயப் பாடமாக்கப்படின் அது நல்ல துவக்கமாகும். தொடர்ந்து கல்லூரிகளிலும் இம்மொழி கற்பிக்கப்படுவது, சிறந்த பயிற்சி பெறுவதற்கு ஏதுவாகும். இரண்டு, அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் பயிற்சி பெறுதல், இலக்கிய நயங்களை, சுவைகளை அனுபவிக்கும் திறனை வளர்க்கின்றது. ஒரு மொழியுடன் மற்றொரு மொழியைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது மொழி வல்லமை மிக உண்டாகிறது. வடமொழியில் பாணினியின் இலக்கண நூலும், தென்மொழியில் தொல்காப்பியரின் இலக்கண நூலும் மொழியின் தன்மைகளை எடுத்துரைப்பதோடு வாழ்க்கைத் தத்துவங்களையும் எடுத்துரைக்கின்றன. இவ்விரு மொழிகளையும் கற்றவர்களே இவற்றின் பயன் முழுவதையும் பெறும் வாய்ப்புடையராவர்.

அடுத்து, நவீன கலைஞானங்கள் அனைத்தும் ஆங்கில மொழியில் அமைந்துள்ளதால், அதனைக் கற்பதும் தேவையாகின்றது. உலகில் உள்ள நாடுகள் எல்லாவற்றுடனும் தொடர்பு கொள்ளவும், வளர்ந்துவரும் அறிவியலின் நுண்ணியஆராய்ச்சியின் விளைவுகளை அறியவும் இம்மொழி பயன்பட்டு வருகின்றது. எனவே உயர்தரக் கல்வியை நாடுவோர் அவரவர் இயல்பை விளக்கும் தாய்மொழியையும், இந்திய நாட்டுப் பண்பாட்டை விளக்கும் வடமொழியையும் கற்பதோடு, புற உலகுடன் இணக்கம்கொள்ள ஏதுவாகிய ஆங்கில மொழியையும் கற்றல் வேண்டும். விவேகானந்த சுவாமிகளுக்கு தாய் மொழியாகிய வங்காள மொழியையும் இந்தியாவின் பண்பாட்டிற்கேற்ப வடமொழியையும், உயர்தரக் கல்வியின் வாயிலாக ஆங்கிலத்தையும் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அம்மொழிகளின் வாயிலாக அவர் உலகுக்குக் கொடுத்துள்ள கொடையே இம்மொழிகளின் பயனைத் தெளிவாக்குகின்றது. எனவே, இக்காலத்தில் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியமூன்று மொழிகளிலும் பயிற்சி பெறுதல் நல்லது.

முதல் மனிதன் ஒரு குளத்துக்குள் சென்று தண்ணீர் அருந்தியதாகக் கூறினன். இரண்டாமவன் அதே குளத்துக்குள் சென்று பானி அருந்தியதாகக் கூறினன். மூன்றமவன் அதே குளத்துக்குள் சென்று வாட்டர் அருந்தியதாகக் கூறினன். நான்காமவன் அதே குளத்துக்குள் சென்று ஜலம் அருந்தியதாகக் கூறினன். அக்குளத்தில் இருந்ததை முதல்வன் தண்ணீர் என்றும், இரண்டாமவன் பானி என்றும், மூன்றமவன் வாட்டர் என்றும் நான்காமவன் ஜலம் என்றும் கூறவே அவர்களுக்கிடையே சண்டை கிளம்புவதாயிற்று. அவ்வழியாக வழிப்போக்கன் ஒருவன் வந்தவன் அந்நால்வருடைய சண்டைக்குக் காரணத்தை அறிந்து அந்நால்வர்களையும் சேர்த்துக் குளத்துக்குள் அழைத்துச்சென்றான். "நீங்கள் அருந்திய பொருள் யாது?" என்று வழிப்போக்கன் அந்நால்வர்களையும் கேட்டபொழுது முதலாம் மனிதன் அங்குள்ள பொருளைத் தண்ணீர் என்றான். இரண்டாமவன் அதே பொருளைப் பானி என்றான். மூன்றமவன் அதேபொருளை வாட்டர் என்றான். நான்காமவன் அதே பொருளை ஜலம் என்றான். அப்பொழுது அவ்வழிப் போக்கன் அவர்களிடம் கூறியதாவது: "நீங்கள் அனைவரும் ஒரே பொருளைத்தான் அருந்தியிருக்கிறீர்கள். உங்களுடைய மொழியில் அதற்கு வெவ்வேறு பெயர்களைக் கூறுகிறீர்கள். நீங்கள் நால்வரும் கூறுவது உண்மை. உங்களுக்குள் சண்டைவேண்டாம்." இங்ஙனம் தெய்வம் ஒருவர். அவருக்குப் பெயர்கள் பல.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (397) ஏசுநாதர், புத்தர், முகம்மது, மஹாவீரர் ஆகியோர் மதத்தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்களைக் கடவுள் என்று கருதுவது பொருந்துமா?

ஆன்மீகத்துறையில் பெருமக்களாகத் திகழ்கின்றவர்கள் பலர் தெய்விகம் வாய்க்கப்பெற்றவர்களாக இருக்கின்றார்கள். உண்மையில் பரம்பொருள்தான் பிரபஞ்சமாகக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கிறது. அப்பிரபஞ்சமோ நலன், கேடு இரண்டும் வாய்க்கப்பெற்றதாக உள்ளது. எது மனிதனுக்குக் கேடாகத் தென்படுகிறதோ அது உண்மையில் முற்றிலும் கேடானது அன்று. ஏதேனும் ஒரு பாங்கில் அது உலகிற்கு நலம் தரவல்லது என்பது ஆராய்ந்து பார்த்தால் தெரியும். இனி நல்லது என்பதில் நலனே பெரிதும் நிறைந்திருக்கிறது. இது சிருஷ்டியின் கூறு.

மதாச்சார்யர்களாகவும் தெய்விகம் நிறைந்தவர்களாகவும் உள்ள மக்கள் உலகில் சிலர் தோன்றியிருக்கின்றனர். பொதுமக்கள் பலர் அப்பெரியவர்களைப் பெரிதும் பாராட்டுகின்றனர். அன்னவர்களைக் கடவுளாக வைத்துக் கொள்வது பொருந்துமா என்பது கேள்வி. கடவுள் என்பது நிறைபொருள்; தத்துவங்கள் அனைத்துக்கும் உறைவிடம். நீர் நிலைகளுள் கடலுக்கு நிகரானது பரவஸ்து. ஆகையினால் பெருமக்களைக் கடவுளாக வைத்து வணங்குவது தத்துவத்துக்குப் பொருந்தாது. ஆயினும் அவர்களைப் போற்றி வணங்குவதில் குற்றம் ஏதும் இல்லை. ஆத்ம சாதனம் புரிந்துவருபவர்களுள் ஒரு சிலர் பெருமக்களைக் கடவுளாகக் கருதி வணங்குகின்றனர். அப்படி வணங்குவதன் வாயிலாக வணங்குபவர்கள் படிப்படியாக மேல்நிலைக்குவருகின்றனர். பரம்பொருள் அகண்டாகாரமானது. பெருமக்களை வணங்குதல் படிப்படியாக அகண்டாகாரமாக வடிவெடுக்குமானால் வணங்குகின்ற சாதகனும் வணங்கப்பெறுகிற பெருமக்களும் அகண்டாகாரத்தில் லயமாகின்றனர். இக்காரணத்தை முன்னிட்டே பெருமக்களைப் பரம்பொருளுக்கு நிகராக வைத்து வணங்குதற்கு ஆன்றோர்கள் அனுமதி தருகின்றனர்.

கேள்வி: (398) நல்லதைச் செய்ய மனம் விரும்புகின்றது. அதைப் பழக்கத்தில்கொண்டு வர முடிவதில்லை. ஏன்?

மக்களை மூன்று படித்தரங்களில் வைத்துப் பாகுபடுத்தலாம். பரிபாகத்தில் அவர்கள் அடைந்துள்ள நிலை தலை, இடை, கடை என மூன்றாகப் பாகுபடுகிறது. மக்களுள் பண்பாட்டிலே தலைத்தரமாகத் திகழ்கின்றவர்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சிகள் அனைத்தையும் நன்கு செய்து சாதிக்கின்றனர். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர் திண்ணியராகப் பெறின்' என்னும் கோட்பாடு அவர்களுக்கு முற்றிலும் பொருந்தும். அடுத்தபடியாக இடைத்தரத்தில் இருக்கின்றவர்களுக்கு வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்து அமைகின்றது. கடைத்தரமான மனிதனோ நல்லது எதையும் சாதிக்க முடியாது திணறுகின்றான்.

மக்கள் எல்லாரும் ஆத்ம சாதனங்கள் பயிலக் கடமைப்பட்டிருக்கின்றனர். பயிற்சியில் முன்னேற்றம் அடைவதற்குத் தீவிர உணர்ச்சியை வளர்க்கவேண்டும். உணர்ச்சியின் வேகத்திற்கு ஏற்ப மனிதன் திண்ணியனாகின்றான். ஆதலால் ஆத்ம சாதனங்களை இடையறாது ஊக்கத்துடன் பயின்று வர வரச் சாதகனுடைய வல்லமை அதிகரிக்கின்றது. ஆதலால் தளரா ஊக்கத்துடன் தோல்விகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாது ஆத்மசாதனங்கள் புரிந்து வருவதே முன்னேற்றத்துக்கு உற்ற உபாயமாம்.

கேள்வி: (399) நல்ல காரியத்துக்கு உற்றார் உறவினர் தடை உள்ளதே? எப்படி மீள்வது?

உற்றார் உறவினர் எனப்படுகின்ற எல்லாரும் உடல் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவர்களாகின்றார்கள். அறிவிலும் பண்பாட்டிலும் அவர்களுக்கிடையில் தாரதம்மியம் இருப்பது இயல்பே. ஒருவருக்கு நல்லதாகத்தோன்றுவது மற்றவருக்கு நல்லதாகத் தோன்றுவதில்லை. ஆகையினால் அன்னவர்களிடமிருந்து தடை வருகிறது. பொருந்தாத தடைக்கு முயற்சியுடைய நல்லவன் அடிமைப்படலாகாது. உற்

ரு, உறவினர் மனம் நொந்துகொள்ளும்படியும் நடந்துகொள்ளலாகாது. படிப்படியாக நல்ல வழியில் செல்வதன் பயனை அவர்களுக்கு எடுத்து விளக்கிக் காட்டி அவர்களையும் நல் வழிக்குத் திருப்புவது உசிதம். ஒரு சிலர் திரும்புவர்; வேறு சிலர் திரும்பமாட்டார்கள். அன்னவர்களின் மனம் நோகாதபடி நடந்து கொண்டு நல்ல வழியில் செல்கின்றவன் தன் போக்கில் போவதே உசிதம்.

கேள்வி: (400) சமுதாயத்தில் உள்ள நல்லவர்கள் தீமைகளைக் கண்டு ஒதுங்கி இருந்து விடுகிறார்களே? தீமைகளைத் தடுக்குமாறு அவர்களைத் தூண்டுவது எப்படி?

'நன்மை கடைப்பிடி' என்பது கோட்பாடு. தீமையைத் தவிர்க்கவும் மனிதன் கடமைப் பட்டிருக்கின்றான். தீமையைத் தவிர்க்கும் நிலையில் இருக்கின்றவன் அதற்கேற்ற முயற்சி எடுத்துக்கொள்ளாது ஒதுங்கி இருப்பது பொருந்தாது. ஒதுங்கி இருப்பதற்குக் காரணங்கள் சில இருக்கலாம். அச்சம், ஊக்கமின்மை, மந்த புத்தி போன்ற சிறுமைகள் அதற்குக் காரணங்களாக வந்தமையலாம். நல் வழியில் செல்கின்றவன் தீவிரமாகத் தன் கடமையில் ஈடுபடுவதற்கிடையில் இத்தகைய மந்த அதிகாரிகளைத் தட்டி எழுப்பி அவர்களையும் நல்வழியில் தீவிரமாக முயலும்படி தூண்டுதல் போடவேண்டும்.

கேள்வி: (401) ஆன்மா, உடல் இவற்றில் அழியாதது எது? உடலை அழியாமல் காக்கலாம் என்று சித்தர்கள் கூறுகிறார்களே?

நித்திய அநித்திய வஸ்துவைப்பற்றி விசாரம் பண்ணுவது ஆத்ம சாதனத்தில் இன்றியமையாத பகுதியாக வந்துள்ளது. புருஷன் பிரகிருதி என்பது இரண்டு கூறுகள். புருஷன் என்ப் பகரப்படுவது ஆத்ம சொரூபம். பிரகிருதி எனப் பகரப்படுவது பிரபஞ்சம். இவ்விரண்டனுள் புருஷ தத்துவம் என்றைக்கும் நிலைத்துள்ளது. பிரகிருதி நிலையற்றது. அது ஓயாது மாறி அமைந்துகொண்டிருக்கிறது. அது சிருஷ்டி காலத்தில் தோற்றதத்துக்கு வருகிறது. பிரளய காலத்தில் அது ஒடுங்குகிறது.

மனிதனுடைய அமைப்பில் புருஷ தத்துவம், பிரகிருதி தத்துவம் இரண்டும் அமைந்திருக்கின்றன. புருஷ தத்துவம் யாண்டும் நிலைத்திருக்கிறது. பிரகிருதி தத்துவமோ சிசுவாகத் தோற்றத்துக்கு வருகிறது; வளர்கிறது; பிறகு தேய்கிறது; கடைசியில் மறைகிறது. இது இயற்கையின் கூறு. மாறுபாடடைந்து மறைந்துபட்டுப்போம் தத்துவத்தை மாறுபாடடையாது வைத்திருப்பது எங்ஙனம்? மறைந்துபட்டுப் போவதைத் தடுப்பது எங்ஙனம்?

எது ஓயாது ஜீரணமாகிக் கொண்டிருக்கிறதோ அது தேகம். அப்படி அழியும் தன்மையுடைய தேகத்தை நெடுநாள் அழியாது காப்பாற்றலாம். அப்படிச் செய்வதற்குக் காய சித்தி என்று பெயர். கெட்டுப்போகும் உணவை நெடுநாள் கெட்டுப்போகாது காக்கலாம். பின்பு அது கெட்டுப்போகிறது. அதே விதத்தில் சித்தியடையப் பெற்ற தேகமும் பிரகிருதியினின்று வந்திருப்பதால் அது மறைந்துபட்டுப் போகின்றது. எந்த சித்த புருஷனாவது ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வந்ததற்குச் சான்று இல்லை. இனியும் இருக்கப் போவதில்லை. ஆகையினால் இது வெறும் நம்பிக்கைக்குரிய விஷயமே ஒழிய தத்துவத்துக்குப் பொருந்தாது.

கேள்வி: (402) உணவுக்காகப் பிற உயிர்களை வதைக்கிற நாம் பசுவதையை மட்டும் தடைசெய்யக் கோருவது நியாயமா?

ஓர் உயிர் மற்றோர் உயிரைக் கொன்று தின்று வாழ்ந்திருப்பது இயற்கையின் திட்டமாகிறது. எந்த உயிர் பரிணமத்தில் மேல் நிலைக்கு வந்திருக்கிறதோ அதன் உடல்தான் அந்த நிலையை எட்டியிருக்கிற ஏனைய உயிர்களுக்கு உணவாகிறது. ஆகவே, மானுடர்கள் பலர் ஆடு, மாடுகளைக் கொன்று தின்று உயிர் வாழ்ந்து வருகின்றனர். அதற்கிடையில் பசுவதை கூடாது என்னும் கோட்பாடு பிறந்ததற்குக் காரணம் உண்டு. மனிதனுக்குத் தாராளமாகப் பால் கொடுத்து உதவும் தகுதி பசுவுக்கு உண்டு. அதன் மலம், மூத்திரம் ஆரோக்கியம் வாய்ந்தவைகள். ஆகவே மனிதனுக்குப் பேருதவி பண்ணும் தகுதியைப் பசு படைத்திருக்கிறது. அதைக் கொன்று தின்பதைவிட வளர்த்துப் பாதுகாத்து வருவதில் அதிகப் பயன் உண்டு.

குசேலமாமுனிவர் சரிதம்

சுகமுனிவர் பரீக்ஷித் மகாராஜனுக்குக் குசேல மாமுனிவர் சரித்திரத்தைக் கூறினர். இந்தியாவின் வடக்கேயுள்ள மதுராபுரிக்குப் பக்கத்தில் அவந்தி என்னும் ஊர் இருக்கிறது. அது மருதநிலம் சூழ்ந்துள்ள ஊராகும். நெற்பயிர்கள் கதிர்விட்டுக் குலேகுலேயாக இருக்கும். தாமரை மலர்களிலிருந்தும் கொடிப்பூ, ஒட்டுப்பூ, நீர்ப்பூ முதலிய பூக்களிலிருந்தும் ஒழுகும் தேன் பெருக்கெடுத்து ஓடும். அது இத்தகைய செல்வம்படைத்த ஊராகும். முனிவர்கள் வாழும் மடங்களும், கல்விச்சாலேகளும், தர்மச் சாலேகளும் அவ்வூரில் ஆங்காங்கு அமைந்திருந்தன. அவ்வூரில் கண்ணன் மீது பக்தியுடைய குசேலர் என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். கிழிந்த ஆடைகளேத் தைத்து உடுத்திக்கொள்வார். அவருக்கு அழகிலும், கற்பிலும் சிறந்தவளாகவும், பொறுமையில் பூதேவிக்கு ஒத்தவளாகவும் உள்ள அணங்கு மனேவியாக வாய்த்திருந்தாள். அவளுடைய பெயர் சுசீலே. அவள் நற்குடியில் பிறந்தவள். வந்த விருந்தை அன்புடன் உபசரித்து வரும்விருந்தை எதிர் பார்த்திருக்கும் அன்புடையவள். கணவன் கருத்து அறிந்து ஒழுகும் தன்மையுடையவள். கணவனுல் கொடுக்கப்பட்டதைக் கொண்டு மகிழ்ச்சி அடைபவள். வாய்மை உடையவள். குசேலர் இத்தகைய மனேவியோடு இல்லறம் நடாத்தி வந்தார். அவர் வறுமையில் இருந்தாரெனினும் அவருக்கு வேண்டியவாறு மக்கள் செல்வம் வாய்த்திருந்தது. பகவானே மனதில் கொண்டு வறுமையில் செம்மை என்ற கோட்பாட்டுக்கு ஏற்பக் குசேலர் இல்லறத்தை நடாத்தி வந்தார்.

சுசீலே ஒருநாள் தன் நாயகனேப் பார்த்துக் கூறியதாவது: “அன்புத் தெய்வமே! வறுமையால் நம் குழந்தைகள் வாடிக்கொண்டிருக்கின்ருர்கள். பசிதீர உண்பதற்கில்லாமல் சோர்ந்து இருக்கின்ருர்கள். வறுமையைப் போன்றது கொடியது ஒன்றுமில்லே. இவ் வறுமையை ஒழிக்கக் கண்ணபிரானே தக்கவராவார். அவர் உங்களுக்குக் கல்விப் பருவத்தில் நண்பராக இருந்தார். எனவே நீங்கள் அவரிடத்தில் சென்று அவர் அளிக்கும் செல்வத்தைப் பெற்று வந்தால் குடும்பத்திலுள்ள வறுமை நீங்கிக் குழந்தைகள் நன்கு வாழ்வார்கள். கண்ணன் உம்மைக் கண்ட அளவில் வேண்டிய செல்வத்தை வாரி வழங்குவார். இதற்கு ஐயமில்லே. நல்லவர்களுக்குக் கொடுமை செய்து வந்த கம்சன் போன்ற கொடியவர்களேக் கொன்று நல்லவர்களே யாண்டும் காப்பாற்றி வருகின்ற அவர் நம்முடைய வறுமையையும் போக்கி வைப்பார். ஒருவேளே செல்வம் கிடைக்காவிட்டாலும் அவர் தரிசனத்தைப் பெறுவது நீங்கள் செய்த பாக்கியமாகும்.” இங்ஙனம் தம் மனேவி சுசீலே கூறியதைக் கேட்ட குசேலர் கூறியதாவது: “முற்பிறப்பில் தர்மம் செய்தவர்கள் இப் பிறப்பில் அதன் பயனே அனுபவிப்பார்கள். நலம் செய்வார் ஒருநாளும் கேடு அடைவதில்லே. தர்மம் செய்யாதவர்கள் துன்பப்பட்டாக வேண்டும். கல்லினுள் இருக்கும் சிறு தேரைக்கும் கருப்பையில் வாழும் சிசுவுக்கும் உணவு அளித்துக் காப்பவன் இறைவன் அன்ருே? அவ்விறைவன் நம் சிறுவர்களேக் கைவிடுவாரா? செல்வம் மிகப்படைத்திருக்கிருேம் என்றும், அழகுமிகப் படைத்திருக்கிருேம் என்றும், புத்திரர்களேப் பெற்றிருக்கிருேம் என்றும், எல்லா வசதிகளும் பெற்றிருக்கிருேம் என்றும் செருக்குடைய மூடர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். தத்துவத்தை உணர்ந்த பெரியோர்கள் அவைகளேச் சிறிதும் மனதில் வாங்கிக்கொள்ள மாட்டார்கள். பொருளேப் பெற வேண்டுமென்று கொலே, களவு, வஞ்சகம் முதலிய கொடிய செயல்களேப் புரிபவர்கள் இருக்கின்ருர்கள். பிறர் நலத்தைச் சிறிதும் கவனியாது சுயநலமுடையவர்கள் குபேர சம்பத்துக்கள் பெற்றிருந்தாலும் பயன் யாது? அவர்கள் காலதூதர்கள் வரும் பொழுது என்ன செய்வார்கள்? அப்பொழுது அப்பொருள்களால் யாது பயன்? எனவே ஐசுவர்யத்தைத் தேடிச் செல்பவர்கள் அறிவிற் சிறியவர்கள் ஆவார்கள். செல்வம் இன்று வந்து நாளே மறைந்து போகும். இருக்கும்பொழுதும் அதனுல் பெரும் துன்பமே வந்துகொண்டிருக்கும். அழியாத செல்வம்

ஈசனுடைய திருவடியே ஆகும். மேலும் நமக்கு வாய்த்துள்ள குழந்தைகளை நமக்கு முன்னர் எத்தனைபேர்கள் தங்கள் மைந்தர்களாகப் பாராட்டினார்களோ? நமக்குப் பின்னர் அவர்களை மைந்தர்களாகப் பாராட்டுவதற்கு எத்தனைபேர் காத்துக் கொண்டிருக்கிறார்களோ? இதை நாம் அறியோம். இக்குழந்தைகளுக்கு நோய் ஏற்படும்பொழுதும், அவர்கள் சரியான வழியில் செல்லாத பொழுதும், அவர்கள் உயிரை யமதூதர்கள் வந்து கைப்பற்றும் போதும் அவர்களை முன்னிட்டுத் துன்பப்பட்டாக வேண்டும். சிறு வயதில் நமக்கு அடங்கி நடக்கின்ற புத்திரர்கள் வயதானதும் நம்மைப் புறக்கணித்துவிட்டுத் தங்கள் மனம் போன போக்கிலேயே போவார்கள். அப்பொழுது அவர்களைக் குறித்துத் துன்பப்பட நேரிடும். நாம் எடுத்த பிறவிகள் கணக்கற்றவை. நமக்கு அமைந்த சுற்றத்தாரும் கணக்கற்றவர்கள். உண்மை அவ்வாறிருக்க, இப்புதல்வர்கள் யார்? நீ யார்? நான் யார்? புதல்வர்களையும், உன்னையும் காப்பாற்றுவதற்கு நான் உரியவனோ? அவரவர்கள் செய்த நல்வினையையும், தீவினையையும் அவரவர்களே அனுபவித்தாக வேண்டும். பக்தியில் சிறிதும் வழுவாதிருந்து நல்வழியில் பொருள் சம்பாதித்து நல்வாழ்வு வாழ்பவர்கள் இறைவன் திருவடியைஅடைந்து இடையறாப் பேரின்பத்தை அனுபவிப்பார்கள். மற்றவர்கள் பிறவிப் பெருங்கடலில் அழுந்தித் துன்பத்துக்கு ஆளாவார்கள்.

''நாடி, ரோமம், தோல், தசை, உதிரம், மூளை ஆகியவைகளால் உண்டான புலால் உடம்பை நிலையுடையது என்று எண்ணி அதன்மீது அன்பு வைத்து அதைக் காப்பதிலேயே காலம் கழிப்பவர்கள் அறிவினர்கள். அவ்வுடலை இறைவனுடைய பணிக்குப் பயன்படுத்துகிறவர்கள் அறிஞர்கள் ஆகின்றார்கள்." இங்ஙனம் குசேலர் தம் மனைவிக்கு அறிவுரை கூறினர். புத்திர வாஞ்சையில் அகப்பட்ட சுசீலை மேலும் கணவனைப் பார்த்துப் பகர்ந்தாள்: ''என் அருமை நாயகரே, முயலாதவர்களுக்குச் செல்வம் எங்கிருந்து வரும்? நிலத்தை உழுது அதில் விதை விதைக்காதவனுக்கு அந்நிலம் பயன் தருமா? செல்வத்துக்காகப் பாடுபடுபவர்களுக்குத்தான் செல்வம் கிட்டும். முயற்சி திருவினையாக்கும் என்பது கோட்பாடு. நாம் முயன்றால்தான் அதற்கேற்ற செல்வத்தை இறைவன் தருவான். நமக்குப் பரந்தாமனுடைய இணையடியன்றி ஆதரவு வேறு ஏது? எனவே நீங்கள் துவாரகாபுரியை அடைந்து அக்கண்ணனைச் செல்வம் தரும்படி கேட்பதில் குற்றம் ஒன்றும் இல்லை. என் பணிவான வேண்டுதலை நீங்கள் நிறைவேற்றி வைப்பீர்களாக.'' கண்ணனைத் தரிசிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்று எண்ணி குசேலரும் துவாரகைக்குப் புறப்பட்டார். "அன்புக்குரியவளே! தெய்வம், ஆசாரியன், குழந்தைகள் ஆகியோர்களைத் தரிசிக்கப் போகின்றவர்கள் வெறுங்கையுடன் செல்லலாகாது. ஆகையால் அப்பரந்தாமனுக்கு நாம் கொண்டு செல்வதற்கு நீ ஏதாவது தரவேண்டும்" என்று கேட்டார். சுசீலை சிந்தித்துத் தான் சேகரித்து வைத்திருந்த நெல்லை நீரில் ஊறவைத்துப் பிறகு வேகவைத்து உலக்கைகொண்டு அதை இடித்து அவலாக்கித் தன் கணவனின் கந்தை வஸ்திரத்தில் ஒரு மூலையில் முடியிட்டுக் கட்டி ''இதைக் கண்ணனிடம் கொண்டுபோய்க் கொடுங்கள்" என்றாள். குசேலர் பல காத தூரம் நடந்து துவாரகையை அடைந்தார். துவாரகையில் இருந்த கண்ணன் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்தார். அரண்மனைக்குள் போகும்போது ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளானர். குசேலரைக் கண்ட துவார பாலகர் குசேலரை அவமதித்தவர்களுக்கு அறிவுரை கூறினர். ''ஞானிகள் போன்று பேசுவார்கள். பொன் முதலியவற்றில் இச்சை அற்றவர்கள் போல் பிறருக்கு உபதேசம் செய்வார்கள். கபட வேடம்பூண்டு வாழும் சிலர் உலகத்தை ஏமாற்றுவார்கள். மெய்ஞ்ஞானிகளோ மனைவி மக்களோடு வாழ நேரிடில் தாமரை இலையில் தண்ணீர் ஒட்டாதது போன்று குடும்பப்பற்றற்றவர்களாக இருப்பார்கள். ஒரு ஞானியைக் காண்பதும் அரிது. இங்கு வந்திருக்கும் குசேலர் நமக்குக் கிடைத்த சிறந்த ஞானியாவார். இவர் சிறுவயதில் நம் அரசனுக்கு நண்பராக இருந்தது உண்மை. நம் அரசன்மீது உள்ள அன்பு அதிகரிக்கவே அவரைக் காண வந்துள்ளார். நம்முடைய பாப விமோசனம் ஆகும் காலம் வந்ததனல் நாம் இவரை இன்று கண்டோம். இவரைக்

காணுந்தோறும் மனம் மகிழ்ச்சியடைகின்றது. மெய்யில் புளகாங்கிதம் உண்டாகின்றது. கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருகுகின்றது. நாவானது இவரைத் துதிப்பதற்குத் துடிக்கின்றது. நாம் விரைவில் சென்று இவருடைய வருகையை நம் அரசர் பெருமானுக்குத் தெரிவிப்போம்." இங்ஙனம் துவாரபாலகர் கூறி ஏளனம் பேசினவர்களை அடக்கினர்.

குசேலரைப் பார்த்து, "ஞானச் செல்வரே! உங்களுடைய வருகையால் எங்கள் குறையெல்லாம் தீர்ந்தது. உங்களுடைய தவப் பெருமையை அஞ்ஞானிகளாக உலகத்தில் உள்ளவர்கள் யார் அறியப்போகின்றார்கள். உங்களுடைய மகிமையை அறியாது உங்களை இழிவாகப் பேசிய அவ்வறிவீனர்களுடைய வார்த்தைகளை நீங்கள் உள்ளத்தில் கொள்ளாதீர்கள். புண்ணிய தீர்த்தங்களில் நீராடிப் பெறுகின்ற பயனையும், தானம் தவத்தினல் பெறுகின்ற பயனையும் உங்கள் தரிசனம் ஒன்றிலேயே பெற்றுவிட்டோம். உங்களை வணங்குகின்றோம். சற்று இவ்விடத்தில் அமருங்கள். உங்கள் வரவை மன்னருக்கு எடுத்துக்கூறி அவரைத் தாங்கள் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம்" என்றார் துவாரபாலகர்.

துவாரபாலகர் கண்ணனிடம் சென்று "வேத முதல்வனே! குசேலர் என்னும் முனிவர் வந்து வாயிலில் அமர்ந்திருக்கின்றார். உங்களோடு அவர் சிறுவயதில் பள்ளியில் படித்தாராம். உங்களுடைய உயிர்த்தோழராம். அவருடைய உடல் எலும்பும் தோலுமாக இருக்கின்றது. அவர் உங்கள்மீது வைத்த அன்பை எங்களால் அறிந்துகொள்ள முடியுமா?" என்றார். அதைக் கேட்டதும் கண்ணன் முகமலர்ந்து "அத்தவராஜராகிய குசேலரை உடனே இங்கு அழைத்துவாருங்கள்" என்று கட்டளையிட்டார்.

துவாரபாலகர் குசேலரிடம் சென்று "தவமுனியே, தங்கள் வரவை எங்கள் அரசரிடம் தெரிவித்தோம். அவர் சிறிதும் காலதாமதமின்றி உங்களை அழைத்துவர எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார். சிறிது தாமதமானலும் அவர் தாமே இங்கு வந்துவிடுவார். எனவே தாமதம் செய்யாது எங்கள் அரசனை மகிழ்விக்கும் பொருட்டு நீங்கள் எங்களுடன் வரவேண்டும்" என்று கை கூப்பி நின்று கேட்டுக்கொண்டார். துவாரபாலகர் கூறியதைக் கேட்ட மற்றவர்கள் "நாம் இம்முனிவரைப் பலவாறு பேசி இகழ்ந்துவிட்டோம். இவரை யார் என்று அறியாது மடத்தனமாக நாம் பேசிய கடுஞ்சொற்களைநம் அரசன் அறிந்தால் நமக்கு என்ன நேரிடுமோ?" என்று கதிகலங்கி நடுங்கிக் கொண்டு நின்றார்கள். துவாரபாலகர் வழிகாட்ட அரண்மனையில் ஆங்காங்குள்ள சிறப்புக்களை எல்லாம் பார்த்துக்கொண்டு குசேலர் காவலர்களைப் பின் தொடர்ந்து சென்றார்.

குசேலர் அரண்மனைக்குள் செல்லும் பொழுது பல வாயில்களைக் கடந்து உள்ளே போக வேண்டி வந்தது. சித்திர மண்டபத்தை அடைந்தபொழுது ஆங்குக் கண்ணன் திருவுருவங்கள் எழுதி வைத்திருப்பதைப் பார்த்தார். அத்திருவுருவங்களைச் சித்திரம் என்று நினையாது சாக்ஷாத் கண்ணன் என்றே எண்ணி அத்திருவுருவங்களுக்குப் பக்கத்தில் விரைந்து சென்றார். அத்திருவுருவங்களை ஆலிங்கனம் செய்யக் குசேலர் முயன்றபொழுது "சுவாமிகளே! இவ்வுருவங்கள் எங்கள் மன்னனின் ஓவியங்கள்" என்று துவாரபாலகர் கூறினர். அவர்கூறியதைக் கேட்டு அவற்றை விட்டு அப்பால் குசேலர் சென்றார்.

சூரிய உதயத்தை எதிர்பார்த்திருக்கும் செந்தாமரை போலவும், மேகங்களின் வரவை நோக்கும் மயிலைப் போலவும், தாய்ப்பசுவை எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் இளங்கன்று போலவும், கண்ணபிரான் குசேலமாமுனிவர் வரவை எதிர் நோக்கி இருந்தார்.

மங்கையர்கள் சூழ்ந்திருக்கும் அந்தப்புர வாயிலையும் கடந்து குசேலர் அப்பால் சென்றார். தரித்திரன் புதையலைக் கண்டது போலவும், பசியால் வாடுபவன் அமிர்தத்தைக் கண்டது போலவும், வெயிலில் காய்ந்தவன் கற்பகத்தருவைக் கண்ணுற்றது போலவும் மணிவண்ணனகிய கண்ணனைக் குசேலமாமுனிவர் கண்டார். ராதாருக்மணி சமேதராக, சங்கு சக்கர தாரியாகக் கண்ணன் காட்சி கொடுத்தார். கண்ணனுடைய உள்ளத்திலும், குசேலருடைய உள்ளத்திலும் பெருக்கெடுத்த அன்பை அவர்களைத்தவிர யாரே அறிய வல்லவர்? (தொடரும்)

சமயமும் தேசநலனும்

(ஸ்ரீ விவேகானந்தரின் அருளுரையைச் சேலம் சகோதரி நங்கம் தமிழில் மொழிபெயர்த்தது)

ஒரு தனி மனிதன் வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படுவது போலவே ஒரு நாட்டின் வாழ்விலும் வெற்றி தோல்விகள் மாறி மாறி அமையும். இன்று பல நாடுகளை வென்று பெரிய வல்லரசாய் இருக்கும் ஒரு நாடு நாளை இருக்கும் இடம் தெரியாமல் மறைந்துபோகலாம். இன்று அடிமையாய்ச் சிறுமையில் அழுந்தியிருக்கும் நாடு நாளை உலகுக்கே முன்மாதிரியாகத் திகழலாம். காலத்தின் போக்கில் நிகழ்ச்சிகள் மாறியமைவதற்கிடையில் தன் பண்பினை இழக்காமல் பாதுகாக்க வல்ல நாடுதான் காலத்தை வென்று சிரஞ்சீவியாய் இருக்கும்.

ஒரு நாட்டின் வரலாற்றைக் குறித்து நாம் அறிந்திருக்க வேண்டிய இவ்வுண்மையை மறக்கும்போதுதான் குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆனால் பெரும்பாலோர் இந்த உண்மையை அறிவதில்லை. உதாரணமாக இந்தியாவைப் பற்றியும் ஜப்பானைப் பற்றியும் தற்போது சிலரிடையே நிலவிவரும் ஒரு கருத்தை ஆராய்வோம். ஜப்பான் இன்று உலக நாடுகளின் முன் வெற்றிநடை போடுவதன் காரணம் அந்நாட்டிற்குச் சமயம் ஒன்று இல்லாததனாலேயே என்று சிலர் நினைக்கின்றனர். அவ்வாறே இந்தியா இன்று பின் தங்கியிருப்பது சமயத்தின் பிடியில் அது சிக்கியிருப்பதனால் தானும். அவர்கள் சித்தாந்தப்படி ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்குச் சமயம் எந்த வகையிலும் தேவைப்படுவது அன்று. பார்க்கப்போனால் சமயத்தினால் ஒரு நாடு வலுவிழந்துபோகிறது என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இந்த வாதம் பொருளற்றது; சிந்தித்துப் பார்க்காமல் பேசப்பட்ட வாதம். இக்கருத்தை எவ்வளவு வன்மையாகக் கண்டித்தாலும் தகும். இந்தக் கண்மூடித்தனமான வாதத்தில் பொய்மைகள் பல கலந்து அதைச் சிக்கலாக்கியிருக்கின்றன. இந்தச் சிக்கலைப் பொறுமையாகத்தான் அவிழ்க்கவேண்டும். முதலாவதாகச் சமயம் வேண்டாம் என்று சொல்லும் இந்த நம் நண்பர்கள் சமயம் என்றால் என்னவென்று நினைக்கிறார்கள்? ஒரு நாட்டின் வெற்றி தோல்வி என்று எதைக் கருதுகிறார்கள்? அந்த வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கும் சூழ்நிலைகள் எவை? இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டுபிடித்துவிட்டால் பின் எல்லாம் தெளிவாகும். சமயம் இல்லாததால்தான் ஜப்பானுக்கு இந்த வெற்றி சாத்தியமாகிறது என்பதிலிருந்து சமயம் உலோகாயத வெற்றிக்குத் தடையாய் இருக்கும் என அவர்கள் அஞ்சுவது நமக்குப் புரிகிறது. ஜப்பான் இன்று வெற்றி பெறுகிறது என்று அவர்கள் பாராட்டுவதிலிருந்து பொருளாதாரம், விஞ்ஞானம் இவற்றை மேம்படுத்தி வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையே வெற்றி என ஏற்றுக்கொள்கிறார்கள் என்ற முடிவுக்கு வரலாம். இன்னும், 'சமய வாழ்வு இந்தியாவின் சக்தியை உறிஞ்சிவிட்டது என்ற வாதம் சமயத்தை உதறிவிட்டு இந்தியா பொருளாதாரத் துறையில் மற்ற நாடுகளைப்போல் முன்னேற வேண்டும் என்று அவர்கள் கருதுவதைத் தெளிவாக்குகிறது. இனி உண்மை என்னவென்று நாம் ஆராயவேண்டும். ஜப்பானின் பொருளாதார வெற்றியும் விஞ்ஞான முன்னேற்றமும்தான் இன்று இவர்களுக்குப் பெரிதாகப்படுகின்றது. இவர்கள் சொல்வது போல் ஜப்பானின் வெற்றியில் சமயத்தின் பங்கு சிறிதும் இல்லை என்றால் ஜப்பான் இன்னும் ஐம்பது ஆண்டுகளுக்குள் மறக்கப்பட்டுவிடும். உண்மை அதுவன்று. நாம் புரிந்துகொள்ளும் வகையில் ஜப்பானியர்களுக்குச் சமயப்பற்று இல்லாததுபோல் தெரியலாம். ஆனால் ஜப்பானியரின் ஒற்றுமையும், தியாக மனப்பான்மையும், உழைப்புமே அவர்களின் சமயமாக இருந்து அவர்களைக்காத்து வருகின்றன.

இந்தியா இன்று இழிநிலை எய்தியிருப்பது அதன் சமயத்தினால்தான் என்பது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய அடுத்த கருத்து. இந்தக் கூற்றும் சரியானது அன்று. இந்தியாவின் தேசீய வாழ்வில் இன்றைய காலகட்டம் உறக்கத்திலிருந்து இப்போது

தான் விழித்திருப்பதை ஒத்தது. விழித்திருந்து ஓடியாடித் துடிப்புடன் செயலாற்றுவதைப் போலஉறக்கத்தில் ஆழ்ந்திருப்பது சிறப்பான நிலை அன்று; இது உண்மையே. ஆனால் உடலுக்கு உறக்கம் என்னும் ஓய்வு தேவைப்படுவது போன்று, ஒரு நாட்டிலும் செயல் துடிப்பும் சாதனைகளும் அதிகம் இல்லாத காலங்களும் உண்டு. இன்று இந்தியா தன் உறக்கத்தினின்றும் விழித்துவிட்டது. அது மாண்பு மிக்க எதிர்காலத்தின் ஆரம்பதசையில் இருக்கிறது. இன்று இந்தியத்தாயின் நாடி நரம்புகளிலெல்லாம் இளமையின் புதுரத்தம் பாய்ந்து கொண்டிருக்கிறது. புதுப் புதுச் சாதனைகளை அவள் நிகழ்த்தப் போகிறாள்.

ஆனால் இந்தியாவிற்குப் புதிய வலிவு மிக்க வாழ்வு காத்துக்கொண்டிருக்கிறது என்று நாம் வாதித்தால் அந்தப் புதிய வாதத்தை, புதிய பூமியை, இப்போதே நிர்மாணிக்க வேண்டும். அந்தப் புதிய முன்னேற்றத்தை மற்றவர்களைக் கண்ணாரக் காணச் செய்வதன் மூலம் தான் நம் வாதத்தை நிரூபிக்க முடியும். ‘வயதாகி உடல் பலவீனமுற்றவர்போல் இன்று இந்தியா இருக்கிறது; இனி அவளுக்கு வாழ்வு இல்லை’ என்று சொல்பவர்கள் நம்பிக்கையற்றவர்கள். செயலாக வடிவெடுக்கப்போகும் நம் வாதத்தை அவர்கள் சொல்ல மாட்டார்கள். செயல் வீரர்களுக்குத்தான் இப்படி உறுதியாகச் சொல்வதும் செய்வதும் சாத்தியம்.

உண்மையில் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லாம் சமயம் என்றால் என்ன என்பதுதான். இதை நன்கு தெரிந்துகொண்டு விட்டால், இந்தியா இன்று சாகாமல் உயிரோடுதான் இருக்கிறது என்றால் அது அவளுடைய சமயத்தின் வலிவினால் தான் என்ற உண்மையும் விளங்கும். சமயம் என்ற பெயரால் ஏற்பட்டிருக்கும் மூட நம்பிக்கைகளும், அச்சமும், கட்டுக்கதைகள் போன்ற புராணங்களும், பிராயச்சித்தச் சடங்குகளும் உண்மையான சமயம் ஆகமாட்டா. ஒரு தனி மனிதனின், ஒரு நாட்டின் பண்பாட்டை உருவாக்குகின்ற உயிருள்ள, வலிவுள்ள எண்ணமும் நம்பிக்கையுமே சமயமாகும்.

நிலையற்றவைகளை வழிபடுவது இந்துமதம் அன்று. ஒரு நாட்டின் வரலாற்றில் தோல்வியைப் போலவே வெற்றியும் இன்றிருந்து நாளை மறைவது. நிலையற்ற வெற்றியைப் போதிப்பது இந்து மதத்தின் நோக்கமன்று. அப்படியே வெற்றி விரும்பப்படுவது என்று கொண்டாலும்கூட அந்த வெற்றியைப் பெறக் குறுக்கு வழிகளைப் போதிப்பது இந்து மதத்தின் இயல்பில் இல்லை. மாயா ஜாலங்கள் புரிகின்ற மந்திரவாதியின் இராஜ்ஜியத்தில் தான் குறுக்கு வழிகளுக்கு இடமுண்டு. நம்முடைய மதமோ அத்தகைய மந்திர தந்திரங்களின் தொகுப்பாக இருக்குமளவுக்கு மட்டமானது அன்று. வெற்றி பெறுவதுதான் வாழ்வின் குறிக்கோள் என்று இந்துமதம் சொல்லுமானால் அரைகுறையாகத்தான் உண்மையைப் புகட்டியது ஆகும். நம் சனாதன தர்மம் ஒரு நாளும் அப்படிச் செய்யாது.

நம்முடைய மதத்திற்கு நாம் உண்மையானவர்களாக நடந்துகொண்டால், வெற்றிதோல்வி என்று வாழ்வில் மாறி மாறி அமையும் காட்சிக்குச் சாட்சியாக இருப்போம். எடுத்த காரியத்தில் வெற்றிபெற முழுமூச்சோடு ஈடுபடுவதற்கிடையில், நாம் வெற்றிக்கு அடிமையாகி விட மாட்டோம். தோல்வியைத் தவிர்க்க நம் சக்தியை யெல்லாம் திரட்டிப் பாடுபடுவதற்கு இடையில், தோல்வி நம்மை வளைத்துக் கீழே இழுத்துவிடாது. பிறரால் தோற்கடிக்கப்படும் போது மனம் கலங்காது இருப்பது போலவே பிறரை வெற்றிகொள்ளும் போதும் நாம் நிலை தவறாமல் இருப்போம். வாழ்வின் சூழ்நிலைகள் எதற்கும் அது நன்றாயினும், தீதாயினும் அடிபணிந்துவிடாமல் இருக்கும் உன்னதமான மன அடக்கமும் வலிவும் நம் சமயத்தை அனுஷ்டிப்பதால் நமக்கு வாய்க்கும்.

இந்தப் பிரபஞ்சப் பொருள்களிலேயே தம் இலட்சியங்களை யெல்லாம் முடக்கியிருக்கும் மக்களிடத்து நாம் பொறாமை கொள்வோமா? அத்தகையவர்களிடம் விரும்பத்தக்கபெருமைக்குரிய பண்பு எதுவும் இருக்க முடியுமா? மாறி வரும் நலன், பொலன் என்பதுபோன்ற இருமைகளில் நிலைத்த தன்மை இல்லை என்ற உண்மை நமக்குத் தெரியாததா? வாழ்வில் நலனைத் தொடர்ந்து தீமையும், புகழைத் தொடர்ந்து இகழும், ஒளிமயமான வெற்றியின் பின்னே தோல்வி என்னும் காரிருளும் வரும் என்பது

நாம் அறியாத உண்மையா? இவ்வுண்மைகளை யெல்லாம் நமக்குத் தெளிவுற உணர்த்தியது நம் சனாதன தர்மம் அன்றோ?

நிலையற்றவைகளால் நிரம்பியுள்ள இந்த உலகில் சமயம் என்பது நிலைத்த ஒரே அம்சமாகும். ஏற்றத் தாழ்வுகள் மிக்க சூழ்நிலைகளுக்கிடையில் நற்பண்பையும் நல்லெண்ணத்தையும் பெருக்கிக் கொள்வதே நிலைத்த ஒரே செயல் ஆகும். தனி மனிதன் பண்பைப்போல ஒரு தேசத்தின் சமஷ்டியான பண்பாட்டை (corporate personality) உருவாக்குவதற்கு, அந்தந்த நாட்டிற்கு இயல்பான சமயக் கொள்கைகள் பெரிதும் அவசியமாகும். மறைந்து பட்டுப்போன புராதன எகிப்து, மெசபடோமியா, சால்தியா, அஸ்ஸிரியா ஆகிய நாடுகளின் நாகரிகங்களுக்கு இப்போது மீண்டும் உயிர் கொடுக்க யாராலும் முடியாது. ஏனென்றால் அந்த நாகரிகங்களைத் தனித்தன்மை உடையவைகளாகச் செய்தவை எல்லாம் இப்போது மறைந்துவிட்டன. ஒரு நாட்டின் மொழிகூட அந்த மக்களின் சிறப்பியல்பை வெளிப்படுத்தும் ஒரு மையக்கருத்தைச் சுற்றி அமைந்தால் தான் வாழமுடியும். கணநேரத்தில் தோன்றி மறையும் பளபளப்பான வெற்றியைக்கண்டு நாம் மயங்கிவிடக்கூடாது. அப்படிப்பட்ட வெற்றியோடு ஒரு காலத்தில் சிறந்து விளங்கிய ரோமும், ஸ்பெயினும், போர்ச்சுகல்லும் இப்போது எங்கே? சாதாரண மனிதன் ஒருவன் வாழ்வில் ஒரு மணிநேரம் போல ஒரு நாட்டின் வரலாற்றில் சில நூற்றாண்டுகள் ஓடிப்போய்விடும். தேசங்கள் ஆக்கப்படுவதும் அழிக்கப்படுவதும் காலத்தின் போக்கால் அல்ல; காலங்காலமாக மேற்கொள்ள வேண்டிய கொள்கைகளை அந்தத்தேச மக்கள் எவ்வளவு உறுதியாகவும், பொறுமையோடும் போற்றிப் பாதுகாக்கிறார்கள் அல்லது பாதுகாக்கத் தவறிவிட்டார்கள் என்பதால்தான். வாலிபத்தை நன்கு பயன்படுத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது ஒரு நாட்டின் பெரு வெற்றி ஆகிவிடாது. அந்த நாட்டின் பண்பு சிதைந்துவிடாமல் உறுதியாகக் காக்கக்கூடிய சக்தி இருக்கும்போதுதான் பொருளாதார வெற்றியும் ஒரு வெற்றியாகும். பொருளாதார வெற்றியும்கூட மக்களின் பண்பிலிருந்தும் நேர்மையிலிருந்தும் விலகித் தனியாக நிலைத்திருக்க முடியாது.

இந்தப் பிரபஞ்சம் மெய்யன்று என்று நம் சமயம் போதிக்கின்றது. இந்தக் கருத்தை உண்மையாகவே ஏற்றுக்கொண்ட ஒருவரால் மனச்சாட்சிக்கு ஏற்ற பண்புமிக்க வாழ்வை உலக சுகபோகங்களுக்காக விற்றுவிட முடியாது. ஆனால் தார்மீகமான வாழ்வில் சுகமே வாய்க்காது என்றும் நினைத்திடவேண்டாம். கணநேர நலனைவிட நிலைத்த பண்பைச் சிறப்புடையதாக மதிப்பவருக்கு மறுமை மட்டுமின்றி இம்மையிலும் நலன் வாய்க்கும். எனவே சிறப்பாகிய சிரேயஸ்ஸையும், பிரியத்திற்குரிய செல்வமாகிய பிரேயஸ்ஸையும் ஒருங்கே அளிக்கும் தர்மத்தைக் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழ்வோம். அப்போதுதான் நமக்கும் நாட்டிற்கும், வெற்றி தோல்விக்கும் அப்பாற்பட்ட பெருநலன் வந்து சேரும்.

வியவகாரிக நிலையில் ஞானம் இருப்பது போன்று அஞ்ஞானமும் இருக்கின்றது. கற்றறிவு படைத்த வசிஷ்டர் தம் புத்திரனை இழந்த பிறகு தேம்பித் தேம்பி அழுதார். வசிஷ்டருக்கு இது பொருந்துமா என்று லக்ஷ்மணன் ராமனிடம் கேட்டான். ராமன் பகர்ந்ததாவது: "தம்பி, ஞானம் அஞ்ஞானம் ஆகிய இரண்டையும் கடந்திருப்பது அதீதநிலை. அந்நிலையை எட்டும் வரையில் வசிஷ்டர் கதிதான் மற்றவர்களுக்கும். காலில் தைத்த முள்ளை மற்றொரு முள்ளைக்கொண்டு களைந்து எடுக்கின்றோம். பிறகு இரண்டு முட்களையும் எறிந்துவிடுகின்றோம். வியவகாரிக ஞானத்தைக்கொண்டு அஞ்ஞானத்தைக் களையவேண்டும். பிறகு அந்த ஞானத்தையும் கடந்து மேலே போகவேண்டும்."

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

ஸ்ரீமத் பாகவதம்

(சுவாமி ஸதானந்தர்)

உடலை விட்டு உயிர் பிரிந்த பின் பிரிந்தவர்கள் எங்ஙனம் அன்பை இழந்துவிடுகிறார்களோ அங்ஙனம் கண்ணனைவிட்டுப் பிரிந்த மக்களும் அன்பை இழந்ததாக உணர்ந்தார்கள். திரௌபதி சுயம்வரத்தில் என் பிரபு கிருஷ்ணனால் அல்லவோ அந்தத் தங்க மீனை அம்பால் அடித்து அவளைப் பெற முடிந்தது. என் பிரபு கிருஷ்ணனால் அல்லவா பேராசையும் பெருவல்லமையும் வாய்ந்த மற்ற போட்டியாளர்களான அரசர் கூட்டத்தை என்னால் வெல்ல முடிந்தது. காண்டவ வனத்தை முழுவதும் அக்னி தேவனுக்குக் கொடுத்ததும், அதை எதிர்த்துப் போரிட்ட தேவர்களையும் இந்திரனையும் வென்றதும் பகவான் கிருஷ்ணனால் அல்லவா? ஸ்ரீ கிருஷ்ண கடாக்ஷத்தால் அல்லவா தேவதச்சன் மயனைக் காக்க முடிந்தது? அவன் மிகத் தேர்ந்த சிற்பி. அவன் கட்டிய அதி அற்புத இந்திரசபை போன்ற சபாமண்டபத்தில் ராஜசூய யாகம் நடத்தினோம். அதுவும் ஸ்ரீ கிருஷ்ணனது அருளால் அல்லவா வெற்றியாக முடிந்தது. உமது அன்பிற்குரிய தம்பி பீமசேனர் பத்தாயிரம் யானைகளின் பலம் கொண்டவர். அவர் ஜராசந்தனை வென்றதும் அவனால் கைது செய்யப்பட்டிருந்த பல அரசர்களை விடுவித்ததும் அப்பரம பிரபுவின் அருளாலேயாகும். தேவரீர் ராஜசூய யாகம் செய்ய முடிவு செய்து அதற்கு வேண்டிய முயற்சியில் இறங்கியதும் ஜராசந்தனும் மஹாபைரவயாகம் செய்வதாகச் சங்கல்பம் செய்து கொண்டு இப்பூமியிலிருந்த பெரும்பாலான அரசர்களை வென்று தன் தலைநகரில் சிறையில் வைத்திருந்தான். பீமசேனர் ஸ்ரீ கிருஷ்ணன் அருளால் ஜராசந்தனைக் கொன்று வென்று சிறைப்பட்டிருந்த அரசர்களையும் ராஜகுமாரர்களையும் என் பிரபுவின் அருளால் விடுவித்தார். அந்த அரசர்களும் நன்றியுடன் தங்கள் ராஜசூய யாகத்துக்கு வேண்டிய பொருள்களையெல்லாம்கொண்டு வந்து அன்புக்காணிக்கையாக செலுத்தினர்கள். அதனால் அல்லவோ ராஜசூய யாகம் எளிதானது ஆயிற்று. ராஜசூய யாகத்தில் புனித நீர்களால் நீராட்டப்பட்ட தமது தர்மபத்தினி திரௌபதியின் கூந்தலைப் பின்னொரு நாள் திருதராஷ்டிர குமாரன் துச்சாதனன் ராஜசபையில் பற்றி இழுத்து வந்து அவமானப்படுத்தினன். நிராதரவான திரௌபதி யக்ஞசேனை என் பிரபுவைச் சரணமடைந்தாள். அந்தப் பெரிய அவமானத்தினின்று தங்கள் உத்தமபத்தினி என் பிரபுவின் அருளால் காப்பாற்றப்பட்டாள். இப்பாப காரியத்தைச் செய்த அக்கொடிய திருதராஷ்டிர குமாரர்கள் தங்கள் தீவினைப்பயனுக அழிந்தார்கள். அவர்களுடைய மனைவிமார்கள் தங்கள் கூந்தலை இழந்து துயருற்றுக்கிடந்தார்கள்.

நாம் வனவாசத்தில் இருந்தபோது கெட்ட மனம் படைத்த துர்யோதனனது வேண்டுகோளின்படி ருத்ராம்சமான துர்வாச முனிவர் தமது பத்தாயிரம் சீடர் குழாத்துடன் நம்மைக் காண வந்தார். அவர்களை முறையே உபசரிக்க வேண்டியது தான் நமது கடமை. நமது நிலைமையோ அன்றைய தினம் அவர்களை உபசரிக்க முடியாத நெருக்கடியில் இருந்தது. அக்ஷய பாத்திரம் அன்றைய தினம் தன் கைங்கரியத்தைச் செய்துவிட்டு விடை பெற்றுவிட்டது. அந்த நிலையில் என் பிரபு அன்றோ நம் அனைவரையும் அம்முனிவரின் சாபத்தினின்று காத்தருளினர். அக்ஷய பாத்திரத்தில் ஒட்டிக்கொண்டிருந்த ஓர் அன்னப் பருக்கையைப் பகவான் எடுத்து உண்டு பரம திருப்தி அடைந்தார். அதன் விளைவாகத் துர்வாசரும் அவரது சீடர்களும் குளித்துக் கொண்டிருந்தபோதே பெரிய விருந்து சாப்பிட்ட மாதிரி உணர்வும் திருப்தியும் அடைந்தனர். நம் உபசாரணைக்குப் பயந்து அவர்கள் நம் ஆச்ரமம் பக்கம் வராமலே போய்விட்டனர். என் பிரபுவின் அருளினல் அன்றோ இன்று நாம் உயிருடன் இருக்கிறோம். சிவபிரானையும் அம்பாளையும் என் திறமையில் பிரீதி அடையச் செய்து எனக்குப் பாசுபத அஸ்திரம் வழங்கும்படி செய்ததும் என் பிரபுவின் அருளே ஆகும். இதன்மூலம் மற்றத் தேவர்களும் தேவதைகளும் பிரீதி அடைந்து அவர்

களும் பல்வேறு தேவ ஆயுதங்களை எனக்கு நல்கினதும் என் பிரபுவின் அருளினலேயே ஆகும். என் தேவ தந்தையார் இந்திரன் என்னை வேண்டி அழைத்ததும் நான் இந்தச் சரீரத்துடன் தேவலோகம் சென்றதும் ஆங்கு இந்திரன் என்னைத் தேவசபையில் தம் சிம்மாசனத்தில் தம்மோடு அமரச்செய்து கௌரவித்ததும் எல்லாம் என் பிரபு ஸ்ரீ கண்ணன் அருளினலேயே ஆகும். எனது அஸ்திர வலிமையையும் பயிற்சியின் தேர்ச்சியையும் உணர்ந்த தேவர்கள் தங்கள் விரோதிகளாகிய நிவாத கவசர்களை வெல்லுவதற்கு என் உதவியை நாடியதும் அக்காரியத்தில் நான் வெற்றி பெற்றதும் என் ஆண்டவனின் அருளினலேயேயாகும். ஓ, மகாராஜா! இப்போது உணர்கிறேன், எல்லாம் அவன் அருளால் நிகழ்ந்தன. அந்த என் ஆருயிர் நண்பனும் ரக்ஷகனும் ஆகிய என் பிரபு விளையாட்டாக இந்த மானுட சரீரத்தில் தோன்றி வந்து லீலைகள் புரிந்து இப்போது என்னை ஏமாற்றிவிட்டுத் தம் யதாஸ்தானம் போய்விட்டார். நான் உயிர் பிரிந்த சரீரம்போன்று இருக்கிறேன். ஆ! இந்த மகாபாரத யுத்தத்தில் மிகப் பெரும் வலிமையும் அசாதாரண வீரமும் கொண்ட பெருவீரர்களை நான் வெல்ல முடிந்ததெல்லாம் என் ஆண்டவனின் அருளினலேயே ஆகும். விராட நகரில் நமது அக்ஞாத வாச காலத்தில் விராடனுடைய பசுக்களைக் கவர்ந்து சென்ற கௌரவ வீரர்களை நான் ஒருவனகவே வெல்ல முடிந்ததும், அவர்களின் ரத்தினம் பதித்த கிரீடங்களையும், உயர்ந்த உத்தரீயங்களையும் சேகரிக்க முடிந்ததும், கால்நடைகளை மீட்க முடிந்ததும் எல்லாம் என் பிரபுவின் அருளினலேயே ஆகும். குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் என் பிரபு தேரோட்டி ரூபத்தில் என் முன் உட்கார்ந்து கொண்டு எதிர்ப்பக்கம் இருந்த மிகப் பெரிய உத்தம வீரர்களாகிய பீஷ்மர், துரோணர், கர்ணன், சல்லியன் மற்றும் அதிரதர்கள் பலரின் வீரியம், சௌரியம், தேஜஸ், உற்சாகம் ஆகியவைகளை எல்லாம் வெறும் பார்வை மாத்திரத்தாலேயே கரந்து எடுத்துவிட்டார்.

மஹாராஜா! முன்பொரு காலத்தில் அசுரர்கள் எவ்வளவு பெருமுயற்சி செய்தும் எங்ஙனம் பக்த பிரஹலாதனுக்கு எந்த ஹானியும் செய்ய முடியவில்லையோ, அதே போன்று பகவானல் பாதுகாக்கப்பட்டவனக நான் இருந்தமையால் எவ்வளவு பெரிய சக்தி ஆயுதமும் துரோணர், பூரிசிரவஸ், திரிகர்த்தராஜன், சுசர்மன், சல்லியன், பால்கிகா ஆகிய பெருவீரர்களின் மிக சக்தி வாய்ந்த அஸ்திரங்களும் எனக்கு எந்த ஊறும் செய்ய முடியவில்லை. ஆ! நான் எவ்வளவு அறிவீனனக இருந்துவிட்டேன். முனிவர்கள் எப்பொருளை ஹிருதய கமலத்தில் வைத்துச் சதாகாலமும் தியானிக்கிறர்களோ அத்தகைய பெரிய பொருளை எனக்கு ரதசாரத்தியம் பண்ணும்படி அமர்த்திக் கொண்டேனே. ஜயத்ரதன் வதத்தின்போது நாள் முழுவதும் என் குதிரைகள் ஓடிய வண்ணம் இருந்ததால் மிகவும் களைத்துப் போயின. அவைகளைக் களைப்பாற்ற என் பிரபு பாணப்பிரயோகம் செய்து பாதாள கங்கையை வெளிக்கொணரக் கட்டளையிட்டார். அவர் அருளால் அங்ஙனமே நிகழ்ந்தது. குதிரைகளைக் களைப்பாற்றிய இந்த அவகாசத்தில் அதிரதர்கள் என்னை எளிதில் கொன்றிருக்கலாம். என் பிரபுவின் அருளால் அன்றே அவர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை மறந்து கவனமற்று இருந்தார்கள். அரசே, யக்ஞ சொரூபியாகிய என் பிரபு சுயநலமற்றும் அகங்காரமற்றும் மிக்க அன்புடனும் தோழமையுடனும் என்னிடம் என்றும் நடந்து கொண்டதும் அவரது அதி இனிய குரலில் மந்தஹாச முகத்துடன் "அர்ஜுன, ஓ பார்த்தா, குந்தியின் மைந்தா, என்று அழைத்த சொற்களும், அவரது திருக்கோலமும் என் நெஞ்சில் நிறைந்து இருக்கிறது. இந்த நினைவுகள் எல்லாம் எழும் பொழுது என் நெஞ்சு பெரும் பாரத்தினல் அமுக்கி நசுக்கப்படுவது போன்றும் ஈரத்துணியை முறுக்கிப் பிழிவதுபோன்றும் வேதனைப்படுகிறேன். நாங்கள் ஒருவர்க்கொருவர் மிக மிக அன்யோன்யமாக இருந்ததால் ஒரே படுக்கையில் படுத்து உறங்கி, ஒரே ஆசனத்தில் உட்கார்ந்து, ஒரே தட்டில் இருவரும் சாப்பிட்டுக் கைகோர்த்து இருவரும் ஒன்ருய் நடந்து, அன்பினல் ஒருவரை ஒருவர் சிறப்பித்துக் கொண்டு — இங்ஙனம் வாழ்ந்து வந்தோம். எப்பொழுதாவது என் பிரபு

சொன்ன வார்த்தைக்கு மாருக ஏதாவது நடந்துவிட்டால் நான் அவரை 'நீ எப்படிப் பட்ட சத்திய சந்தன் பார்' என்று இளக்கார மாகப் பேசியிருக்கிறேன். ஆனல் என் பிரபுவோ தந்தை தன் மகனின் குற்றத்தை எளிதில் மன்னிப்பது போன்றும், ஆருயிர்த் தோழன் தன் தோழனின் பிழை பொறுப்பது போன்றும், என் ஆண்டவன் என்னை மன் னித்து என்றும் போல அன்பு மாருதிருந்தான். அரசே! நீங்கள் யூகித்தது சரிதான். அது நிகழ்ந்துவிட்டது. அப்பரமபுருஷன் என்னை விட்டுப் போய்விட்டார். நான் உயிர் அற்ற சடலமாக இருக்கிறேன். ஸ்ரீ கிருஷ்ணபத்தினி கள் பதினுராயிரம் பேர்களை ஹஸ்தினுபுரத் துக்கு அழைத்து வந்து கொண்டிருந்தேன். வழி யில் சில இழிகுலக் கோபாலர்கள் என்னைத் தாக்கி நிராதரவான ஒரு பெண்பாலிடமிருந்து பறித்துச் செல்வது போன்று என்னைத் தோற் கடித்து அப்பெண்களை அபகரித்துச் சென்று விட்டார்கள்.

அதே அர்ஜுனன், அதே தேர், குதிரைகள், அதே வில், அதே அம்பு! இவைகள் எல்லாம் எப்படித் தம் பழைய வல்லமையை இழந்தன! முன்பு இவை அனைத்தின் முன்பும் எதிரி அரசர்கள் தலைவணங்குவார்கள். அந்தோ! என்பிரபுவின் பிரிவினுல் அன்ரோ இவை யாவும் பிரயோஜனமற்றவை ஆய்விட்டன. உணர்ச்சியற்ற மந்திர உச்சாரணம் எப்படி ஒரு பலனும் தருவதில்லையோ, மந்திரவாதி யிடம் பெற்ற தனம் எப்படி நமது சொத்து ஆசாதோ, பாறையின் மேல் விதைக்கப்பட்ட விதை எப்படிப் பலன் ஏதும் தராதோ அதே போல ஸ்ரீ கிருஷ்ணனிடமிருந்து பிரிக்கப்பட் டுள்ள நான் பிரயோஜன மற்றவன், என்னிடம் எந்தச் சக்தியும் இல்லை. அரசே! தாங்கள் நமது நண்பர்களும் உறவினர்களுமாகிய யாதவர் களின் க்ஷேமம்பற்றி விசாரித்தீர்கள். ரிஷி ஒருவரின் சாபத்தினுல் யாதவர்கள் குடிவெறி யில் இருந்தபோது சிறு தகராறு ஒன்றுக்காக நாணலைப் பிடுங்கி ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு மாண்டார்கள். யாதவர்களில் ஐந்து பேர்களே உயிர்தப்பினர். ஆ, எல்லாம் ஸ்ரீமந் நாராயணனுடைய சங்கல்பப்படியே நடந்தேறின. உயிர்கள் அவன் அருளால் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று துணையாக இருந்து உயிர்வாழ்கின்றன. அதேபோல அவனரு ளாலேயே அவை ஒன்றுக்கொன்று அடித்துக் கொண்டு சாகின்றன. பெரியமீன் சிறுமீன் களைப் பிடித்துத் தின்றுவிடுகிறது. வலிவுமிக்க மிருகங்கள் பலஹீனமான மிருகங்களை அடித் துச் சாப்பிடுகின்றன. அதேபோல என்பிரபு அரசர்களிடையே, மானுடர்களிடையே செய் தான்; பூ பாரம் துடைத்தான். அரசே, உணர்ச் சிப் பெருக்கினுல், துக்கத்தினுல் என்னுல் மேலும் பேசமுடியவில்லை. என் பிரபுவின் திருவிளையாடல்களையும் அவனது அன்பான அமுத மொழிகளையும் எண்ணி மனது பேரு ணர்ச்சி வசப்படுகிறது.''

சூதர் சொன்னுர்:-''கிருஷ்ணுர்ஜுனர்களுக் கிடையில் இருந்த ஆழ்ந்த அன்பின் விளைவாக அர்ஜுனனது மனது ஸ்ரீ கிருஷ்ணனது தாமரைத் திருவடிகளில் விரைவில் ஒடுங்கி யது. அவன் ஆழ்ந்து தியானத்தில் மூழ்கிவிட் டான். அந்தத் தியானம் அவனுக்கு மிகுந்த ஆறுதலைத் தந்தது. அவன் மனதிலிருந்து உலகப்பற்றுகளும் துன்ப துயரங்களும் போய் விட்டன. குருக்ஷேத்திரப் போர் துவக்கத்தில் கண்ணன் உபதேசித்த ஞானமெல்லாம் அப் போதைக்கு அவன் மனதில் குடிகொண்டன என்று மட்டும் சொல்லலாம். அப்போது உலக போகங்களில் அவனுக்கு இருந்த பற்று தல், யுத்தம் புரிந்து வெற்றியடைய வேண் டும், சபதங்கள் நிறைவேற வேண்டும் என்கிற ஆவல், காலத்தின் கூத்து ஆகிய காரணங் களினுல் அப்போதனைகள் அப்போது வாழ்வு மயமாக மாறி அமையவில்லை. ஆனல் இப் பொழுது அதற்கேற்ற தருணம் வந்தது. எவ் வளவோ நிகழ்ச்சிகள் நிறைவேறிவிட்டன. கீதாபோதனையில் அவனுக்கு இருந்த பெரும் பற்றுதலால் இப்போது தக்க காலத்தில்அவன் மோஹங்கள் எல்லாம் அறவே போய்விட்டன. தக்க காலம்வரும்போதுதான் அறபோதனைகள் தீவிரமாக அனுஷ்டானத்துக்கு வருகின்றன. கீதையில் சொல்லப்பட்ட ஆத்மதத்துவங்கள் அவனுக்குஇப்போதுபிரத்யக்ஷமாயின.''சர்வம் வாசுதேவமயம். எல்லாம் அவன் செயல். எல் லாம் அவன் உடைமை. அவனன்றி ஒரணுவும் அசையாது, அவன் தூணிலும் இருக்கிருன்,

துரும்பிலும் இருக்கிறன். நான் அன்று, நான் அன்று, ஆண்டவனே எல்லாம் நீயே, எல்லாம் நீயே'' இந்த ஞானமெல்லாம் அவனுக்குச் சுவானுபூதியில் விளங்கின. அவன் தானும் பிரம்மம், கிருஷ்ணன் என உணர்ந்து கொண்டான். அறியாமை அல்லதுஅவித்யா அவனைவிட்டுநீங்கியதால் முக்குணங்களும் அவனை விட்டு விலகின. குணங்கள் போனதினுல் ஜீவன்-ஜகத்-பரம்பொருள் என்கிற பேத உணர்வு போய் விட்டது. பல பிறவிகள் எடுத்தது, அதில் புரிந்த செயல்கள்,அதன் பாப புண்ணியஅனுபவங்கள், இன்பதுன்பநுகர்ச்சிகள் ஆகிய ஜீவவின் பொய்க் கோலம் அவனுக்கு விளங்கியது. யுதிஷ்டிரரும் யாதவர்களின் முடிவையும் பகவான் கண்ணன் யதாஸ்தானம் போய்ச் சேர்ந்ததையும் அறிந்து இவ்வுலக வாழ்க்கையைத் துறந்துவிட்டு முக்தியடைய முடிவு செய்தார். குந்தியும் இவ்விபரங்களை அறிந்ததும் ஆழ்ந்த கிருஷ்ண பக்தியால் அவளது மனது ஸ்ரீ ஹரியின் திருவடிகளில் ஐக்கியப்பட்டது.

முனி சிரேஷ்டரே! இது வரையில் சொன்ன கதைப் பகுதியிலிருந்து யாதவர்களிடையே கண்ணன் தோன்றினன். மானுட வடிவெடுத்து மானுடரில் ஒருவனுகச் சஞ்சரித்தான். ஆயினும் அவனது உயர்வற உயர்ந்த தன்மை விளங்கியிருக்கும். அவன் யாதவன் அன்று, கர்மபந்தத்தில் கட்டுப்பட்ட ஜீவன் அன்று, அவன் ஆண்டவன். மானுட வடிவெடுத்து வந்து திருவிளையாடல் புரிந்தான். அவன் உலகில் எங்ஙனம் வாழவேண்டும், எங்ஙனம் செயல் புரியவேண்டும் என்று காட்டித் தந்தான். முள்ளைக்கொண்டு முள்ளை எடுப்பது போன்று உலகுக்குப் பீடையாய் ஆகிவிட்ட அரசகுலத்தை அவர்களிடையே பிறந்து அழித்தான்.

நாடகத்தில் ஒருவன் பல வேஷங்களில் நடிப்பது போன்று ஆண்டவன் மீன் முதலிய பத்து அவதாரங்கள் எடுத்தான். அவதார நோக்கம் பூர்த்தியானதும் தான் எடுத்த கோலத்தைத் துடைத்தான். என்று கண்ணன் இவ்வுடலை எறிந்துவிட்டுத் தன் யதாஸ்தானம் ஏகினுனே அன்றே கலிகாலம், கலியுகம் பிறந்தது. கலி என்றுல் பாபம், தீய செயல்கள், சுயநலம், அசுரத்தன்மை, ஆடம்பரம், புலன் இன்ப வேட்கை மிக அதிகம், காம நுகர்ச்சியில் பெரு விருப்பம் ஆகிய தோஷங்கள் என்று பொருள். இவைகள் நிறைந்த காலம் கலிகாலம் அல்லது கலியுகம். அறிவிலிகள் எளிதில் இச்செயல்களில் ஈடுபட்டு விடுவார்கள். கலியின் தோஷங்களை அறிஞுகிய யுதிஷ்டிரன் முன்கூட்டியே தெளிவாக உணரலானர். வெறுப்பு, பொய் வேஷம், மித்யாசாரம், பொருமை ஆகிய பாபங்களின் தன்மைகளையும் விளைவுகளையும் நன்கு உணர்ந்தவர். ஆகவே அவர் இவ்வுலகை விட்டு ஏக முக்தியடைய ஸ்ரீ கிருஷ்ணனின் பாதங்களை அடையத் தீர்மானம் செய்தார். அதற்கேற்ற உடையும் அணிந்துகொண்டார். தன் பேரன் பரீக்ஷித்துக்கு முடிசூட்டித் தன் பரந்த ராஜ்யத்தை ஒப்படைத்தார். பராக்கிரமத்திலும் தர்மானுஷ்டானத்திலும் யுதிஷ்டிரனுக்கு நிகரானவன் அவன். மதுராபுரிக்கு விரஜனை அரசனுக்கினர். அதன் பிறகு தேவயக்ஞம் செய்தார். தேவர்களையும் லோகபாலர்களையும் பிரஜாபதியையும் திருப்திப்படுத்தும் வேள்வி அது. அரச கோல சின்னங்களாகிய கங்கணம், குண்டலம் மற்றும் நகைகளை அவ்வேள்வித்தீயில் இட்டார். இவை யாவற்றையும் விட மேலான அர்ப்பணமாகவும், தியாகமாகவும் ஆணவ அகங்காரம், பற்று, மோஹம், ஆசை ஆகிய எல்லா உலகப் பற்றுகளையும் அவ்வேள்வித் தீயில் அர்ப்பித்தார். அவரது வாக்கு மனதில் ஒடுங்கியது. பிராண அபான வாயுக்களையும், சரீர இயக்கங்கள் அனைத்தையும் யமதர்மராஜனுக்கு ஆகுதியாகப் படைத்தார். பஞ்சபூதங்களினுல் ஆன இச்சரீரத்தை அவைகளுக்கே படைத்தார். முக்குணங்களும் ஆத்மாவில் ஒடுங்கிவிட்டன. அவரது ஆத்மாவைப் பரமாத்மாவில் ஆகுதியாக்கினர். உபவாசம் இருந்தார், மௌனம் அனுஷ்டித்தார். சரீர உணர்வு அற்று இருந்தார். அவருடைய கவனமெல்லாம் ஒரே ஒரு பொருளில் பரம்பொருளில் லயித்திருந்தது. தம் முன்னேர்களைப் பின்பற்றி அவர் யாருடனும் பேசாமல் பரமாத்மாவைப் தியானித்துக் கொண்டே வடக்கு நோக்கிப் போனுர். அங்குப் போனவர்கள் யாரும் மீண்டும் மானுட உலகிற்கு வருவதில்லை. அண்ணனைப் பின்பற்றிப் பீமார்ஜுன, நகுலசகாதேவர்கள் போனுர்கள். நற்கதி அடைந்தார்கள்.

சனாதன தர்மத்தின் சிறப்புகள்

(திரு. V S நரசிம்மன்)

[ஒருசமயம் தபோவனத்திற்கு வருகை தந்த இத்தாலி நாட்டின் பாதிரிகள் குழுவினர் 'ஹிந்துமதம்' என்ற சொற்பொழிவைக் கேட்ட பின், தமக்கு இருந்த ஐயங்களைக் கேள்வி களாகக் கேட்டனர். அப்பொழுது ஆன்றோரால் கொடுக்கப்பட்ட விளக்கங்கள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன.]

கேள்வி: 1. நான் எப்பொழுதும் கர்ம வினையினால் பாதிக்கப்பட்டவனா? எதையும் தேர்ந்து எடுக்கும் சுதந்திரம் எனக்கு உள்ளதா?

பதில்: நீங்கள் இப்பொழுது இருக்கும் நிலை உங்களுடைய பழைய கர்மவினையின் விளைவு. உங்கள் வாழ்க்கையில் எவரும் குறுக்கிடுவதில்லை. எண்ணத்திற்கு ஏற்ப வாழ்வு அமைகின்றது. தமது வாழ்வைத் தீர்மானிக்கும் சிற்பியாக ஒவ்வொருவரும் இருக்கின்றனர். 'உனது விதியை நிர்ணயிக்கும் தலைவன் நீயே.' இதுதான் கர்மயோகம்.

கேள்வி: 2. என்னுடைய கர்மாவை மாற்றி அமைக்க இயலுமா?

பதில்: இயலும். நீங்களே திருத்தலாம். அந்தச் சுதந்திரம் உங்களுக்கு உண்டு. உங்களுடைய வாழ்வை நல்லதாகவோ, தீமையான தாகவோ அமைப்பவர் நீங்களே.

கேள்வி: 3. கிறிஸ்துவம், இஸ்லாம் முதலியன தனிப்பட்ட சமய நெறிகளாகும். அவை போல் வேதாந்தமும் தனித்தன்மை உடைய ஒரு நெறிதானே?

பதில்: இல்லை, அனைத்து நெறிகளையும் தன்னுள் அடக்கியது வேதாந்த தத்துவம். சிருஷ்டியில் உள்ள வழிமுறைகளின் தொகையே வேதாந்தம். ஒருவரின் தர்மம், மற்றவரின் தர்மம் ஆகாது. ஆசிரியரின் தர்மம் வேறு; மாணவரின் தர்மம் வேறு. தனிப்பட்ட தர்மங்களை ஒன்று சேர்ப்பது வேதாந்தம். இதனை ஒரு குறிப்பிட்ட தர்மம், நம்பிக்கை, கொள்கை நெறியின் கீழ் அடக்க முடியாது. இத்தகைய குறுகிய வட்டத்தில் அது அடங்காது. 'ஸ்வ தர்மம்' என்பது மாறுபடும் தன்மை கொண்டது. அனைவரும் ஒரே பாதையில் செல்ல வேண்டும் என்று வற்புறுத்துவது கூடாது. முக அமைப்பில் மனிதனுக்கு மனிதன் எத்தனை வேறுபாடு கொண்டவன்! மன அமைப்போ அதனினும் பலவகைப்பட்டது. ஒரு மலர் வேறு ஒன்றைப்போல இருப்பதில்லையே! செடிகள், விலங்கினங்களில் வேறுபாடு எத்தனை! மனித இனத்திலும் பலதரப்பட்ட பக்குவம் பெற்றவர்கள் உள்ளனர். தமக்கு ஏற்ற தர்மத்தை (ஸ்வதர்மத்தை)த் தாமே தேர்ந்தெடுக்கவேண்டும். முழுமையான இயந்திரத்தில் சிறு ஆணி தனது பகுதியைச் செவ்வனே நிறைவேற்றுவதுபோல், ஒவ்வொருவரும் தமக்குரிய கடமையைச் செய்து பூரணத்துடன் தொடர்பு வைக்க வேண்டும்.

கேள்வி: 4. வேதாந்த தத்துவத்தைப் போல், கிறிஸ்துவ, இஸ்லாமிய தத்துவங்கள் உள்ளன. ஒன்றை அடுத்தவர் ஏற்பது கிடையாது. எனவே வேதாந்த நெறி அனைவருக்கும் எப்படிப் பொருந்தும்?

பதில்: தனிப்பட்ட (particular) என்று கூறுது, ஒன்றிணைந்த (Comprehensive) என்று கூறுங்கள். தனிப்பட்ட நெறி குறுகிய எல்லைக்குள் அடங்கியது. வேதாந்தம் கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களையும் ஒப்புக்கொள்கின்றது. அவையும் சனாதன தர்மத்தின் அம்சங்களே. புவியீர்ப்பு விசையில் (Gravity) எல்லாம் அடங்கும். அதுபோன்று அனைத்து நெறிக்கும் இடம் தருவது சனாதன தர்மமே.

ஹிந்துமதம் என்பதும் வரையறைக்கு உட்பட்டது; ஆயின் சனாதன தர்மம் அகண்டது. எல்லா மனிதர்களுக்கும் பொருந்தும் பொதுத் தத்துவம். விஞ்ஞான, கணித உண்மைகள் அனைவருக்கும் ஒன்றே; சனாதன தர்மமும் அத்தகையதே. இதற்குத் தனி உரிமை கொண்டாட எவருக்கும் அதிகாரமில்லை.

கேள்வி: 5. ஒவ்வொரு மதமும் தன்னளவில் ஒன்றிணைந்ததே. வேதாந்தத்திற்கு மட்டும் ஏன் தனிச் சிறப்பு?

பதில்: சட்டம் அனைவருக்கும் பொது. அதுபோல் ஒருங்கிணைந்த சத்தியத்தைப் பேசுவது சனாதன தர்மம்; தனிப்பட்ட நெறியை

விளக்குவது ஸ்வதர்மம்.

கேள்வி: 6. வேதாந்தம் இந்தியர்களுக்கு மட்டுமே உரியது அல்லவா?

பதில்: இல்லை. வேதாந்தத்தை நீங்கள் காணும் முறை அது! 'இந்தியாவிற்கு மட்டும்' என்று எதற்காக எல்லை கட்டுகின்றீர்கள்? சிருஷ்டியில் உள்ள அடிப்படைத் தத்துவங்களின் தொகுப்பு 'வேதாந்தம்' ஆகின்றது.

கேள்வி: 7. நாங்கள் அப்படித்தானே அதைக் கருத முடியும்?

பதில்: உங்கள் கண்ணோட்டம் அத்தகையது! வேதாந்தத்தை அதிகார பூர்வமாக எடுத்துரைக்கும் தகுதி மேலை நாட்டு அறிஞர்களுக்குக் கிடையாது. ஹிந்து சந்நியாசிகளிடம் சென்று உள்ளவாறு உணரவேண்டும். சங்கீத வித்வான் சிற்பக்கலைஞனை விமர்சனம் செய்யத் தகுதி அற்றவர்! ஒரு விஞ்ஞானி பாரபட்சமின்றி உண்மையைத் தேடுகின்றான். 'சத்தியம்'என்பது மேற்கு,கிழக்குஎன்றஎல்லைகளுக்குள் அடங்கியது அன்று. அதுபோல் காய்தல் உவத்தல் இன்றி 'சத்தியத்தைத் தேடும் மெய்ஞ்ஞானியாக, जिज्ञासु- (ஜிஞ்ஞாஸு) இருப்பவர் உள்ளபடி நிலையைத் தெரிந்து கொள்ள முடியும். அத்தகைய விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன் அணுகினால் உண்மை தெற்றெனப் புரியும்

கேள்வி: 8. கிறிஸ்துவ நெறியைப் போல், வேதாந்தமும் ஒரு சத்திய நெறி. அவ்வளவு தான். இதுதான் சத்தியத்தை முழுமையாகத் தொகுத்து அளிக்கின்றது என்று நீங்கள் எப்படிக் கூறலாம்?

பதில்: தோற்றங்கள் மாறுபட்டவை; அவற்றின் அடிப்படை உண்மை மாறாது. முகத்தோற்றம் பலவாறு அமையும்; ஆனால் மனிதத் தன்மை ஒன்றே! அங்ஙனம், 'தர்மம்' ஒன்று தான். அது செயல்படுத்தப்படும் வழிமுறைகள் மாறலாம். கிறிஸ்துவ தர்மம், இஸ்லாம் தர்மம், ஹிந்து தர்மம் என்று கூறலாம். ஒவ்வொரு மதமும் ஒரு குறிப்பிட்ட நெறியில் தர்மத்தைக் கடைப்பிடிக்கலாம். அனைத்தையும் ஒன்று சேர்த்தால் 'சனாதன தர்மம்' ஆகும்.

கேள்வி: 9. வேதாந்தம் அல்லது சனாதன தர்மம் என்பது சத்தியத்தின் ஒரு பகுதி அல்லவா?

பதில்: பகுதி என்பது ஒவ்வொன்றினுக்கும் உரிய அதனுடைய ஸ்வதர்மம் ஆகும். ஆனால் சனாதன தர்மமோ படைப்புலகு முழுவதிற்கும் ஏற்றது. உலகில் தற்போது உள்ள மதங்களும், இனித் தோன்றப் போகின்ற அனைத்தும் அதற்குள் அடக்கம். எல்லா ஸ்வதர்மங்களையும் ஒருங்கே சேர்த்த இணைப்புச் சனாதன தர்மம்.சிருஷ்டி முழுவதற்கும் அது பொருந்தும்; அதற்கு அப்பாற்பட்டது எதுவும் இல்லை.

கேள்வி: 10. இந்தியாவில் கடைப்பிடிக்கும் நெறியின்படி அது ஒரு குறிப்பிட்ட பகுதி தான். நாங்கள் சனாதன தர்மம் என்பதை இந்திய வாழ்க்கை நெறி என்றுதான் குறிப்பிட முடியும்.

பதில்: இந்தியாவோடு மட்டும் ஏன் அதை இணைக்கின்றீர்கள்? பிரபஞ்சம் அனைத்திற்கும் பொருந்துகின்றதா இல்லையா என்று ஆலோசித்துப் பாருங்கள். நான் உங்களுக்கு இதுவரை கூறியது அதில் ஒருபகுதி மட்டுமே. ஒரு சிறு மாதிரி (Sample) எடுத்துக் காட்டினேன். அவ்வளவுதான். ஒரு கை நீரை ஆராய்ந்தால் நீரின் தன்மையை ஆராய்ந்தது ஆகின்றது அல்லவா? அது விஷ்ணுவின் கையில் உள்ள தர்ம சக்கரம் போல் உருவகப் படுத்தித் தரப்படுகின்றது. எனவே இது இந்தியாவிற்கு மட்டுமல்லாது, உலகம் முழுவதிற்கும் சொந்தமானது. அனைத்து மதங்களும் அதில் இடம் பெறுகின்றன. இந்த உண்மையை நாம் உணர்ந்தால்தான் சகோதரத்துவம் நிலைக்கும். நம்மிடையே மனக் கசப்புக்குப் பதில் ஒற்றுமை இருந்தால் மற்றவர்களுக்கும் பாடம் புகட்டலாம். ஒரு சில அம்சங்களில் நம்மிடையே கருத்து ஒற்றுமை ஏற்பட முடியாது போனால், தனிப்பட்ட தர்மம் என்று அதை ஒதுக்கி வைக்கலாம். அதுதான் பண்பாட்டிற்கு அறிகுறி. 'ஒரு சர்ச்சில் (மதப் பிரிவில்) பிறப்பது நல்லது; அதிலேயே, மடிவதுதான் தீமையானது' என்று சுவாமி விவேகானந்தர் மேற்கத்தியர்களுக்கு எடுத்து உரைத்தார். மதவெறியினின்று நாம் விலகி இருக்க வேண்டும். சமய வாழ்வின் உன்னத லட்சியம் அதுவே.

கேள்வி: 11. ஹிந்து தத்துவம், புராணங்கள் முதலியன சத்தியத்தை விளக்குகின்றன. இது சத்தியத்தின் ஒரு பகுதிதான். இது பூரண சத்தியம் ஆகுமா?

பதில்: எந்த விளக்கமும் எல்லைக்கு உட்பட்டதுதான். இதுவரை வெளியாகாத உண்மை (அவ்யக்தம்) வெளிப்படுகின்றது (வ்யக்தம்). அத்தகைய வ்யக்தம் தன் அளவில் முழுமையானதுதான். ஆயின் பூரண உண்மையை அது முழுமையாகத் தருவதில்லை. வ்யக்த நிலை மேலும் விரிவடைகின்றது. பரிபூரணத்தை எட்டும் வரை இந்த விரிவு நடைபெறுகின்றது. 'பூர்ணம் அத: பூர்ணம் இதம்—தோற்றத்திற்கு வராத அது பூரணம்; தோற்றத்திற்கு வந்த இதுவும் பூரணம்' என்று கூறப்படுகின்றது அல்லவா? அந்த அகண்ட, பரிபூரண நிலையை அடையாமல் இருக்கும் வரை நாம் லட்சியத்தை எய்தியவர்கள் அல்லர். எனவே குறுகிய எல்லைகளுக்கு அப்பாற்பட்டு எல்லையற்ற நிலையை அடைய நாம் முயற்சி செய்ய வேண்டும். வேதாந்தம் கூறுவதும் இதுவே. மானிட, மிருக, பறவை என்று இயற்கை அனைத்தையும் தன்னுள் அடக்கிய பிறகும், அதற்கு அப்பாற்பட்டு ஏதோ ஒன்றைக் கொண்டிருப்பதே வேதாந்தம். 'வேதாந்தம்' என்ற சொல்லே அதனை எல்லைக்குட்படுத்துகின்றது எனலாம்!

கேள்வி: 12. சுவாமிஜி, சனாதன தர்மத்தின் ஒரு வடிவே வேதாந்தம்.

பதில்: அல்ல. வேதாந்த உண்மைகளை வாழ்க்கையில் பயன் படுத்தும் நடைமுறை நெறியே (Application) சனாதன தர்மம். சத்தியத்தைப் பூரணமாகக் கிரகிக்கும் ஆற்றல் நமக்கு உண்டு; ஆயின் ஒரு பகுதியை மட்டுமே கையாளக்கூடிய திறமை உள்ளது. சத்தியம் வேதாந்தம், அதனைச் செயல்படுத்துவது தர்மம். தனிப்பட்ட ஒருவனுக்கு அதுவே ஸ்வதர்மம். செயல்படு முறையின் தொகை சனாதன தர்மம். உண்மை பிரக்ஞான ஸ்வரூபமாக இருக்கின்றது. அதுதான் நமது நிலை.

கேள்வி: 13. உண்மையைத் தெளிவாக்கும் முறைகளில் வேதாந்தமும் ஒன்று தானே?

பதில்: வேத+அந்தம்=அறிவின் எல்லை எதுவோ அது வேதாந்தம். பூரண போதத்தை (Pure Consciousness) உணருவதே அந்த எல்லையாகும். அது தான் முடிந்த உண்மை. அதற்கு அப்பாற்பட்டு எதுவும் இல்லை. (ஸா காஷ்டா ஸா பராகதி—அதுவே மேலானது; அதுவே உயர்ந்த நிலை—கடோபநிஷத்)

கேள்வி: 14. 'சத்தியம்' எல்லா வெளிப்பாடுகளுக்கும் அப்பாற்பட்டது எனின், அதனை வேதாந்தத்துடன் எவ்வாறு ஐக்கியப் படுத்தலாம்?

பதில்: 'வேதாந்தம்' என்ற பதம் நமது வசதிக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அந்தச் சொல்லினால் நாம் கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லை. பராவித்யா (மேலாம் ஞானம்) வர்ணனைக்கு அப்பாற்பட்டது. நாவினால் ருசிக்கப்பட்ட எதுவும் எச்சிலாகி விடுகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறினார்: "நாவினால் எச்சில் படுத்தப்படாத ஒரே பொருள் பிரம்மம் மட்டுமே." எது சத்தியமோ, அது வேதாந்தம், பிரக்ஞானம். அது பல முறைகளில் தன்னை வெளிப்படுத்திக் கொள்கின்றது. சக்தியோடு மிளிர்வதும் அதன் பெருமையே!

கேள்வி: 15. வேதாந்தம் அனைத்தையும் அடக்கியது சத்தியம். சாதாரண மனிதன் எவ்வாறு வேதாந்தத்தைப் பரிபூரணமாக உணர முடியும்?

பதில்: தன்னுடைய சக்திக்கு ஏற்ப ஒவ்வொருவனும் செயல்புரிகின்றான். பாமர மக்களுக்குச் சடங்குகளே போதும்; அறிவுக்கூர்மை வாய்த்தவர்களுக்குச் சாஸ்திர ஆராய்ச்சி தேவைப்படும். ஆனால் புத்திக்கும் அப்பாற்பட்டது சத்தியம். எனவே புலன்களும், மனமும், புத்தியும் அதனை முற்றிலும் கிரகிக்கும் தகுதி அற்றவை. ஓர் உதாரணத்தால் இதனை விளக்கலாம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் அடிக்கடி 'சமாதி' அனுபவத்தில் திளைத்து இருப்பார். ஒரு பக்தர் அவரைக் கேட்டார்: "ஐயா, தாங்கள் பலமுறை நிர்விகல்ப சமாதி அனுபவம் அடைந்திருக்கின்றீர்கள். அது எத்தகைய அனுபவம் என்று விளக்குவீர்களாக." பரமஹம்சர் சொன்னார்: "சமாதி அனுபவத்தை வார்த்தைகளால் எப்படி விளக்குவது? அது மனம் வாக்கிற்கு எட்டாதது ஆயிற்றே." "எப்படியாவது

எனக்குப் புரியவைப்பீர்களாக'' என்று பக்தர் மன்ருடினர். சிறிது யோசித்துப் பின் பரம ஹம்சர் கேட்டார்: ''உங்களுக்கு மிகவும் பிடித்த சுவையான பண்டம் யாது?'' ''ரச குல்லா''. ''சரி. ஒரு பெரிய பீப்பாய் உள்ளது. ஆறு அடி உயரம், மூன்றடி விட்டம் ரசகுல்லா வைச் சிறு துகள்கள் ஆக்கி, அதன் இனிப்பு ரசத்துடன் பீப்பாய் நிறைய நிரப்பி உள்ளது. உங்கள் சரீரம் தலையிலிருந்து கால் வரை சுவைக்கும் உணர்வு உடைய நாவாக மாறி விட்டது என்று எண்ணிக்கொள்ளுங்கள். அந்தப் பீப்பாயில் இந்த நாவை முழுக அடித் தால் எப்படியிருக்கும்?'' கற்பனை அதிகம் ஆக ஆக, பக்தரின் முகம் பிரகாசமடைந்தது! நாவில் நீர் சுரக்க 'ஆகா, பிரம்மானந்தம்' என்று சப்புக்கொட்டினர்! பரமஹம்சர் உடனே 'சமாதியும் ஒருவகையில் அத்தகைய அனுப வமே' என்று பதில் கொடுத்தார்.

மனம், மொழி, காலம், இடம் என்று அனைத் தையும் கடந்த மெய்ப்பொருளை எப்படி வர் ணிப்பது, எப்படி நினைப்பது? எனவே ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி மௌனமாக இருக்கின்ருர். மௌனம் என்ற மொழிதான் அதனை விளக்க முடியும். 'யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மனஸா ஸஹ—எங்கு வாக்கும்,மனமும் செல்ல இயலாது திரும்பி வருகின்றனவோ', என்று உபநிஷத் குறிப்பிடுகின்றது. அந்த நிலையை விவரிக்க, வர்ணிக்க நீங்கள் முயற்சி செய்கின் றீர்கள். எனவே நாம் தரும் விளக்கம், வரை யறை எதுவும் முழுமை ஆகாது. எனினும் ஏதோ ஒரு வகையில், சிறிதளவாவது நாம் அனுபவித்து உணரலாம். அதுதான் நமது நிலை.

கேள்வி: 16. வேதாந்தத்தின் லட்சியம் சமாதி; Sufi (ஸுஃபி) என்ற குழுவினரின் லட் சியம் வேறு நிலை. இரண்டும் ஒன்ரு? சமா தியை அடையப் பல நெறிமுறைகள் இருக்கின் றனவா?

பதில்: சமய சாதனையில் லட்சியம் ஒன்று தான். எல்லா நெறிகள் மூலமும் சமாதி எய்த லாம். அது அனைவருக்கும் சாத்தியம். அது மானிடனின் பிறப்புரிமை. சரீரத்தில் அடைய வேண்டிய பரிணமத்தின் எல்லையாக மானிட சரீரம் அமைகின்றது. அதன் பின் பரிணமம் மனம், அறிவு என்ற துறைகளில் தான் தேவைப்படுகின்றது. ராஜயோகம் இந்தத் துறையில் கவனம் செலுத்திப் பரிணமிக்கின் றது. எனவே உயிரினங்கள் மானிடப்பிறவி எடுத்த பின்னரே யோகம் பயில முடியும். அது வரை அவை பரிணமம் பெற வேண்டும். மானிடர்களோ இதன் சிறப்பை உணர்ந்து இப்பிறவியிலேயே யோகிகள் ஆகவேண்டும். ராஜயோகம் பயிலும் அனைவரும் அதன் எட் டாவது அங்கமாகிய 'சமாதி' அனுபவம் பெற லாம்.

கேள்வி: 17. வேதாந்த அனுபவத்தைச் சிலர் 'சமாதி' என்கின்றனர்; வேறு சிலர் வேறு பதங்களைப் பயன்படுத்துகின்றனர். இவை ஒன்றுக்கொன்று மாறுபட்டவைகளா?

பதில்: 'சொல்' எதுவாயினும், குறிக்கப் படும் அனுபவம் காலம், இடம் ஆகிய எல்லை களுக்கு அப்பாற்பட்டது. மனம் தூயதாகி யோக முறைப்படி 'சம்யமம்' செய்தால் நீங் களே அனுபவிக்கலாம். எப்படியாவது புரிய வைக்க வேண்டும் என்று கருதி ஆத்மீக ஞான அனுபவம் 'சமாதி' என்ற சொல்லால் கட்டுப் படுத்தப்படுகின்றது. அது அகண்ட சத், சித் ஆனந்தம் என்பதே சரியான கருத்து. 'சத்சித் ஆனந்தம்' எந்தச் சமயக் கருத்தாலும் விளக்கப் படவொண்ணுதது. இது அனைவருக்கும் பொது வானது.

கேள்வி: 18. ஒரு ஹிந்து தன்னுடைய நெறியே முடிவான நிலை என்கின்ருன். கிறித் தவனும், முஸ்லீமும் அவ்விதமே கூறுகிருர்கள். இவர்களுக்கிடையே பொதுவாகக் காணப் படுவது எது?

பதில்: இவர்களுக்கிடையில் பொதுவாகக் காணப்படுவது மனிதன் என்பவனே. ஆன்ம உணர்வின் ஏழு படித்தரங்களில் மூன்று நிலை கள் மனிதனுக்கு உரியவை. அவை விழிப் புணர்வு, கனவு நிலை மற்றும் ஆழ்ந்த உறக்கம் ஆகியன. விழிப்புணர்வில் பலவகை வேறு பாடுகளைக் காணலாம். ஒவ்வொருவரும் கன வில் தமக்கெனத் தனி உலகம் படைக்கின்ற னர். இரண்டு கனவு நிலைகள் ஒன்றுபோல் இருப்பதில்லை. விழித்திருக்கையில் மனிதன் அதனைத் திட்டமிடவோ, கட்டுப்படுத்தவோ இயலும். (தொடரும்)

பராசக்தியின் மகிமை

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1983ல் திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் நவராத்திரி விழா அந்தர் யோகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு)

கடவுள் ஏன் உலகைப் படைத்தார்? என்னும் கேள்வி பலருக்கிடையில் சர்வ சாதாரணமாக எழும் கேள்வியாகும். கடவுள் உலகைப் படைத்தது குயவன் பாண்டங்களைச் செய்வது போன்றது அன்று. குயவன் வேறு; அவன் செய்கின்ற பாண்டங்கள் வேறு; அவன் கையாளும் களிமண் வேறு. அவன் மனிதனுடைய தேவைக்கு ஏற்றவாறு பலவிதமான பாண்டங்களை அமைக்கின்றான். கடவுள் அப்பாங்கில் உலகை அமைக்கவில்லை.

'ஆதிபகவன் முதற்றே உலகு, உலகனைத்தும் ஆனாய் நீயே' என்பன சிருஷ்டியும், சிருஷ்டி கர்த்தாவும் ஒன்று என்பதைக் குறிப்பிடுகின்றன. கடவுள் உலகனைத்துமாக இலங்கிக் கொண்டிருக்கின்றார். அப்படியானால் உலகில் நலம் கேடுகள் அமைந்திருப்பானேன்? சிருஷ்டி என்பதற்கே பேதம் என்பது பொருள். களிமண்ணில் வடிவத்தை உண்டாக்குவதற்கு முன்பு அது வித்தியாசமில்லாதிருக்கிறது. சட்டி,பானை,குடம், மிடா என்று களிமண்ணைக் கொண்டு வடிவங்களை அமைத்துவிட்டால் அதனிடத்தில் வித்தியாசம் வந்துவிடுகிறது.

அயர்ந்த உறக்கத்தில் மனிதனுக்கும் புலிக்கும் வித்தியாசம் இல்லை. விழிப்பு நிலை வந்துவிட்டால் புலி அதற்கேற்ற தொழிலைச் செய்கின்றது. விழிப்பு நிலையில் மனிதன் அவனுக்கேற்ற செயலைச் செய்கின்றான். சிருஷ்டியில் எல்லாரையும் நல்லவர்களாகக் கடவுள் படைத்திருக்கலாம். தீமையை ஏன் அவர் படைத்தார் என்பது கேள்வி. நலம் கேட்டைப்பற்றி நாம் சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். பாம்பின் பல்லில் விஷம் இருக்கின்றது. அதைக் கேடு என்று சொல்லுகின்றோம்; ஆனால் அதே பாம்பு சிவனாருக்கு ஆபரணமாக அமைந்திருப்பதால் சிவனைப் பன்னக பூஷணன் என்று அழைக்கின்றோம். பாம்பின் விஷத்தை எடுத்து மருந்தாகச் செய்து உயிரைக் காப்பாற்றுவதற்குப் பயன்படுத்துகிறார்கள். பாம்பின் விஷம் நல்லதா கெட்டதா என்ற கேள்வி வருமிடத்து 'ஒரு சூழ்நிலையில் அது நல்லதாகவும் மற்றொரு சூழ்நிலையில் அது கெட்டதாகவும் பயன்படுகிறது. எனவே நாம் எண்ணிப் பார்க்காது கடவுள் பிரபஞ்சத்தில் கேட்டை ஏன் படைத்தார் என்று கேட்கின்றோம்.

நலம் கேடு ஆகிய இரண்டும் சேர்ந்தே எல்லாப் பொருள்களிடத்தும் அமைந்திருக்கின்றன. பொருள்களை நன்கு கையாளத் தெரிந்து கொள்ள வேண்டும். விஷ வைத்தியன் விஷத்தை ஔஷதமாகவும் மாற்றலாம்; விஷத்தைக் கொண்டு மனிதனைக் கொல்லவும் செய்யலாம். வாழ்வை மனிதன் விரும்பினால் மேன்மைப்படுத்தலாம்; வாழ்வைத் தாழ்மைப்படுத்தியும் கொள்ளலாம். கேடு என்பது முற்றிலும் கேடு உடையது அன்று. பசி நல்லதா, கெட்டதா என்னும் கேள்வி எழுகிறது. பசியே இல்லாவிட்டால் அது உடல் ஆரோக்கியத்துக்கு அறிகுறி அன்று. பசி வந்து கொண்டிருந்தால் உடல் ஆரோக்கியமாக இருந்து கொண்டு வருகிறது என்பதற்கு அறிகுறியாகும். ஆனால் பசியைப் பிணி என்று சொல்கின்றோம். பிறவியைப் பிணி என்று சொல்கின்றோம். பிறவியை எல்லாரும் பிணியாகக் கருதுவதில்லை. எடுத்த பிறவியை நல்ல பாங்கில் கையாளுமிடத்துப் பிறவி நமக்குப் பிணியாக இருக்காது. எடுத்த பிறவியைத் தனக்கும், பிறர்க்கும் துன்பம் தரும் பாங்கில் பயன்படுத்துவோமானால் அது பிணி ஆகின்றது. பிறர்க்கும் நமக்கும் நலன் தருகின்ற பாங்கில் பயன்படுத்துவோமானால் அது பிணியாகாது. பிறவியைக் கையாளுவதைப் பொறுத்து அது பிணி அல்லது பிணியற்றதாகின்றது.

உலகில் அனைத்தும் நமக்குத் தேவையாக இருக்கின்றன. உலகப்பொருள்களின் தன்மையை அறிந்து அதைக் கையாளுகின்ற பாங்கில் கையாளவேண்டும். 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருளின் மெய்ப் பொருளைக் காண்பதே அறிவு'. சிருஷ்டியை ஆராய்ந்து பார்த்தால் அனைத்துமாகக் கடவுள் இருப்பது விளங்கும். கடவுள் சொருபத்தில்

சிருஷ்டியிலுள்ள அனைத்தும் அடங்கி இருக்கின்றன. உலகுக்கு அப்பால்பட்ட நிலையில் அவரைச் சிவன் என்று சொல்கின்றோம். அது அசைவற்ற பொருள். அசையும் பொருள் சக்தியின் விளையாட்டு. அசையும் பொருள் அசையாப் பொருள் என இரண்டில் அசையும் பொருளாக இருப்பது சக்தி; அசையாப்பொருளாக இருப்பது சிவம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் இதை ஒரு உபமானத்தின் மூலம் தெளிவு படுத்துகின்றார். பாம்பு சுருண்டு படுத்திருக்கின்றபொழுது அது பரப்பிரம்மம். அது வளைந்து வளைந்து போகும்பொழுது சக்தியின் சொருபம். சிவனும் சக்தியும் வெவ்வேறல்ல. செயலற்ற நிலையில் இருக்கும் சிவம் செயலாற்றுவதை முன்னிட்டுச் சக்தியாகக் கூறப்படுகிறது. செயல் மூலம் இயற்கையினுடைய விளையாட்டுக்கள் அனைத்தும் நடைபெறுகின்றன. உலகம் என்பது ஒரு முடிவில்லாத விளையாட்டு. இறைவனுடைய இவ் அலகிலா விளையாட்டில் நலம் கேடுகளைக் கண்டு வருகின்றோம். நலனை நலனாகக் கருதுவதும், கேட்டைக் கேடாகக் கருதுவதும் முதல்பாடம். மனபரிபாகத்தில் மேலே வர வரக் கேடு நல்லதாக மாறி அமைவதைக் காண்கின்றோம்.

கல்வி கற்பதில் தெரிந்துள்ள ஒன்றைக் கொண்டு, தெரியாத ஒன்றைத் தெரிந்து கொள்ள முயல்கின்றோம். பிரபஞ்சம் கண்கூடாகத் தென்படுகின்றது. இப்பிரபஞ்சத்தில் கடவுள் காட்சி தென்படுவதில்லை. இவ்வுலகை ஜகன்மாதவாகக் கருதுகின்றோம். ஆகையால் லலிதாம்பிகைக்கு அமைந்துள்ள ஆயிரம் திருநாமங்களுள் ஸ்ரீ மாதா என்பது முதல் நாமமாக அமைந்திருக்கிறது. உலகிலுள்ள உயிர்கள் அனைத்துக்கும் அம்பிகை தாயாக இருக்கின்றாள். அவளிடம் தெய்வீகம் யாண்டும் பிரியாது இருந்துவருகின்றது. உலக இணக்கங்களுள் மேலானது தாயோடு வைக்கின்ற இணக்கமாகும்.

தாய்க்கும் சேய்க்கும் உள்ள இணக்கத்தை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு கடவுளோடு இணக்கம் வைக்கலாம். தாய்ப்பற்று அதிகரிக்க அதிகரிக்கச்சேய்க்கு நலம் உண்டாகிறது. பெற்றெடுத்த தாய்க்கும், ஜகன்மாதாவுக்கும் வித்தியாசம் உண்டு. தாய் தான் பெற்றெடுத்த சேயிடம் எப்பொழுதும் அனுசரணையாக இருந்து வருகின்றாள். குழந்தை கேடு செய்தால் பெற்றெடுத்த தாய் அதைக் கேடாக நினைக்காது நலனாகவே நினைக்கின்றாள். பந்த பாசத்தில் அகப்பட்டுக் கொண்டுள்ள தாய் சேயின்மீது தீவிரமானநடவடிக்கை எதுவும் எடுப்பதில்லை. ஸ்ரீ மாதாவாக இருக்கும் அன்னை பராசக்தி அப்படிப்பட்டவள் அல்லள். அவள் மஹாராணியாக இருக்கின்றாள். உயிர்களை ஆட்சி புரிவதில் வல்லமை பொருந்தியவளாக இருக்கிறாள். பெற்றெடுத்த தாயை விட அன்னை பராசக்தி கருணை நிறைந்தவளாக இருக்கின்றாள். வல்லரசிக்கும் மேலான வல்லரசியாக இருப்பது அன்னை பராசக்தியின் அலாதியான மஹிமையாகின்றது.

அரசாங்கச் சட்டத்தை நாம் ஏமாற்றி விடலாம். ஆனல் அன்னை பராசக்தியை ஏமாற்றி நாம் முன்னேற்றம் அடையமுடியாது. அரசாங்கம் விதித்துள்ள சட்டத்தை மீறி வெற்றி காணலாம். ஆனல் அன்னை பராசக்தியின் திட்டத்தை மீறி யாரும் வெற்றிபெற முடியாது. அன்னைபராசக்தியின் திட்டமென்பதும், இயற்கை நியதி என்பதும் ஒன்றே. நெருப்பில் கை வைத்தால் நெருப்பு கையைச் சுட்டு விடும். யாருக்கும் தெரியாமல் ரகசியமாக நெருப்பில் கை வைத்தாலும் அது சுடத்தான் செய்யும். அந்த நியதியை யாரும் மாற்ற முடியாது. இயற்கையை முறையாகக் கையாளுகின்றவன் தர்மத்தை அனுஷ்டிக்கிறான். இயற்கையை முறைதவறிக் கையாளுகின்றவன் தன் அறியாமையினல் அதர்மம் வெற்றி அடையும் என்று எண்ணுகின்றான். வாழ்க்கையை ஒவ்வொருவனும் தன்போக்கில் ஆராய்ச்சி செய்கின்றான். இயற்கையை ஆராய்ந்துபார்த்தால் உயிர்கள் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தம்முடைய வாழ்க்கையைக் கொண்டு செலுத்தி முன்னேற்றம் அடைந்து வருகின்றன. நீரில் வாழ்ந்து வரும் உயிர்கள் நீருக்குள்ளேயே முன்னேற்றம் அடைந்து வருகின்றன. ஆகாயத்தில் பறக்கின்ற உயிர்கள் அந்தச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு வாழ்ந்து முன்னேற்றம் அடைந்து வருகின்றன. நிலத்தில் வாழும் உயிர்கள் தங்களுக்கேற்ற சூழ்நிலையில் வாழ்ந்து படிப்படியாக முன்னேறி வருகின்றன. (தொடரும்)

குறிப்புகள்

(சுவாமி துருவானந்தர்)

சேலம் மாநாடு

தம்பி: அண்ணா! எங்கேயோ விரைந்து போகிறீர்களே! என்னையும் அழைத்துக் கொண்டு செல்லமாட்டீர்களா?

அண்ணன்: ஹிந்து சகோதரா! உனக்கு விஷயம் தெரியாதா! இன்றுதான் நம் சேல மாநகரம் புதிய விழிப்புணர்வைப் பெற்றுள்ளது.

தம்பி: நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே.

அண்ணன்: இன்று முதல் நம் சேலமாநகரில் ஹிந்து எழுச்சி மகாநாடு தொடர்ந்து மூன்று நாட்கள் நடக்க விருக்கிறது. ஹிந்துக்களாகிய நாம் அவசியம் கலந்துகொள்ளவேண்டிய மகாநாடு. இங்கு ஹிந்துக்களாகிய நாம் படும் அவதியைக்குறித்து மகாநாட்டில் பேசப்போகிறேன். நீயும் விரும்பினால் உடனே புறப்படு.

(மகாநாட்டுப் பந்தலுக்கு முன் இருவரும் வந்து சேர்கின்றனர்)

தம்பி: கதிரவனின் பொன்னொளிக்கு நிகரான காவிக் கொடிகள் காற்றில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கின்றனவே! வண்ண வண்ண வாகனங்களில் கொடிகளும், தெருக்களில் தொங்குகின்ற தோரணங்களும் வருவோர் போவோருக்கு வியப்பைஉண்டுபண்ணுகின்றனவே! மக்கள் கூட்டம் கூட்டமாக ஓர் அலங்காரப் பந்தலினுள் போய்க்கொண்டிருக்கின்றனரே. அவை என்ன?

அண்ணன்: ஹிந்து சகோதரா! அதுதான் நாம் காணவந்துள்ள ஹிந்து எழுச்சி மகாநாட்டின் அலங்காரப் பந்தல். அதோ அதுதான் நுழைவு வாயில். அனுமதி இலவசம். ஆகவே மகாநாடு தொடங்குவதற்கு முன் நாம் உள்ளே போய்விடவேண்டும்.

தம்பி: அண்ணா ஹிந்து எழுச்சி மகாநாடு இப்போது கூட்டவேண்டியதன் அவசியம் என்ன?

அண்ணன்: தம்பி! சரியாகக் கேட்டாய். ஹிந்துக்களாகிய நாம் என்றைக்கும் சகிப்புத் தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் படைத்தவர்களாகவே இருந்து வருகிறோம். இத்தகைய நம் இயல்பைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் நம் பாரதநாட்டை மீண்டும் தங்களுடையதாக ஆக்க முயலுகிறார்கள்; அடிமைப்படுத்த முயலுகிறார்கள். மத மாற்றம் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தம்பி: அண்ணா! நீங்கள் சொல்வது முற்றிலும் உண்மைதானா? இதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா?

அண்ணன்: சொல்லுகிறேன் கேள். நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1948ல் நம் நாட்டில் ஹிந்துக்கள் 88 சதவீதம். 1981ல் ஹிந்துக்கள் 78 சதவீதம்.

1961ல்	முஸ்லீம்கள்	4.7 கோடிப் பேர்
1971ல்	,,	6.8 கோடிப் பேர்
1981ல்	,,	10.0 கோடிப் பேர்

அதாவது ஒவ்வொரு பத்து ஆண்டிலும் முஸ்லீம்கள் பெருமளவில் பெருகிக்கொண்டே வருகின்றனர்.

ஆனால் ஹிந்துக்கள் 25 சதவீதம் மட்டுமே பெருகியுள்ளனர்.

தம்பி: அண்ணா! இவ்வளவு வேகமாக முஸ்லீம்கள் பெருகவும் ஹிந்துக்களாகிய நாம் எண்ணிக்கையில் குறையவும் காரணம் என்ன?

அண்ணன்: தம்பி! குடும்பக் கட்டுப்பாடு என்று நமது அரசாங்கம் ஜனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தப் பெரிய திட்டம் தீட்டி ஏராளமான பணம் இதற்கு ஒதுக்கியுள்ளது. ஆனால் முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்ளாது இல்லாத காரணங்களைக் கூறி ஜனத்தொகையைப் பெருக்கி வருகின்றனர். ஆனால் இந்தத் திட்டத்தில் கிடந்து உழன்று நாளுக்குநாள் நலிபவர்கள் நமது ஹிந்துக்களே.

தம்பி: அண்ணா! அப்படியானால் நமது அரசாங்கம், குடும்பக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்காதவர்களைத் தண்டிக்கலாமே! சட்டத்தின் முன் அனைவரும் சமம் தானே! முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் செய்ய மறுக்கிற குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஹிந்துக்

களின் மீது மட்டும் ஏன் திணிக்கவேண்டும்? ஹிந்துக்கள் என்ன ஏமாந்தவர்களா?

அண்ணன்: தம்பி, அப்படித்தான். முஸ்லிம்களேயோ கிறிஸ்தவர்களேயோ பகைத்துக் கொண்டால் அவர்கள் மொத்தமாக ஓட்டுகள் தங்களுக்குப் போடாமல் இருந்து விடுவார்களோ என்ற பயத்தில், பதவி ஆசை பிடித்த அரசியல் வாதிகள் முஸ்லீம் கிறிஸ்தவர்களைத் தட்டிக்கேட்கத் தைரியமில்லாது இருக்கிறார்கள். சிதறுண்ட நிலையில் உள்ள ஹிந்துக்கள் எப்படியும் தங்களுக்கு ஓட்டுப் போட்டுவிடுவார்கள் என்கிற தைரியத்தில் ஹிந்துக்களை மட்டும் வற்புறுத்திக் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தை நம்மீது திணிக்கிறார்கள்.

தம்பி: சரியண்ணா! முஸ்லீம்கள் பெரும்பான்மையாக இருந்தால் என்ன? அதனால் நமக்கு என்ன நஷ்டம்?

அண்ணன்: தம்பி! உன்னைப் போன்றுதான் படித்த பல மக்களும் இதே கேள்வியைக் கேட்கின்றனர். வரலாற்றைச் சொல்லுகிறேன்.

ஔரங்கசீப் காலத்தில், அல்லாவுதீன் கில்ஜி காலத்தில் இன்னும் முஸ்லீம் அரசர்கள் காலத்தில் இந்துக்களாகிய நாம் எந்த நிலையில் வைக்கப்பட்டிருந்தோம் தெரியுமா?

தம்பி: தெரியாதே. விபரமாகச் சொல்லுங்கள்.

அண்ணன்: முகமதுநபி இயற்றியது குரான்.

அவருக்குப் பின்வந்த கலிபாக்களும், மதத் தலைவர்களும் ஹடித் என்றும் ஷரியத் என்றும் சில கட்டளைகளையும் சட்டங்களையும் முஸ்லிம்களுக்கு விதித்திருக்கிறார்கள். அதன்படி முஸ்லிம் அல்லாதவர்கள் தலை சீவப்படும். ஹிந்துக்கள் 'ஜஸியா' என்ற வரியைக் கட்ட வேண்டும். அவர்கள் முஸ்லீம்களாக மாறுகிற வரை—மாற்றப்படுகிறவரை 'ஜிஹாத்' என்ற புனிதப் போர் நடக்கும். ஆண்கள் படுகொலை செய்யப்படுவார்கள். பெண்களும், குழந்தைகளும் அடிமைகளாக ஆக்கப்பட்டு முஸ்லிம்களின் வீடுகளில் வேலை செய்வார்கள். சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும். நமது ஹிந்து கோயில்கள் தரைமட்டமாக்கப்படும்.

பூசாரிகள், அர்ச்சகர்கள், சமயத் தலைவர்கள், துறவியர்கள் கொல்லப்படுவார்கள். நமது புனித நூல்கள் கொளுத்திச் சாம்பலாக்கப்படும்.

தம்பி: போதும். அண்ணா போதும். ஜனத் தொகைப் பெருக்கத்தினால் இப்படியெல்லாம் செய்வார்கள் என்று யூகமாக நம்பி விடலாமா? மனித மனம் அந்த அளவு கீழ்த்தரமாகப் போகுமா?

அண்ணா: பாகிஸ்தானிலும், பங்களாதேசத்திலும் இதனை நாம் அனுபவித்து வருகிறோம். சுதந்திரம் பெற்றவுடன் பாகிஸ்தானில் இருந்த மூன்று கோடிப்பேர் என்ன ஆனார்கள்? சில ஆயிரம் பேர்கள் தான் இப்போது அங்குள்ளனர். அவர்களும் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கின்றனர். நமது ஹிந்துக்கள் அங்கே எந்த உயர்கல்வியும் கற்க முடியாது; உயர் பதவியும் பெறமுடியாது. ஆனால் இங்கே இந்தியாவில் முஸ்லீம்களுக்கு ஜனாதிபதி பதவி வரை தருகிறோம். சிந்தனை செய்துபார்.

தம்பி: இது நாள்வரை இவை எனக்குத் தெரியாத விஷயங்களாகவே இருந்து வந்துள்ளன.

அண்ணா: இன்னும் பல விஷயங்களை நீ அறியாதிருக்கிறாய். நீ மட்டுமா, உன்னைப் போன்று நம் நாட்டில் பலர் அறியாதிருக்கின்றனர்.

தம்பி: அப்படியானால் மற்றவைகளையும் சொல்லுங்கள் அண்ணா.

அண்ணா: மசூதிகள் அனைத்தும் முஸ்லீம்கள் வசம்; சர்ச்சுகள் அனைத்தும் கிறிஸ்தவர்கள் வசம்: ஆனால் நமது ஹிந்துக் கோயில்கள் அரசின் வசம். நமது ஹிந்துக் கோயில்களின் சொத்துக்கள் சுரண்டப்படுகின்றன. இது அநியாயம் இல்லையா? ஆகவே அரசு கோயிலை விட்டு வெளியேற வேண்டும். இது நியாயம் தானே!

தம்பி: இது நியாயமான கோரிக்கைதான்.

அண்ணா: மசூதிகள், சர்ச்சுகள் கோர்ட்டுகளில் கேஸ் போடும்பொழுது கோர்ட் ஸ்டாம்பு தேவையில்லை. ஆனால் நமது ஹிந்து ஆலயங்கள் முழு கோர்ட் பீஸ் கட்டவேண்டும். எப்படி இருக்கிறது?

தம்பி: இதென்ன அநியாயம்?

அண்ணா: முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள் பள்ளி, கல்லூரி துவங்கினால் அவர்கள் பணம் கட்டவேண்டியதில்லை. ஆனால் ஹிந்துக்கள்

பணம் கட்டினால் தான் அனுமதி.

தம்பி : இந்த அக்ரமத்தை எப்படிச் சகிப்பது?

அண்ணா : ஓய்வு பெற்ற முல்லா, மௌல்வி மோதினருக்கு நமது வரிப்பணத்திலிருந்து ஓய்வு ஊதியம் தரப்படுகிறது. ஆனால் நமது ஓதுவார்கள், பூசாரிகள், அர்ச்சகர்கள் கஞ்சிக் கில்லாமல் கஷ்டப்பட்டுச் சாகிறார்கள்.

தம்பி : அடப் பாபமே!

அண்ணன் : சமூக விரோதப் பணிகளுக்கு நம் பாரத நாட்டுக்குள் வந்து குவியும் அந்நிய பணத்தைத் தடை செய்ய அரசு அஞ்சுகிறது. மோசமான மத மாற்றத்திற்குத் தடை போடப் பின்வாங்குகிறது. முஸ்லீம், கிறிஸ்தவர் களுக்கு ஒரு பிரச்னை என்றால் அந்த மதத்தினர் மட்டுமல்ல, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களும், எம். எல். ஏக்களும் ஓடோடிப் போய்ப் பரிந்து பேச, வாதாட, போராட முனைந்து நிற்கிறார்கள். ஆனால் இந்துக்களுக்கோ நாதியில்லை. மண்டைக் காட்டில் நமது ஹிந்து தாய்மார்கள் பெற்ற அவமானம் ஐயோ சொல்ல வாய் கூசுகிறது. அந்தச் சம்பவம் நாடே அறியும். அந்தச் சம்பவத்தைக் குறித்து எந்த அரசியல் வாதியாவது அப்போது வாயைத் திறந்தார்களா?

தம்பி : அண்ணா! இதற்கெல்லாம் காரணம் என்ன?

அண்ணன் : தம்பி! நம்மிடையே ஒற்றுமை இல்லை. ஜாதி மோதல்களும், தீண்டாமையும் நம்மைப் பலவீனப் படுத்துகின்றன. மாற்று மதத்தினர் மதத்துக்காக ஓட்டளிக்கிறார்கள். நாம் கட்சிகளின் பின் ஓடுகிறோம். ஆகவே ஹிந்துக்களுக்கு நியாயம் வழங்கவும், ஹிந்துக்களின் பிரச்னைகளைத் தீர்க்கவும் அரசாங்கத்தை நம்பிப் பயனில்லை. இத்தனை ஆண்டுகளாக நம்பி நம்பி நாம் தாய்நாட்டிலே இரண்டாந்தர குடிமக்களாக வைக்கப்பட்டுள்ளோம். ஆகவே இந்திய நாட்டில் இந்துக்கள் தலைநிமிர்ந்து செல்ல உடனே ஹிந்துக்கள் ஒன்று சேர்ந்து தங்கள் பிரச்னையை விவாதிக்க வேண்டும். நாம் ஒன்று சேர்ந்துவிட்டோம் என்று தெரிந்தால் அரசியல்வாதிகள் நம் பக்கம் வருவார்கள். ஹிந்துக்களுக்காகப் பாடுபடக்கூடியவர்களையும் ஹிந்துக்களின் நலனில் நாட்டம் உள்ளவர்களையும் வேட்பாளர்களாக்கி அவர்களுக்கே ஓட்டுப் போடும் படி மக்களுக்குப் புகட்ட வேண்டும். சரி, நேரமாகிவிட்டது. நாமே ஒரு குட்டி மகாநாடு நடத்தி விட்டோம். அதோ பார். காவிக் கொடி ஏற்றப்படவிருக்கிறது. R. S. S. இயக்கத்தினர் எப்போதும் ஒழுங்கு, கட்டுப்பாடு, காலந்தவறாமை போன்ற பண்பு களில் சிறந்தவர்கள். நாமும் அந்தப்பண்பைப் பெற வேண்டாமா? ஆகவே இப்போது இத்துடன் நம் சம்பாஷணை நிற்கட்டும். மூன்று நாட்களும் மகாநாடு தொடர்ந்து நடைபெறும். மகாநாடு நடந்து முடிந்த பிறகு மீண்டும் சந்திப்போம். நீயும் மூன்று நாட்களும் மகாநாட்டில் கலந்துகொள். வருகிறேன்.

(மூன்று நாட்களும் மகாநாடு சிறப்பாக நடைபெறுகிறது. பின்னர் சந்திக்கின்றனர்.)

அண்ணன் : தம்பி! மூன்று நாட்களும் மகாநாட்டில் கலந்து கொண்டாயா!

தம்பி : ஆம் அண்ணா. உண்மையில் நான் மகாநாட்டில் மூன்று நாட்களும்கலந்துகொண்ட பிறகுதான் நம் நாட்டைப்பற்றி ஒன்றுமே தெரியாதிருந்தோமே என என்னைக் குறித்து வெட்கப்பட்டேன்.

அண்ணன் : நல்லது. இப்போதாவது நீ நம் நாட்டைப்பற்றித்தெரிந்துகொண்டது பற்றி மகிழ்ச்சி.

தம்பி : அண்ணா! மற்றும் ஒரு முக்கியமான விஷயம். நேற்று நடந்த மாபெரும் ஊர் வலத்தைப் பார்த்தேன். பிற்பகல் 2-45 மணிக்கு ஆரம்பித்த ஊர்வலம் மகாநாட்டுப் பந்தலையடைய இரவு 7 மணி ஆகிவிட்டது. ஊர் வலத்தில் கலந்துகொண்ட சில இளைஞர்கள் வீரன் சத்ரபதி சிவாஜி மன்னன் போன்றும், கிருஷ்ணபரமாத்மா போன்றும், பீமன் போன்றும், முருகக்கடவுள், விவேகானந்தர்போன்றும் பொருத்தமாக வேடமணிந்து காட்சியளித்தனர். வீதியில் இருமருங்கும் ஊர்வலத்தைக் காணவந்தவர்கள், நீர்மோர், பானகம், மிட்டாய், பூ முதலியன வழங்கி, பூர்ண கும்ப மரியாதையும் காட்டினர். பிறகு விண்ணதிர கோஷங்களைச் சொல்லி மகாநாட்டில் இரவு கலந்துகொண்டனர். மகாநாட்டில் ஒவ்வொருவரும் இப்போது நாட்டில் உள்ள முஸ்லீம்,

கிறிஸ்துமதப் பிரசாரமும் அரசியல்வாதிகளின் எதிர்ப்புப் பிரசாரமும் எவ்வாறு வளருகின்றன, அவற்றை எவ்வாறு முறியடிப்பது என்பதைப் பற்றிப் பேசியது எனக்கே பல உண்மைகளைப் புலப்படுத்தின.

அண்ணன் : தம்பி! மூன்று நாட்களும் மகாநாட்டில் கலந்துகொண்டாயல்லவா? இப்போது இந்த மகாநாடு கூட்டப்பட்டது பற்றி உன் கருத்தென்ன?

தம்பி : அண்ணா! வெள்ளம்போல பெருகி வருகிற முஸ்லிம், கிறிஸ்தவ மதத்தினரை அரசு நிச்சயம் தடைசெய்யாது. அவர்களுக்குச் சலுகைதான் காட்டும். அரசியல்வாதிகள் விரும்புவது பதவியும் அதிகாரமுமே. ஆகவே அவர்கள் நிச்சயம் முஸ்லிம் கிறிஸ்தவர்களின் வெறுப்புக்கு ஆளாகக் கூடாது என்று எண்ணுவார்கள். இனி இந்நாட்டில் ஹிந்துக்கள் தலைநிமிர்ந்து நடக்கவேண்டும். குடும்பக் கட்டுப்பாடு சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்கவேண்டும். கோயில் கொடியவர்களின் கூடாரமாக இல்லாது ஹிந்துக்களின் பொறுப்பிலேயே வரவேண்டும். கோயில் சிலை, விக்ரஹம் திருட்டு நடைபெறாது இருக்கவேண்டும். மறுபடியும் ஒரு பாகிஸ்தான் நம் நாட்டில் ஏற்படாது இருக்கவேண்டும். நாஸ்திகத்தை நாட்டைவிட்டே வெளியேற்றிப் பற்றற்ற நல்ல துறவிகளின் தலைமையில் ஹிந்து ஆட்சி நடைபெறவேண்டும். எல்லாரும் தங்களுக்கிடையிலுள்ள கருத்துவேற்றுமைகளை மறந்து ஹிந்துக்கள் எப்போதும் ஒன்றுபடவேண்டும். இந்துக்கள் ஒன்றுபடாவிட்டால் அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாது.முஸ்லிம்களோ கிறிஸ்தவர்களோ மீண்டும் நம் நாட்டைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிவிடுவார்கள். மீண்டும் நம் நாடு அடிமை நாடாகிவிடும். இதற்கு நாம் இடம் தரக்கூடாது. இந்துக்கள் உள்ளத்தில் இத்தகைய நல்லெண்ணம் வளர்ந்து நம் பண்பையும், கலாச்சாரத்தையும் காத்து உலகுக்கு வழங்குவதற்கு முற்படுவார்களாக.

ஆடலூர் கும்பாபிஷேகம்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்; ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று பெரியவர்கள் இறைவன் எழுந்தருளிய சந்நிதிக்கு மிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். இறைவன் அங்கு இங்கு எனாதபடி எங்கும் நிறைந்திருக்கிறான். இருப்பினும் ஆரம்ப நிலையில் உள்ள பக்தன் கோயிலுக்குச் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை விக்ரகத்தின் மூலம் வணங்கி மனத்தெளிவடைகிறான். அதுமட்டுமன்று. சான்றோர்கள் கோயிலில் ஆழ்ந்து எண்ணுகிற அருள் எண்ணங்கள் மன நிம்மதியில்லாதும், அசாந்தியுற்றும் கோயிலுக்குப் போகிறவர்களுக்குச் சஞ்சலம் நீக்கும் சாந்தி நிலையங்களாக இருக்கின்றன. கல்வி ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் இன்னும் பல வியாபார ஸ்தலங்கள் முதல் வியாதியைக் குணமாக்கும் மருத்துவமனை வரை ஸ்டிரைக்கினாலோ, இயங்காது மூடிவிட்டாலோ மனிதன் வேறு ஏற்பாடு தனக்குத்தானே செய்து கொள்ளலாம். கோயிலில் வழிபாடு இன்றி, செல்லும் பக்தர்களின்றிக் கோயில் மூடவேண்டிய நிலை ஏற்படுவது இல்லை. உடல் சம்பந்தமான பிரச்னைகளைத் தீர்த்து வைக்கவும் இக லோகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கலை நீக்கவும் மேலே சொன்ன ஸ்தாபனங்கள் செயல்படுகின்றன. ஆனால் கோயில் மனிதனுடைய மனப்பிணியைப் போக்கவும், சோர்ந்து, நலிந்து போனபோது தெம்பூட்டி அவனுடைய நிஜ சொரூபத்தை ஞாபகம் ஊட்டவும் செயல்படும் அருள் நிலையமாகும். கோயிலுக்குப் போகிறவன் ஏதோ போனோம் வந்தோம் என்று வெறும் யந்திரம் போல் இல்லாது கோயிலுக்குள் நுழையும் முன்பே தான் கோயிலினுள் சென்று இறையருளைப் பெற்றுத்தான் திரும்ப வேண்டும் என்கிற உத்வேகத்தோடு செல்ல வேண்டும். திருப்பதியில் வெங்கடாசலபதியைத் தரிசிக்கப் போகிற கூட்டம்; தமிழகத்தில் பழனிமலையில் முருகனைவணங்கப்போகிற திருக்கூட்டம்; கேரளாவில் சபரிமலை சாஸ்தா ஐயப்ப சுவாமியை வழிபாடு பண்ணப்போகிற கூட்டம்; இவ்வாறு மூன்று மாநிலங்களிலும் மூன்று தெய்வங்களின் கோயிலுக்குப் போகிற கூட்டம் வேறு ஊர்களில், நம் ஊர்களில் அதே பெயரும் வடிவமும் கொண்ட கோயில்கள் இருந்தால் போகிறார்களா? அந்த அளவுக்கு அருளும் பொருளும் ஆங்காங்கே வராததற்குக் காரணம் என்ன? மேலே சொன்னபடி அந்த மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்த மூர்த்தியின்

தபஸின் வலிமையைப் பொறுத்தே ஓர் இடத்தில் அருள் சக்தி உண்டாகிறது. இக் காலத்தில் அத்தகைய மூர்த்திகள், சித்தர் களுக்கு எங்கே போவது? நல்ல தரமான துறவிகளைக் கொண்டு மூர்த்திப் பிரதிஷ்டை செய்வது கோயில் சீரும் சிறப்பும் பெற பெரி தும் உதவும். அதுமட்டும் போதாது. கோயிலில் அர்ச்சகராக நியமிக்கப்பட்டவர், சிறந்த சாத கராயிருந்தால் கல்லால் செய்த விக்ரஹத்தில் கடவுள் சாந்நித்தியத்தை அவ்விக்ரஹத்தின் மூலம் பெறும்படி செய்யமுடியும். தக்ஷிணே சுவரக் காளிகோயிலில் பவதாரணி என்ற காளிகா தேவியைப் பிரதிஷ்டை செய்தவர் ராமகிருஷ்ண பரமஹம்சதேவரின் மூத்த சகோ தரர் ராம்குமார் ஆவார். அவர் ஒரு சாதாரண பிராமணர். புரோகிதம் தெரிந்தவர். அவர் பிரதிஷ்டை செய்த கல்விக்ரஹத்தில் அம்பாள் எழுந்தருளி ராமகிருஷ்ண பரமஹம்சரோடு பேசி, விளையாடி அவருக்கு ஞானக் காட்சியைக் கொடுத்தாளென்றால் அது ராமகிருஷ்ண பரம ஹம்சரின் தீவிரமான இடைவிடாத, உறுதி யான அருள்தாகம். அவ்விக்கிரஹத்திற்கு அருள் சக்தி பக்தியினால் விளைந்ததே தவிர ராம்குமாரைச் சார்ந்ததன்று.

இப்போது ஆங்காங்குக் கோயில் கும்பாபி ஷேகங்கள் நடந்து வருவதைக் காணுகிறோம். அந்தக் கும்பாபிஷேகங்கள் ஞான காண் டத்தை ஒட்டியதாக இருக்கவேண்டும்.

அண்மையில் திண்டுக்கல் என்ற ஊருக்கு அருகில் மலையில் உள்ள ஆடலூரில் நிகழ்ந்த கும்பாபிஷேகம் இதற்குச் சரியான சான்றாகும். அவ்வூர் மக்கள் மிகச் சிரத்தையோடு 2-2-84 அன்று இரவில் உறங்காது கோவிலில் நடைபெற்ற பிரதிஷ்டை விழாவைக் காணக் கூடியிருந்தனர். 'நள்ளிருளில் நட்டம் பயின்றா டும் நாதனே' என்று சிவனாரைப் பற்றிச் சிவ புராணம் பாடுகிறது. ஆனால் அவருடைய அருமை மைந்தர் விநாயகப் பெருமானுக்கு அந்த நள்ளிரவில் பிரதிஷ்டைசெய்யப்பட்டது. பிரதிஷ்டை செய்வதற்கு முன்பு தியானமும், ஜபமும் செய்து பின்னர் சுபவேளையில் இரவு 12 மணியிலிருந்து 1 மணிக்குள் விநாய கருக்கும் ராமபிரானுக்கும் மூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதன்பின் ஐதிகமாகக் குருக் களைக் கொண்டு என்னென்ன கிரியைகள் செய்யவேண்டுமோ அனைத்தையும் முறை யாகக் குறிப்பிட்ட நேரத்தில் சிரத்தையோடு செய்தது பாராட்டப்பட வேண்டியதொன்றா கும். மறுநாள் கும்ப லக்கினத்தில் காலை 9 மணியிலிருந்து 10 மணிக்குள் மஹா கும்பாபி ஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. துறவி களின் தலைமையில் மூர்த்திப் பிரதிஷ்டை, மஹா கும்பாபிஷேகம் முதலியன நடந்தேறிய காட்சிகளைக் காண அவ்வூர் மக்கள் அனைவரும் திரண்டுவந்து கண்டும், ஆடலூர் அண்ணலைத் தரிசித்தும் அருள் பெற்றனர். காலை 10 மணியி லிருந்து பகல் 12 மணிவரையில் கும்பாபிஷே கம் நடைபெற்றதன் தாத்பர்யம், அவ்வூர் மக்கள் இனி அக்கோயிலைப் பயன்படுத்த வேண்டிய முறை, வழிபாட்டின் தத்துவம், மன தைத் திருத்தியமைக்க வழிமுறைகள் முதலி யன அக்கூட்டத்தில் கூடியிருந்த நூற்றுக் கணக்கான அக்கிராம வாசிகளுக்குச் சொல்லப் பட்டது. பின்பு நாமஜபம், தியானம் முறை கள் பயிற்றுவிக்கப் பட்டன. ஒவ்வொருவரும் நாமஜபம் செய்து கொண்டே கோவிலில் கொடுத்த வில்வ இலையைப் பக்தி சிரத்தை யோடு ஹோமாக்னியில் போட்டுத் தங்கள் சங்கல்பத்தை நிறைவேற்ற உறுதி எடுத்துக் கொண்டனர். அதன் பிறகு பொதுத் தொண்டே தன் உயிர் மூச்செ்ன எண்ணி அக்கோயிலைக் கட்டிப் பலவகையிலும் மிக வும் உதவிய பெரியவர் ஒருவருக்குச் சிறப் பும் நடந்தது. மலையின் மீது பிரமாண்டமாகக் கோயில். அதுவும் கலையழகுமிக்க சிலை வடி வங்கள் கொண்ட கோயிலை அவ்வூரைச் சார்ந்த மக்கள் அனைவரும் சேர்ந்தே கட்டி னார்கள் என்றால் அது அவர்களுடைய ஒற் றுமைக்குச் சான்றாகிறது. அக்கோயிலைக் கட் டிய விளம்பரத்தை விரும்பாத சான்றோர் ஒரு நாள் தாம் கட்டிய கோயிலைப் பார்த்துக் கொண்டு இருந்தபொழுது முன்பின் தெரியாத முஸ்லீம் அன்பர் ஒருவர் வந்து அக்கோயிலின் சிறப்பினை எல்லாம் கேட்டறிந்த பின்னர், ராமபிரானின் பக்தியில் தன்னைமறந்து அந்தப் பெரியவரிடம் பெருந்தொகை தருவதாகவும் தற்சமயம் ரூ. 10,000 தந்ததாகவும் விளம்பரம் எதுவும் செய்ய வேண்டாம் என்றும், தன்

பெயரைச் சொல்ல விரும்பவில்லையென்றும் ராமன் அருளாலே தான் அங்கு வந்ததாகவும் சொன்ன நிகழ்ச்சி மெய்சிலிர்க்க வைத்தது. ராமபிரான் கருணை வள்ளல். ஜாதி, மத, பேத மில்லாத அனைவரையும் அணைத்து அன்பைப் பொழியும் வள்ளல். ஆகவே அவருடைய சந்நிதிக்கு முஸ்லீம் அன்பரை வரவழைத்து அவருக்கும் அருள்பாலித்துள்ளார்.

அரசியல் வாதிகளுக்கும் ஆன்மிகத்திற்கும் வெகுதூரம் என்று இப்போது பேசப்படுகிற நேரத்தில் ஆடலூர் கும்பாபிஷேகத்திற்குப் பெரும் துணையும் உதவியுமாக இருந்தவர்கள் ஆங்காங்கே இருந்த அவ்வூர் அரசியல் தலைவர்கள்ஆவர். கட்சி வேறுபட்டாலும் நாங்கள் எல்லாரும் ஹிந்துக்கள் என்பதை அவர்கள் செயலில்காட்டியதோடல்லாது அந்த மலைவாழ் அரசியல் அன்பர்கள் கொள்கையளவில் அரசியல்வாதிகளே தவிர உண்மையில் இராமனுடைய கோயில் திருப்பணிக்கு மிகவும் உதவியவர்கள் அவர்களேயாவர்.

கோயில் கட்டுவதும், கும்பாபிஷேகம் செய்வதும் நல்லதுதான். ஏற்கனவே உள்ள கோயில்களில் அருளை வளர்ப்பது மிகவும் அவசியமான தொன்றாகும். ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கோயில்களைப் புதுப்பித்து ஆங்கு வழிபாடு சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். காலையிலும் மாலையிலும் பக்தி சிரத்தையுடன்கோயிலுக்குச்செல்லுகின்றகூட்டம் பெருகிக்கொண்டே வரவேண்டும். ஐயப்பன் கோவிலுக்குச் செல்கின்றவர்கள் அனைவரையும் ஐயப்பன் மயமாகப் பாவித்துப் பழகுகின்றனர். அப்பாவனை போற்றத்தக்கதாகும். ஆலய வழிபாட்டுக்குச் செல்பவர்கள் வழிபாட்டுக்கு வருபவர்கள் எல்லாரையும் கடவுள் மயமாகப் பார்க்கும் பாவனையை வளர்த்து வரவேண்டும். வழிபாடு முடிகின்ற வரையிலும் அப்பாவனையில் ஊறி இருந்து பழகுவது மக்களிடையே நல்ல மனப்பான்மையை வளர்ப்பதற்குத் துணைபுரியும். ஆலய வழிபாட்டின் மூலம் மக்களுடைய உள்ளம் தெய்விகத் தன்மையிலும், ஞானத் தெளிவிலும் வளர்ந்து வருவதாகுக.

செய்திகள்

கோயம்பவை:

18—3—84 ஞாயிற்றுக்கிழமையன்று கோவை ஜில்லா, சித்திரச்சாவடியில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் ஒருநாள் அந்தர் யோகம் நடாத்துவார்கள்.

18—3—84 ஞாயிற்றுக்கிழமையன்று சேலம் ஜில்லா, மேச்சேரியில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் ஒருநாள் அந்தர்யோகம் நடாத்துவார்கள்.

30—3—84 வெள்ளிக்கிழமையன்று வட ஆற்காடு ஜில்லா, ஆம்பூர் சுவாமி விவேகானந்தர் வித்யாலயா ஆண்டு விழாவுக்கு ஸ்ரீமத் துருவானந்த சுவாமிகள் தலைமை தாங்கிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

திருநெல்வேலிஜில்லாசேரன்மகாதேவிபாரத்வாஜ ஆச்ரமத்தை வ.வே.சு. ஐயர் 1923ல் ஆரம்பித்தார். 2—4—84 அன்று பாரத்வாஜ ஆச்ரமத்தில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமையில் ஸ்தாபகர்தினவிழாக் கொண்டாடப்பெறும்.

2—4—84 திங்கட்கிழமையன்று வட ஆற்காடு ஜில்லா, வேலூர் மெயின் பஜாரிலுள்ள ஸ்ரீதோபா சுவாமிகளின் குருபூஜையில் ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் கலந்துகொண்டு அன்றுமாலை சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

4—4—84 புதன் கிழமையன்று திருநெல்வேலி ஜில்லா திசையன்விளை ராமகிருஷ்ண நடுநிலைப் பள்ளியில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் காலை 9 மணியிலிருந்து 10 மணிவரை அந்தர்யோக முறையில் நிகழ்ச்சி நடாத்துவார்கள்; காலை 10 மணியிலிருந்து 12மணி வரையில் ராமகிருஷ்ண நடுநிலைப்பள்ளியின் ஆண்டுவிழா நிகழ்ச்சியில் கலந்துகொள்வார்கள்.

4—4—84 புதன் கிழமையன்று கன்யாகுமரி ஜில்லா, கூட்டாலுமுடு ஹிந்து சமய மகாநாட்டில் கலந்துகொண்டு ஸ்ரீமத் துருவானந்த சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார்கள்.

10—4—84 செவ்வாய்க்கிழமையன்று ஸ்ரீ ராம நவமியாகும்; அன்று விவேகானந்த வித்யாவனக் குருகுல மாணவர்கள் பகல் பன்னிரண்டு மணி நேரம் அகண்ட நாம பஜனையும், மாலை 6-30 மணியிலிருந்து 7-30 மணி வரையிலும் ஐக்கிய வணக்கமும் செய்வார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

திருவாசகம்	பிரசார விலை ரூ.	23-00
ஸ்ரீமத் பகவத்கீதை 15-ம் பதிப்பு	,, ...	21-00
மஹாபாரதம்	,, ...	8-00
இராமாயணம்	,, ...	5-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	6-50
தினசரி தியானம்	,, ...	4-50
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
ஞானயோக விளக்கம்	..	8-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
விவேகானந்த விவரணம்	...	4-00
சகோதரி நிவேதிதை	...	3-75
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-50
ஸ்ரீ சாரதாதேவியார் சரிதம்	...	3-00
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
பஜனைப்பாடல்கள்	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம் ஷை	...	3-00
சின்மயானந்த குரு ஷை	...	3-00
ஆனந்தமானபரம் ஷை	...	3-00
சுகவாரி ஷை	...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை	...	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை	...	2-50
மலைவளர் காதலி ஷை	...	1-50
பரசிவ வணக்கம் ஷை	...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
அறம் வளர்த்த நம்பி	...	2-50
சந்நியாசி	...	2-50
ஹரிச்சந்திரன் (நாடகம்)	...	2-00
தவப்புதல்வர்கள் ஷை	...	2-00
பாதுகாபட்டாபிஷேகம் ஷை	...	1-75
விரதவீரர் பீஷ்மர் ஷை	...	2-50
விபீஷணன் சரணாகதி ஷை	...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
மாணிக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	..,	1-25
*ஆலய வழிபாடு	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	.	1-00

இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி (நாடகம்)	...	1-00
தானவீரன் கர்ணன் (நாடகம்)	...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	...	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	...	1-00
தபோபலன் (நாடகம்)	...	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவமதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*ஆத்ம சக்தி	...	1-00
*சக்தி தத்துவம்	...	0-90
*சூரியநாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொருபம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*கணபதி	...	0-60
*முருகக்கடவுள்	...	0-50
விஷ்ணு தத்துவம்	...	0-50
கர்மகாண்டம் எது? ஞானகாண்டம் எது?		0-50
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து (பௌண்ட் செட்)	...	10-00
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-30
கந்தர் அநுபூதி	...	0 25
The Bhagavad Gita (11th Imp.)	...	24-00
Sri Lalithambiha Sahasranama Stotram		15-00
The Indian National Education	...	10-00
Tirukkural (with plastic cover)	...	8-00
Ramakrishna lives Vedanda	...	8-00
Mahaveer Sri Hanuman	...	7-75
The Bhagavad Gita (Small Size)	...	6-00
Man Making Message	...	7-00
Ramayana (with plastic cover)	...	7-00
Mahabharata ,,	...	6-00
Daily Divine Digest (DELUXE)	...	6-00
Daily Divine Digest (Ordinary)	...	4-00
Sri Krishna-The Manifest Divinity ,,	...	6-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
*Introducing the Gita	...	2-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25
*The student	...	1-25
The Teacher	...	1-00
The School	...	1-00

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்

மேலரதவீதி, ராமேஸ்வரம்-623 526

ஸ்ரீ ராம நவமியன்று ஆண்டுவிழா

10—4—84 செவ்வாய்க்கிழமை

ராமேஸ்வரம் க்ஷேத்திரத்திற்கு யாத்திரை போகும் நம் அன்பர்களின் வசதிக்காகவென்று திருவருள் சகாயத்தால் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் தேதி ஸ்ரீ ராமநவமியன்று இந்த ஆச்ரமம் துவங்கப்பட்டது. அன்றுமுதல் இது முறையாக நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் தேதி செவ்வாய்க்கிழமை ஸ்ரீ ராமநவமியன்று இந்த ஆச்ரமத்தின் ஆண்டுவிழா கொண்டாடப்பெறும்.

நிகழ்ச்சி முறை

காலை

மணிமுதல்	மணிவரை	
4-30		திருப்பள்ளி எழுச்சி
6-00	8-00	ஆலய வழிபாடு
8-00		சிற்றுண்டி
10-00	11-00	பஜனை
11-00	12-00	ராமநாம சங்கீர்த்தனம், நைவேத்தியம், தீபாராதனை
		நண்பகல்
12-15		மகேஸ்வர பூஜை
		மாலை
3-00	4-00	லக்ஷார்ச்சனை
4-00	5-00	ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் தலைமையில் தக்க பேச்சாளர்களைக் கொண்டு பேச்சு.
6-00	7-30	மாணவர்களைக்கொண்டு கலா நிகழ்ச்சிகள்.

விரும்புகிற அன்பர்கள் இதில்வந்து கலந்துகொண்டு திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

இங்ஙனம்
சித்பவானந்த

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.